
நெருப்பைத்
தீண்டிய
தென்றல்
எஸ்.உஷாராணி

# நெருப்பைத் தீண்டிய தென்றல்

1

இரயில் தட... தட...வென ஓடியது. அவள் மனது போல. முதல் வகுப்பில் ஏறி இருந்தாள். அதில் அவள் மட்டும்தான் இருந்தாள். அவளுக்கு நல்ல வசதியாகப் போயிற்று. யாருடைய தொந்தரவும் இருக்காது. சிறிது தூரம் சென்றதும் என்று... கையில் இருந்த பாட்டிலைப் பார்த்தாள். 'முடிந்தது. எல்லாம் இன்றோடு, இனி நிம்மதியாகப் போய்ச் சேரலாம்.

இனி யாருக்கும் என்னால் தொந்தரவு இருக்காது.' அவள் வாழ்க்கை இன்னும் சில மணி நேரங்களில் முடியப் போகிறது. மனசும், உடம்பும் மரத்துப்போயின.

சாகிற வயதா... அவளுக்கு எல்லோரும் சேர்ந்து இந்த முடிவு எடுக்கும்படி தள்ளி விட்டார்கள்.

'இனி நான் எதற்காக, யாருக்காக இருக்க வேண்டும். யார் நான் இல்லையே... என்று தேடப் போறாங்க. அம்மா, அப்பா இருந்தாலாவது பரவாயில்லை. தன் மகள் ஏதோ... தெரியாமல் தப்பு பண்ணி விட்டாள். மன்னித்து ஏற்றுக் கொள்ளலாம் என்று நினைக்க,' அவள் செய்தது தெரியாமல் செய்த தப்பா...? அவளை மன்னிக்க அவர்கள் இடத்தில் யார் இருந்தாலும் இப்படித் தான் நடத்துவார்கள் அவளை.

நினைக்க... நினைக்க மனம் கொதித்தது அவளுக்கு. 'துரோகி... நம்பிக்கைத் துரோகி.' மீண்டும் கண்ணீர் வழிந்தது. இனி அவனைப் பற்றி நினைக்கக் கூடாது என்று நினைத்தாலும் மனம் பள்ளத்தைத் தேடி ஓடும் நீர் போல், அவள் மனது அவனையே... நினைத்தது.

அவள் முகம் வேதனையிலும், வெறுப்பிலும் கன்றிச் சிவந்தது. அவள் தாயையும், தந்தையும் ஒரு முறை நினைத்தாள். 'நான் செய்த தப்புக்கு, எனக்கு இந்த தண்டனை தான் சரி. என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளுங்கள். நான் உங்களோடு வந்து விடுகிறேன்' என்று மனதில் வேண்டினாள்.

தண்ணீர் பாட்டிலைத் திறந்து மாத்திரைகளைக் கையில் கொட்டினாள். வாயில் தண்ணீர் ஊற்றி அத்தனையும் போட்டு விழுங்கினாள். எங்கே ஒவ்வொன்றாய் போட்டால் கூட மனம் மாறி விடுமோ... என்ற பயத்தில் அத்தனையும் கண்களை மூடிக் கொண்டு போட்டுக் கொண்டாள்.



தண்ணீரை மடக்... மடக்...கென்று குடித்தாள். நெஞ்சே நிறைந்தது போல் இருந்தது. அப்படியே கண் மூடி இருக்கையில் சாய்ந்து கொண்டாள்.

சிறிது நேரத்தில் ஒரு பெரியவர் வந்து அவளுக்கு எதிர் சீட்டில் உட்கார்ந்தார். அவளுக்குத் திக்கென்றது. 'தன்னைக் கண்டு பிடித்து விடுவாரோ...' என்று பயந்தாள். அவரைப் பார்க்காதது போல் கண்களை மூடிக் கொண்டாள்.

அவர் அவளையே... பார்த்துக் கொண்டிருந்தார். அவள் முகமாற்றத்தையும், பதட்டத்தையும் கவனித்தார். 'ஏன் இந்தப் பெண் இப்படித் தவிக்கிறாள்?' என்று நினைத்து, ''உன் பெயர் என்னம்மா?'' என்றார்.

அவள் கண் திறந்து சொல்லாமல் இருப்பது நாகரீகம் இல்லை என்று, உண்மைப் பெயரை எப்படிச் சொல்வது என்று ''ஹே...மா...'' என்று தடுமாறிச் சொன்னாள்.

அவர் சிரித்துவிட்டார். அவர் ஏன் சிரிக்கிறார் என்று அவர் முகத்தை ஏறிட்டாள். அவர் சிரிப்பினூடே...'' உன் பெயர்தானேம்மா... அதைச் சொல்வதற்கு ஏன் இத்தனை தயக்கம், தடுமாற்றம்'' புதிதாய் கண்டு பிடித்துச் சொல்வதுபோல் என்று சிரித்தார்.

'ஆள் கெட்டிக்காரர்தான். இவரிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இனி இவரிடம் பேச்சுக் கொடுக்கக் கூடாது' என்று இவள் சன்னல் புறமாக உட்கார்ந்து வெளியே ஆவலாகப் பார்ப்பது போல் பார்க்கத் தொடங்கினாள்.

அவர் மறுபடியும் ''நீ எங்கேம்மா போகணும்'' என்றார்.

அவள் ''ஊ..ட்..டி'' என்றாள். அவள் சொல்வது பொய் போல் அவளை விசித்திரமாகப் பார்த்தார்.

''உன் கூட யாரும் வரவில்லையா...? தனியாகவா... போறே...? அங்கு உனக்கு யார் இருக்கா...? இல்லை சொந்த ஊரே... ஊட்டிதானா...?'' என்றார்.

''இல்லை. என் சொந்த ஊர் சென்னை. நான் என் பிரண்ட் வீட்டுக்குப் போறேன்'' என்று ஒற்றை வரியில் சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவளுக்கு மாத்திரை வேலை செய்ய ஆரம்பித்தது. உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டியது. நெஞ்செல்லாம் ஏதோ பிசைந்தது. மயக்கம் வருவதுபோல் இருந்தது. அவளுக்கு பயம் வந்தது. இன்னும் என்ன செய்யுமோ என்று மாத்திரையைப் போட்டவுடன் உயிர் போய்விடும் என்று நினைத்தாள்.

இப்போ என்னன்னமோ செய்தது. அவள் மயக்கத்திற்குப் போனாள். வாயில் நுரை தள்ளியது. பெரியவர் பயந்து போனார். பாட்டிலில் இருந்த தண்ணீரை எடுத்து முகத்தில் அடித்தார். அப்பொழுதும் அவள் எழுந்திரிக்கவில்லை.

அவர் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து அங்கு இருந்த ஆபீசரிடம் சொன்னார். அவர் விரைந்து வந்து பார்த்தார். ட்ரெயினில் யாராவது டாக்டர் இருக்காங்களா... என்று பார்த்தார். ஒருவர் இருந்தார். அவர் பார்த்துவிட்டு ''ஏதோ பாய்சன் சாப்பிட்டு இருக்கா, உடனடியாக ஹாஸ்பிட்டலில் சேர்க்க வேண்டும்'' என்றார்.

அடுத்த ஸ்டேசனில் வண்டி நின்றதும், அந்த டாக்டரும் பெரியவரும் இறங்கி அவளை ஒரு ஆட்டோ வைத்து ஹாஸ்பிட்டலுக்குக் கொண்டு போனார்கள்.



டாக்டர் அவளுக்கு உடனடியாக சிகிச்சை அளித்து வாந்தி எடுக்க வைத்து, வயிற்றைச் சுத்தம் பண்ணி ஊசி போட்டு ட்ரிப் ஏற்றினார். பெரியவரிடம் ''இனி பயப்பட வேண்டாம்'' என்றார்.

இவளுடன் கூட வந்த டாக்டர் ''சார் உங்க பொண்ணா?'' என்றார்.

## 2

''இல்லை டாக்டர்...''

''என் பேர் முரளி. நீங்கள் முரளி என்றே கூப்பிடுங்கள்'' என்றான்.

''இவ யார் என்றே தெரியாது முரளி. இவளும் நானும் முதல் வகுப்பில் வந்தோம். இவள் நடவடிக்கை எனக்குக் கொஞ்சம் சந்தேகமாக இருந்தது. பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன். சரியான பதில் இல்லை. தடுமாறி பதில் சொன்னாள். எங்கே போறே என்றேன். ஊட்டிக்கு என்றாள்.

''உன் சொந்த ஊர் ஊட்டியா என்றேன். இல்லை என் சொந்த ஊர் சென்னை, நான் என் பிரண்டைப் பார்க்கப் போகிறேன் என்றாள். வேறெதுவும் எனக்குத் தெரியாது. அவள் ஹேண்ட்பேக் இருக்குது. அதைப் பார்ப்போம். ஏதாவது அட்ரஸ்... இல்லை போன் நம்பர் இருக்குதா... என்று. இருந்தால் அவர்களுக்குத் தகவல் கொடுப்போம்.''

ஹேண்ட்பேக்கைத் தேடினார்கள். எந்த அட்ரசும் போன் நம்பரும் இல்லை. டிக்கெட்... கொஞ்சம் பணம், ஒரு போட்டோ மட்டும் இருந்தது.

அதைப் பார்த்த பெரியவர் செல்வராஜ் திகைத்தார். விழிகளில் வியப்பு. 'இ..ந்..தப் போட்டோ இவளிடம் எப்படி...? ஏன்...? இவள் தற்கொலை செய்யத் துணிந்தாள்.' அந்தப் போட்டோவைத் தன் பைக்குள் வைத்துக் கொண்டார்.

செல்வராஜ் முரளியைப் பார்த்து ''எந்த ஊரில் டாக்டராக இருக்கீங்க?''

''நான் ஊட்டியில் டாக்டராக இருக்கேன். நீங்க எந்த ஊர்?'' என்றான்.

''நான் குன்னூர். எங்களுக்கு எஸ்டேட் இருக்குது. அதை நானும், என் மனைவியும் பார்த்துக்கொள்கிறோம். எங்களுக்கு ஒரு மகன். அவன் சென்னையில் பிசினஸ் பண்ணுகிறான். அவன் ஒரு சாப்ட்வேர் இன்ஜினியர். சின்ன வயதா இருந்தாலும் உயர்ந்த இடத்தில் இருக்கான். சாதிக்கணும் என்ற வெறி. அவன் பிசினசுக்கு சென்னை தான் சரிப்பட்டு வரும் என்று அவன் அங்கேயே தங்கிவிட்டான்.''

''பல ஊர்களில் கிளைகள் ஆரம்பித்து இருக்கான். நேரம் காலம் பார்க்காமல் வேலை பார்ப்பான். எங்களையும் அவன் கூடவே வந்து இருக்கச் சொல்றான். எங்களுக்கு இந்த மலை, சுத்தமான காற்று, எஸ்டேட் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அங்கு போகப் பிடிக்கலே... நாங்கள் இங்கேயே இருந்து கொள்கிறோம் என்று சொல்லிவிட்டோம். அங்கு போனால் எஸ்டேட்டை யார்



கவனிப்பது. இங்கேயும் பெரிய அளவில் ஏற்றுமதி செய்கிறேன்'' என்றார்.

முரளி ''இவளை என்ன செய்வது, யாரிடம் ஒப்படைப்பது'' என்றான்.

செல்வராஜ் சிறிது நேரம் சிந்தித்தார். 'இந்த போட்டோ இவளிடம் எப்படி. இவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றால் என்ன' என்று யோசித்து, ''அவள் விழிக்கட்டும், காலையில் அவளிடம் நீ யார், எங்கு போகணும் என்று விசாரிப்போம். அவள் சொன்னால் அவர்களிடம் ஒப்படைப்போம். இல்லையென்றால் நான் கூட்டிச் செல்கிறேன். நாங்கள் அங்கு தனியாகத்தான் இருக்கிறோம். எங்களுக்குத் துணை மாதிரி ஆயிற்று. அவளுக்கும் இருக்க ஓர் இடம் கிடைத்த மாதிரியும் ஆயிற்று. கொஞ்ச நாள் போனதும் அவளிடம் பேசி, அவள் வீட்டில் விட்டு விடலாம்'' என்றார்.

அவனும் ''சரி. இதுதான் நல்ல யோசனை'' என்றான்.

காலையில் கண் விழித்தாள். அவளுக்கு ஒண்ணும் புரியவில்லை. 'நான் இன்னும் சாகலையா...? எங்கு இருக்கோம். நாம் காண்பது கனவா...? இல்லை நிஜமா..?' என்று சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அவள் விழித்ததைப் பார்த்துவிட்டு இருவரும் பக்கத்தில் வந்தனர்.

முரளியைப் பார்த்து முகத்தைச் சுளித்து, பின் பெரியவரைப் பார்த்தாள். அவரைப் பார்த்ததும் அவளுக்கு நினைப்பு வந்தது. 'இவர் என்னுடன் பயணம் செய்தவர் என்னைக் காப்பாற்றி ஹாஸ்பிட்டலில் சேர்த்திருக்கிறார். எதற்கு இவர் என்னைக் காப்பாற்றினார்.'

அவள் விழிகளில் இருந்து கண்ணீர் ஓடியது. அதைப் பார்த்த அவர் ''அழுகாதே மகளே... நாம் வாழப் பிறந் தவர்கள். நம் வாழ்க்கையை நாம் முடித்துக் கொள்ளக் கூடாது. அது இறைவன் கையில். இந்தச் சின்ன வயதில் எதற்கு இந்த முடிவு எடுத்தாய். உன் வீடு எங்கு இருக்குது என்று சொல், நாங்கள் கொண்டு வந்து விடுகிறோம்'' என்றார்.

அவள் பதில் ஏதும் சொல்லவில்லை. கண்களை மூடிக் கொண்டாள்.

''விடுங்கள். பிறகு இதைப்பற்றிப் பேசலாம்'' என்றான் முரளி.

அவள் கண் விழித்ததும் மறுபடியும் பலமுறை கேட்டனர். அவள் ''எனக்கு யாரும் இல்லை. நானே ஒரு அனாதை'' என்றாள்.

அவர்கள் இருவரும் பிரமித்தனர். 'அவளைப் பார்த் தால் இல்லாத வீட்டுப் பெண் போல் இல்லை. நல்ல வசதியான வீட்டுப் பெண் போல், நல்ல ராயல் லுக். பேச் சில் சரளமான ஆங்கிலம். நாகரீகம், மரியாதை என்று எதிலும் ஒரு குறை இல்லை. ஆள் பார்க்கவும் அவ்வளவு அழகாக இருந்தாள்.

ஒருமுறை பார்த்தால் மறுமுறை திரும்பிப் பார்க்கச் சொல்லும் வசீகரம். தலைமுடி நீண்டு கருநாகம் போல் இருந்தது. அழகாக வைத்திருந்தாள்.

அவள் போட்டிருக்கும் சுடிதார் விலை இரண்டாயிரத் துக்குக் குறையாது. காதில் வைரக் கம்மல், கைகளில் தங்க வளையல், கழுத்தில் செயின், இடது கையில் வெளிநாட்டு வாட்ச். இவளைப் பார்த்தால் பெரிய



இடத்துப் பெண் போல் இருந்தாள். ஆனால் தனக்கு யாரும் இல்லை அனாதை என்கிறாள்.' இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

செல்வராஜ் மெதுவாக ''பார் மகளே இப்போ இங் கிருந்து போகச் சொல்லி விட்டார்கள். நாங்களும் எங்க ஊருக்குப் போகணும். நீ உண்மையைச் சொல்'' என்றார் கண்டிப்பாக.

அவள் அதே பிடிவாதத்துடன் ''எனக்கு யாரும் இல்லை. நீங்கள் உங்க ஊருக்குப் போங்க. நான் போய்க் கொள்கிறேன். என்னைக் காப்பாத்தினதுக்கு ரொம்ப நன்றி'' என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

## 3

''நீ எங்கும்மா போவாய். அது தெரிந்தால் நாங்கள் போய்விடுகிறோம்.''

அவள் அதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரி யாமல் விழித்தாள்.

''நா...ன்... எ...ங்...காவது போகிறேன். எனக்காக நீங்கள் உங்கள் நேரத்தை வீணாக்க வேண்டாம்'' என் றாள்.

''நாங்கள் போனதும் நீ மறுபடியும் போய் தற்கொலை பண்ணிக் கொள்ளலாம் என்று நினைக்கிறாயா...?'' என்றார்.

அவள் தலை குனிந்தாள். 'எப்படி இவர் இப்படி மனதில் இருப்பதை அப்படியே சொல்கிறார்.'

அவர் அவள் முன் கையை நீட்டி ''சத்தியம் செய். இனி இந்த மாதிரி எந்தச் சூழ்நிலையிலும் தற்கொலை பண்ணிக்க மாட்டேன் என்று. யாருக்குத்தான் பிரச்சனை இல்லை.

''எல்லோரும் உன் மாதிரி நினைத்துத் தற்கொலை பண்ணிக் கொண்டால் நாடே சுடுகாடு ஆகிவிடும். பிரச்சனைகளை எதிர்கொண்டு நின்று சமாளிப்பதுதான் வாழ்க்கையே. அதை விட்டுட்டு இந்த இளம் வயதில் இந்த முடிவு எடுக்கலாமா...? சத்தியம் செய்'' என்றார்.

இனி மறுத்தால் மரியாதையாக இருக்காது என்று அவர் கைமேல் தன் கையை வைத்தாள்.

''சரி கிளம்பு. என் வீட்டுக்கு வா. நான் குன்னூரில் இருக்கிறேன். நானும் என் மனைவி மட்டுந்தான். நீயும் எங்ககூட வந்து இரு. உனக்கும் ஒரு மாற்றம் இருக்கும். பிறகு பேசிக் கொள்ளலாம்'' என்று அந்தப் பேச்சிற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

முரளியும் அவர் அட்ரசை வாங்கிக் கொண்டு ''நான் வந்து பார்க்கிறேன்'' என்று விடைபெற்றுச் சென்றான்.

செல்வராஜும், ஹேமாவும் குன்னூருக்குச் சென்றனர்.

அவர் மனைவி வசந்தா, தன் கணவர் ஒரு பெண்ணுடன் வந்து நிற்பதைப் பார்த்துத் திகைத்தாள்.

''யாருங்க இந்தப் பெண் பார்க்க இவ்வளவு அழகா இருக்கா. உங்க கூடப் போய் வந்திருக்கா'' என்றார் கேலியாக.



''பரவாயில்லையே உன் வாயில் கூட உண்மை வருகிறதே. அந்தப் பெண் அழகா இருக்கா என்று. ஒரு பெண் அதுவும் மற்றொருப் பெண்ணை அழகாக இருக்கிறாள் என்பது உலக அதிசயம். அதுவும் உன் வாயில் இருந்து வருவது'' என்று அவர் வாரினார்.

அவருக்குக் கோபம் வந்தது. ''யார் இந்தப் பெண்'' என்றார் காட்டமாக.

''சொல்கிறேன். இப்போ இவளை உள்ளே கூட்டிப் போ'' என்றார்.

வசந்தாவுக்கு முதல் பார்வையிலேயே அவளைப் பிடிக்கவில்லை. இவளை எதற்காகக் கூட்டி வந்து இருக்கார். வசந்தாவுக்குக் கணவன் மேல் அவ்வளவு நம்பிக்கையில்லை.

அவளிடம் 'வெடுக்'கென ''உள்ளே போ. என்ன வேடிக்கை'' என விரட்டினார்.

ஹேமா தயங்கி உள்ளே போனாள். 'வந்ததுமே இவங்க ஏன் இப்படி என் மேல் கோபப்படுறாங்க.' எதுவும் புரியாமல் உள்ளே சென்று நின்றாள்.

''நீ இந்த அறையில் இருந்து கொள்'' என்று கீழே இருந்த ஒரு அறையைக் காட்டினார் செல்வராஜ்.

வசந்தாவுக்கு எரிச்சல் வந்தது. ''என்ன இவள் இங்கே நிரந்தரமாகத் தங்கப் போறாளா...?'' என்றார்.

''ஆமாம். அவள் இங்கு தான் தங்கப் போறா. நான் சொல்லித்தான் இவளைக் கூட்டி வந்து இருக்கேன். அதனால் இந்தப் பேச்சை இத்துடன் விட்டுவிடு.''

வசந்தா அதற்கு மேல் பேசவில்லை. இனி பேசினாலும் ஒரு பயனும் இருக்காது. அந்தக் கோபத்தை எல்லாம் அவள் மேல் காண்பித்தார்.

செல்வராஜ் ''அவளுக்கு உடம்பு முடியவில்லை. அதனால் அவள் ரெஸ்ட் எடுக்கட்டும்'' என்றார்.

''இது வேறயா...? அவளுக்கு என்ன கேடு. பார்க்க நல்லா கிழங்காட்டம் தானே இருக்கா'' என்றார்.

ஹேமாவுக்கு உடல் சோர்வு, மனச் சோர்வு, வசந்தா பேசியது எல்லாம் தாங்க முடியாமல் உள்ளே உதறல் எடுத்தது. மயக்கம் வரும்போல் இருந்தது. அதைப் பார்த்த செல்வராஜ் ''நீ போய் படும்மா'' என்றார்.

''என்ன ரொம்பத்தான் தாங்குறீங்க. எனக்கு முடியவில்லை என்றால் கூட இப்படித் தாங்க மாட்டீங்க'' என்று முகத்தை நொடித்தார்.

ஹேமா மலங்க... மலங்க விழித்தாள். அதைப் பார்த்த அவர், ''அவள் அப்படித்தாம்மா. நீ தைரியமாக இரு'' என்றார்.

ஹேமா மாத்திரையைப் போட்டுக் கொண்டு படுத்து விட்டாள். விடிந்து வெகு நேரம் சென்றுதான் எழுந்தாள். அவள் வெளியே வரவே பயந்தாள். அந்த அம்மாள் என்ன பேசுவாங்களோ என்று. இப்படியே உள்ளே பயந்து கொண்டு எவ்வளவு நேரம் இருப்பது.

மெதுவாக வெளியே வந்தாள். வந்தவளை ''வாம்மா மகாராணி உனக்கு இப்பத்தான் விடிஞ்சுதா...? உனக்கும் சேர்த்து வேலை பார்க்க வேண்டியிருக்கிறது. இதெல்லாம் என் தலையெழுத்து. வா வந்து காபியைக் குடிச்சுட்டுக் குளித்துவிட்டு வந்து வேலையைப் பார்'' என்றார்.

என்ன வேலையைப் பார்ப்பது என்று நினைத்தாள். அவர் சொன்னது போல் குளித்துவிட்டு வந்தாள். வசந்தா



அவருடைய பழைய சேலையைக் கொடுத்தார். அதை வாங்கிக் கட்டிக் கொண்டாள். அதைக் கட்டும்போது அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. ''பாவி எல்லாம் உன்னால் தான் நீ நல்லாயிருப்பியா...?'' என்று சபித்தாள்.

''என்ன மசமசன்னு நிக்கிறே... போய் அடுப்படியில் வேலையைப் பார்'' என்று உத்தரவு இட்டார்.

அவள் எதுவும் பேசாமல் உள்ளே போனாள். ஒரு அம்மா இட்லி ஊற்றிவிட்டு, ஆட்டுக் கல்லில் சட்னி அரைத்தார்.

''ஏம்மா மிக்ஸி இருக்கும்போது ஏன் ஆட்டுக் கல்லில் அரைக்கிறீங்க'' என்றாள்.

''இங்கு இவர்களுக்கு மிக்ஸியில் அரைத்தால் பிடிக்காது. அதனால் தான். நீ புதுசா வேலைக்குச் சேர்ந்திருக்கயா...?'' என்றாள்.

## 4

அவள் என்ன சொல்வாள். ''ஆமாம்'' என்று தலையாட்டினாள்.

''நீ அந்த இட்லியை எடுத்துவிட்டு, மீண்டும் ஊற்றி வை'' என்றாள்.

அவள் இதுவரை அடுப்படிக்குச் சென்றதில்லை. அவர்கள் வீட்டில் விரல் சொடுக்கினால் வேலையாள் ஓடி வருவான்.

அவள் துணியில்லாமல் மூடியைத் திறக்க கையை வைத்து விட்டாள். கை சுட்டு விட்டது. ''அம்மா...'' என்று கையை உதறினாள். கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

''என்னம்மா இது.. வீட்டு வேலைக்கு வந்திருக்கே.. இட்லி எடுக்கக் கூடத் தெரியவில்லை. துணி பிடித்து எடுக்க வேண்டாம். கை கொப்பளித்து விட்டதே...?'' என்று பார்த்தாள்.

விரலில் பெரிதாகக் கொப்பளித்து இருந்தது.

''சரி இரு. நான் எப்படிச் செய்கிறேன் என்று இரண்டு நாள் பாரு. பிறகு நீ வேலை செய்யலாம். இதை எல்லாம் எடுத்துக் கொண்டு சாப்பாட்டு மேசை மேல் வை'' என்று சொன்னாள்.

ஹேமாவும் அது மாதிரியே எடுத்து வைத்தாள். அவர் பார்த்துவிட்டு ''நீ ஏம்மா இதெல்லாம் செய்றே. நீ பேசாமல் வந்து உட்கார்'' என்று சொன்னார்.

''இல்லை அங்கிள் எனக்கும் பொழுது போகணும் இல்லே, அதான்'' என்றாள்.

டாக்டர் முரளி அப்போது உள்ளே வந்தான். அவனைப் பார்த்து பெரியவர் ''வாப்பா முரளி, உன்னை இவ்வளவு சீக்கிரம் நான் எதிர்பார்க்கவில்லை'' என்று வரவேற்றார்.

அவனும் ''நான் பக்கத்தில் ஒரு வேலையாக வந்தேன். அப்படியே உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று தான் வந்தேன்'' என்றான்.

ஹேமா அவனைப் பார்த்து ''வாங்க'' என்றாள் மெதுவாக.



''எப்படி இருக்கே ஹேமா, மாத்திரை எல்லாம் ஒழுங்காகச் சாப்பிடுகிறாயா...?'' என்றான்.

''ம்... சாப்பிடுகிறேன்'' என்று தண்ணீர் கொடுத்தாள்.

அவள் விரலில் இருந்த கொப்புளங்களைப் பார்த்து விட்டு ''என்ன இது. இவ்வளவு பெரிசா இருக்குது. சுட்டுக் கொண்டாயா...?'' என்றான்.

''ஆமாம். லேசாகச் சுட்டு விட்டது'' என்று கையை இழுத்துக் கொண்டாள்.

''லேசாகச் சுட்டதா இவ்வளவு பெரிசாக இருக்குது...? எப்படி ஆனது இப்படி ஹேமா'' என்றார் பெரியவர்.

''இட்லி எடுத்தேன். துணி பிடித்து எடுக்கணுமாம். அது எனக்குத் தெரியலே. சும்மா தொட்டு விட்டேன். அதான் சுட்டு விட்டது.''

''எதுக்கு நீ இந்த வேலையெல்லாம் செய்யறே...? அதுக்குத்தான் ஆள் இருக்கே...?''

அவள் மௌனமாகத் தலை குனிந்தாள். அது அவருக்குப் புரிந்தது.

முரளியும் காலை டிபன் சாப்பிட்டான். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, விரலுக்கு மருந்து கொடுத்து விட்டு, ''மீண்டும் வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

நாட்கள் உருண்டோடின. ஹேமாவுக்கு எல்லாம் புரிந்தது. தானே வீட்டு வேலை செய்ய ஆரம்பித்து விட்டாள். தோட்டத்தையும் அழகு படுத்தினாள். நிறைய பூச்செடிகளை வைத்து உண்டாக்கினாள்.

தோட்டத்தில் உட்கார்ந்து பேச நாற்காலிகள் போடப் பட்டு இருந்தன. அதைச் சுற்றிலும் ஜாதி, மல்லி, முல்லை என்று நான்கு பக்கமும் நட்டு வைத்து, மேலே அழகாகக் கம்பிகளை கட்டி, அந்தக் கொடியை மேலே படர விட்டாள். நாலா பக்கமும் கொடி ஓடி அது உள்ளே உட்கார நிழலாகவும், பார்ப்பவர்களுக்கு வித்தியாசமாக வும், கீழே வெயில் தெரியாமல் அவ்வளவு அற்புதமாக இருந்தது.

பூக்கள் பூத்துக் குலுங்கின. மாலையில் அத்தனை பூக்களின் வாசமும் கலந்து அங்கு உட்கார்ந்து இருப்ப வர்களுக்கு ஒருவித மயக்கத்தையே தந்தது. வந்தவர்கள் எல்லாம் அதைப் பார்த்துவிட்டு ஒரே பாராட்டு. அங் கங்கே ஓரத்தில் கண்ணைக் கவரும் விதமாக கலர் கலரான ரோஜாவும், டேலியாவும், கீழே மெத்தென்ற புல் தரையும், பார்க்கப் பரவசமாக இருந்தது. இந்த இடம் வசந்தாவுக்குக் கூடப் பிடித்துப் போனது.

வீட்டிலும் அப்படியே, ஒவ்வொரு அலங்காரம் செய் வாள் பூக்களினாலேயே. பெரியவருக்கு உதவியாக அவர் தொழிலிலும் கம்ப்யூட்டரில் வேலை செய்தாள். அன்றாடக் கணக்கு வழக்குகளைப் பார்த்தாள். இப்ப டியே நாளும் வாரமும் பரந்தது.

அவள் வந்து ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. வசந்தா மட்டும் அவளைக் குறை சொல்லிக் கொண்டே, திட்டிக் கொண்டேதான் இருந்தார்.

அன்று காலையில் குளித்துவிட்டு, இப்பொழுது குளிர் பழகிவிட்டது. பெரியவருக்கு பூக்களைப் பறித்துக் கொடுத்து விட்டு வந்தாள்.



அவர் பூஜை முடித்து வெளியே வந்து உட்கார்ந்தார். அவருக்கு காபியுடன் வந்தாள். அப்பொழுது காலிங் பெல் அடித்தது. வசந்தா போய் திறந்தார்.

வந்தவனைப் பார்த்து, ''வாடா என் கண்ணே, இப்பத் தான் வழி தெரிந்ததா. இந்த அம்மாவைப் பார்க்க'' என்று மகனை வரவேற்றார்.

அம்மாவைக் கொஞ்சிக்கொண்டே... ''என்னம்மா செய்யட்டும். என் வேலை அப்படி'' என்று அப்பாவிடம் வந்து ''எப்படியப்பா இருக்கீங்க'' என்றான்.

அவனைப் பார்த்த அதிர்ச்சியில் கையில் இருந்த காபி டம்ளரைக் கீழே போட்டுடைத்தாள் ஹேமா. அந்த சத்தம் கேட்டு அவனும் அவளைத் திரும்பிப் பார்த்தான். அவன் கண்களில் வியப்பு. அது ஒரு நிமிடந்தான். பிறகு முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டான்.

அவளுக்குக் கை, காலெல்லாம் உதறியது. 'இவன் எப்படி இங்கே. இந்த அம்மா வேறு மகன் என்கிறார். இவன் இவர்கள் பிள்ளையா...? இது இவன் வீடா...? கடவுளே... இனி யார் முகத்தில் விழிக்கக் கூடாது, யாரைப் பார்க்கக் கூடாது என்று தன் உயிரை விட நினைத்தாளோ... இப்போ அவன் வீட்டில். இனி என்ன செய்வேன் நான். எப்படி எல்லாம் கேவலமாகப் பேசப் போகிறானோ... தெரியவில்லையே.' அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே வசந்தா ''ஏன்டி மூதேவி. காபியை இப்படியா போட்டு உடைப்பே. உனக்குக் கொஞ்ச நஞ்ச திமிர் இல்லே. போ... இதையெல்லாம் துடைத்துவிட்டு, வேற காபி கொண்டு வா. என் பிள்ளை வந்திருக்கான். குளிக்க வெந்நீர் எடுத்து வை.

அவனுக்கு புது மாதிரியான டிபன் தான் பிடிக்கும். அதையெல்லாம் செய்'' என்று விரட்டினார்.

அவள் மனதில் டிபன் மட்டுந்தானா... புது மாதிரியாகப் பிடிக்கும்...

அவள் குனிந்த தலை நிமிரவில்லை. அந்த இடத்தைச் சுத்தம் செய்துவிட்டு, காபி கொண்டு வந்து தந்துவிட்டு, குளிக்க வென்னீர் எடுத்து வைத்துவிட்டு, அவனுக்கு வேற டிபன் செய்யப் போனாள்.

## 5

மனம் போன போக்கில் சிந்தித்துக் கொண்டே இருந்தது. கை வேலை செய்து கொண்டு இருந்தது. 'இனி எப்படி இந்த வீட்டில் இருப்பது வேறு எங்கு செல்வது. முரளியிடம் கேட்டுப் பார்க்கலாமா...? எனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுங்கள் என்று. வேலை பார்த்துக் கொண்டு ஒரு லேடீஸ் ஹாஸ்ட்டலில் தங்கிக் கொள்ளலாம்.'

வசந்தா குரல் கொடுத்தார். ''என்னடி இன்னும் பண்ணிக்கிட்டு இருக்கே. இவ்வளவு நேரமா...? டிபனை எடுத்து வாடி. கொஞ்சமாவது சுறுசுறுப்பு இருக்கணும். சுத்த சோம்பேறிடா. உன் அப்பா இவளை எங்கிருந்தோ பிடித்துக் கொண்டு வந்தாருடா.

''இவளுக்கும், அவருக்கும் என்ன தொடர்போ தெரியவில்லை. இவளை ஒரு வார்த்தை சொல்லக் கூடாது



என்கிறார். சும்மாவா சோறு போட முடியும். வேலைக்காரி எல்லாம் நிறுத்தி விட்டேன். என்ன திட்டு, நேற்றுக்கூட தலையில் இரண்டு கொட்டு வைத்தேன். வாயைத் திறக்கணுமே, அவ்வளவு அழுத்தம், கொழுப்பு'' என்றார்.

நௌதின் அம்மா சொல்வதைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். 'வாடி வந்து சரியாக மாட்டிக் கொண்டாயா...? உன்னை என்ன செய்கிறேன் பார்' என்று மனதில் கறுவினான்.

''அம்மா எனக்கு ரொம்பப் பசிக்குது. நீங்க சொல்லியும் இன்னும் டிபன் கொண்டு வரலை. நான் வெளியே போய் சாப்பிட்டுக்கிறேன்'' என்று கிளம்பினான்.

அம்மா மறுபடியும் ஹேமாவைத் திட்ட ஆரம்பித்தார். அவள் அவசரமாக எடுத்து வந்தாள்.

''டிபனை எடுத்து வை. வைத்துவிட்டு நீ பாட்டுக்குப் போறே... பெரிய இவ மாதிரி. எடுத்து வைடி'' என்றார் அதிகாரமாக.

நௌதின் அவளைக் கீழ்ப்பார்வையால் ஆராய்ந்தான். அவள் எதுவும் பேசாமல் எடுத்து வைத்தாள்.

அவன் அம்மாவிடம் ''என்னம்மா இப்படிச் சுடுது. கை சுட்டுவிட்டது. ஆ... அம்மா எரியுதே'' என்று கையை உதறினான்.

வசந்தாவுக்குக் கோபம் வந்தது. மகன் கையைச் சுட்டுவிட்டதே என்ற ஆத்திரத்தில் அவளை ஓங்கி அறைந்தார்.

ஒரு அறையில் நடுநடுங்கி விட்டாள். கன்னம் தீயாய் எரிந்தது. 'எப்படி அடிவாங்க வைத்து விட்டான். அப்படி

ஒன்றும் சூடு இல்லையே, வேண்டும் என்றே தான் தன்னை இப்படி அடிவாங்க வைத்திருக்கான்.'

''போய் ஃபேனை ஸ்பீடா வை. கரண்டியை எடுத்துக் கிளறி விடு. சாம்பாரை வேற கிண்ணத்தில் மாற்று. சீக்கிரம் ஆறும்'' என்று விரட்டினார்.

அவர் சொன்னதை அத்தனையும் நிமிர்ந்து பார்க்காமல் செய்தாள்.

நௌதின் அதற்குள் ''அம்மா என் அறை ஒரே தூசாக இருக்கு. படுக்கை விரிப்பு மாற்றவில்லை. ஜன்னல் ஸ்கிரீன், தலையணை உறை எதுவும் மாற்றவில்லை. மாற்றச் சொல்லும்மா.''

''போடீ... என் பிள்ளை சொல்வதைக் கேட்டியா...? எல்லாம் ஒழுங்காகச் செய்'' என்றார்.

அவன் அறையை நோக்கி மேலே சென்றாள். அதை அறை என்று சொல்வதைவிட, ஒரு பெரிய காட்டேஜ் என்று சொல்லலாம். ஒரு குடும்பமே தாராளமாகத் தங்கலாம்.

பெரிய ஹால், அதன் நடுநாயகமாக இருக்கும் கோல்டன் கலர் சின்தடிக் லெதர் சோபா செட். ஜன்னல் ஸ்கிரீன் கோல்டன் கலர். நல்ல காற்றோட்டமான ஹால், வெளிச்சம், ஹாலில் இருந்து உள்ளே சென்றால் டைனிங் ஹால், அதன் வலதுபுறமாக பால்கனி, இரண்டு பக்கமும் பெரிய அறை, அதன் நடுவில் மரத்தாலான நல்ல டிசைனில் நான்கு பேர் படுக்கக் கூடிய கட்டில் மெத்தை.

அந்த அறையில் எல்லாம் நீலக்கலர். பார்க்கவே மனதுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. அறையில் இருந்து பால்கனிக்கு வாசல் இருந்தது. ஒரு அறை அவன் படிக்கும் அறையாகவும், மற்றொரு அறை கம்ப்யூட்டர் ஒருபுறமும், மறுபுறத்தில் அவன் புக் ஸ்டாண்டும் இருந்தன.



அதைப் பார்த்து மலைத்துப் போய் நின்றாள். இது வரை அவள் இங்கு வந்ததில்லை. இந்த ஊரில் இத்தனை வசதியாகவும், ஆடம்பரமாகவும், 'இவன் ஒருவனுக்கு, அதுவும் அவன் நிரந்தரமாக இங்கு தங்குவதில்லை. எதற்கு இத்தனை பெரிய அறை. பணம் இருந்தால் எதையும் செய்யலாம். அங்கு ஒரு தூசு துரும்புகூட இல்லை. இவன் வேண்டும் என்றே என்னிடம் வேலை வாங்குவதற்குச் சொல்கிறான்' என்று நினைத்துக் கொண்டு படுக்கை கவர் எல்லாம் மாற்றினாள்.

நௌதின் திடுமென உள்ளே வந்தான். ''வாங்க ஹேமா மேடம். பேர் நல்லா இருக்கே. இங்கே யாரை ஏமாற்ற வந்திருக்கீங்க. பேரை மட்டுந்தான் மாத்தினீங்களா...? இல்லை ஆளையே மாத்திட்டீங்களா...?'' என்று 'ஆளை'யில் அழுத்தம் கொடுத்துக் கேட்டான்.

அவள் உள்ளம் பதறித் துடித்தது. பாவி... பாவி... என்று நெஞ்சம் பதறியது. என்ன மாதிரிப் பேசுகிறான். இவனை மாதிரிதானே என்னையும் நினைப்பான்.

''தன்னைப் போல பிறரை நினை. அது மாதிரிதானே நினைப்பீங்க. நேரத்திற்கு ஒரு புத்தியும், வேளைக்கு ஒரு ஆளையும் மாத்துகிற உங்களுக்கு இது மாதிரி தானே புத்தி போகும். நல்ல புத்தி இருந்தா, நல்ல எண்ணம், நல்ல சிந்தனை இருக்கும். அதான் உங்கக்கிட்டே இல்லையே.''

''ஏன் எனக்கு பரந்த மனப்பான்மை இல்லையா...?'' என்று ஸ்டைலாகக் கையை விரித்தான்.

''ஏன் இல்லை. ப...ர...ந்...த மனப்பான்மை. அதான் ஏகத்துக்கும் இருக்கே படுக்கை வரைக்கும்'' என்று குத்தினாள்.

அவளைப் பிடித்துப் படுக்கையில் தள்ளினான். ''என் பரந்த மனப்பான்மையைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே. படுக்கையில் பார்த்திருப்பியே. உனக்கு என்ன குறை வைத்தேன். குறை இருந்தால் சொல், நிவர்த்தி செய்கிறேன். என்னிடம் வந்தவள் எல்லாம் திருப்தி இல்லாமல் சென்றதே... இல்லை. 'எதிலுமே' உன்னை மட்டும் என்னால் திருப்திப் படுத்த முடியாதா...? நான் இப்போதே ரெடி'' என்று அவள் மேல் விழுந்தான்.

அவள் அலறி, பதறித் துடித்து, உருண்டு அடுத்தப் பக்கமாக போய் துள்ளி எழுந்தாள்.

''உங்களுக்கு வெக்கமாயில்லை...? இனியும் என்னைத் தொட உங்க உடம்பில் நல்ல சுத்தமான இரத்தம் தான் ஓடுதா...? இல்லை சாக்கடை ஓடுதா...? ஒரு நல்ல தாய்க்குப் பிறந்திருக்கணும், அதான் இல்லையே...?'' என்று வாய் மூடுமுன் அவளைச் சரமாறியாக அடித்தான்.

''அவளால் தாங்க முடியவில்லை. அப்படியே மூலையில் உட்கார்ந்தாள்.



# 6

''என்னடி வாய் ரொம்ப நீளுது. எப்படி எங்க வீட்டுக்கு வந்தே. இங்கு வந்து எங்கப்பாவை மயக்கி, என்னை எப்படியாவது வளைத்துப் போட்டு விடலாம் என்று நினைத்தாயா...? அது ஒரு நாளும் நடக்காது. உன்னை நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேனா...?''

''நல்ல மானம், ரோசம் உள்ளவங்க என்கிட்டே பேசக் கூடாது.''

''அப்புறம் ஏன் என் வீட்டில் இருக்கிறே...? இப்பவே இந்த வீட்டைவிட்டுக் கிளம்பு. நீ மட்டுந்தான் இங்கு ஓடி வந்தியா... இல்லை யாரோடவாவது ஓடிவந்தியா...? ஏன்னா...? உனக்குத்தான் வீட்டை விட்டு ஓடி வருவது அல்வா சாப்பிடுவது போலத்தானே.''

''ஐயோ... வீட்டை விட்டு ஓடி வந்தேன் என்று எத்தனை தடவைதான் சொல்வீங்க. நான் உங்களை நம்பி ஓடி, வந்ததுக்குத்தான் இப்படி தண்டனையை அனுபவிக்கிறேன்'' என்று அழுதாள்.

'எனக்கு வேண்டும். நன்றாக வேண்டும். நான் எங்கண்ணனை விட்டு, அண்ணியை விட்டு, வீட்டை விட்டு, படி தாண்டி வெளியே வந்தேனே... எனக்கு இந்த தண்டனை அவசியந்தான். கூடப் பிறந்த அண்ணன் அவளுக்கு நல்லது செய்வான் என்று இருக்காமல், நான் வெளியே வந்தேனே... எந்த ஒரு பெண் அப்பா,

அம்மாவை இல்லை அண்ணனை நம்பாமல் வீட்டை விட்டு சில மாதம் பழகியவனை நம்பி வந்ததற்கு எனக்குக் கடவுள் கொடுத்த தண்டனை. மற்றவர்களுக்கு நான் ஒரு உதாரணம். இனி யாரும் என்னைப் பார்த்து இந்தத் தப்பைப் பண்ண மாட்டாங்க.' நினைத்து அழுதாள்.

'கடவுள் எதற்காக என்னைக் காப்பாற்றினார். அதுவும் இவன் வீட்டிலேயே கொண்டு வந்து சேர்க்கணும். போ... போ... என்கிறானே. எங்கே போவது?'

''ஏய்... அழுதது போதும். எழுந்து வேலையைப் பார்'' என்று அதட்டினான்.

அவள் எழுந்து முகத்தைக் கழுவிக் கொண்டு வேலையை முடித்துவிட்டுச் சென்றாள். அவள் செல்வதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

காலையில் சீக்கிரம் எழுந்து தோட்டத்துக்கு ஜாகிங் வந்தான். தோட்டமே மாறி இருந்தது. பாத்தி... பாத்தியாக ஒரே கலர் பூ. மஞ்சள், சிகப்பு, நீலம், வெள்ளை என்று கலர் கலராக இருந்தன. காலையில் பார்க்கவே மனதுக்கு உற்சாகமாக இருந்தது.

நௌதின் ஜாகிங் முடித்துவிட்டு நடந்து பாத்திகளின் வழியே வந்தான். நாற்காலிகள் போடப்பட்டிருந்த இடம் வித்தியாசமாகத் தெரியவும் பக்கத்தில் சென்று பார்த்தான்.

'வாவ்... ஒண்டர்புல் எவ்வளவு அழகாக இருக்குது. இது யாரோட வேலை?' பக்கத்தில் நீர் பாய்ச்சிவிட்டு, ஏதோ கொத்திக் கொண்டிருந்தாள் ஹேமா.



இவன் அவள் பக்கத்தில் போய் நின்றான். சத்தமில்லாமல் ''வினயா'' என்றான்.

அவள் பயந்து போய் சட்டென நிமிர்ந்தாள். ''காலையில் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்குது'' என்று அவள் முகத்தில் பார்வையைப் பதித்துப் பின் கீழே இறக்கினான்.

ஹேமா உடனே புடவையைச் சரி செய்து கொண்டாள். குனிந்து வேலை செய்ததில் சேலை விலகியிருந்தது. வேலையில் அவள் கவனிக்கவில்லை. இவன் திடும்மென முன்னாடி வந்து நிற்பான் என்று யாருக்குத் தெரியும்.

''உனக்குத் தோட்ட வேலைகூடத் தெரியுமா...?'' வினயா.

''தெரியுமோ... தெரியாதோ... சாப்பிடுற சாப்பாட்டிற்கு வேலை பார்த்துத்தானே ஆகணும்.''

''சாப்பிடுற சாப்பாட்டிற்கு வேலை மட்டும் பார்த்தால் போதுமா...? நான் சொல்வதையும் நீ கேட்க வேண்டாமா...?''

அவனை ஒரு வெறுப்புப் பார்வை பார்த்தாள்.

அவன் மனதில் நகத்தில் அழுக்குப் படாமல் எவ்வளவு நாகரீகமாக இருந்தாள். இப்போ எப்படி வேலை பார்க்கிறாள். அவள் அன்று அவ்வளவு கெஞ்சியும், அவள் மேல் அவனுக்கு இரக்கம் வரவில்லை.

நௌதின் அன்றே சென்னைக்குச் சென்று விட்டான். அவன் போனதும் அவளுக்கு அப்பாடா... என்று இருந்தது.

அன்று இரவு அவளுக்குத் தூக்கமே வரவில்லை. படுத்தால் நெஞ்சை அடைப்பது போல் இருந்தது. மூச்சு முட்டியது. ஜன்னலைத் திறந்து விட்டாள்.

வருடக்கணக்கில் பிரிந்திருந்த மனைவியை அணைப் பது போல் காற்று அவளின் மேனியைத் தழுவின. பரவசமாக கண்மூடி நின்றாள். பழைய நினைவுகள் கண் முன்னாடி விஸ்வரூபம் எடுத்தன.

அவனை முதல் நாள் சந்தித்தது நினைவு வந்தது.

இவள் அண்ணன் பாண்டியன் தொழில் தொடர்பா ஹோட்டலில் ஒரு பார்ட்டி வைத்திருந்தான். அதுக்கு இவளும் அண்ணியுடன் சென்றிருந்தாள். அவள் அண்ணி இவளைக் "கீழேயே இரு. நான் எந்த ஃப்ளோரில் பார்ட்டி நடக்குது என்று பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று சென்று விட்டாள்.

இவளுக்குப் பயம் வந்தது. இவ்வளவு நேரம் ஆகி விட்டது. இன்னும் அண்ணி வரவில்லையே என்று உதறல் எடுத்தது. எல்லோரும் அவளையே பார்த்துக் கொண்டு வந்தனர். போயினர். அவளுக்கு ஒரு மாதிரி யாக இருந்தது. அப்பொழுது நௌதின் அவன் பிரண்ட்ஸ் களோட ஒரு கும்பலே வந்தது. அவளைக் கடந்து சென் றனர்.

நௌதின் பார்வையில் வினயா பட்டாள். வெண்ணெ யில் கொஞ்சம் குங்குமப்பூ கலந்த மாதிரி அழகுப் பதுமையாய், அடக்கமாக, ஆனால் முகத்தில் தவிப்பும், கண்கள் அங்கும், இங்கும் அலைப்புறப் பார்த்துக் கொண்டிருந்தாள்.



பின்னாடி இரண்டு பேர் வந்தார்கள். அவர்கள் அவ ளிடம் ''வர்றியா அறைக்குப் போகலாம்'' என்று கூப் பிட்டனர். அவர்கள் குடித்து வேறு இருந்தார்கள்.

அவள் கை, கால் உதற எழுந்து நின்றாள். கண்களில் கண்ணீர் வழிந்தது. அவளிடம் அவர்கள் தாறுமாறாகப் பேசினர்.

நௌதின் அவர்கள் பக்கத்தில் போனான். ''என்ன பிரச்சனை'' என்று அவளிடம் கேட்டான். அவனைப் பார்த்ததும் அவளுக்குத் தைரியம் வந்தது. அவன் தன்னை பாதுகாப்பான் என்ற உணர்வு அவனைப் பார்த்ததுமே மனதில் எழுந்தது. அவள் அவன் பக்கத்தில் சென்று நின்று கொண்டாள்.

''இவர்கள் யார் என்றே தெரியவில்லை. என்னிடம் வந்து வம்பு பண்றாங்க'' என்றாள்.

அவர்களிடம் திரும்பி ஓங்கி இருவரையும் அறை விட்டான். ''மரியாதையாகப் போய் விடுங்கள், இல்லை யென்றால் போலீசைக் கூப்பிடுவேன்'' என்று மிரட்டி னான். அவர்கள் விட்டால் போதும் என்று சென்று விட் டனர்.

அவனிடம் திரும்பி ''நீங்கள் யார், இங்கு அதுவும் இந்த ஹோட்டலுக்கு எதுக்கு வந்தீங்க...?''

அவள் ''இங்கு என் அண்ணன் ஒரு பார்ட்டி வைத் திருக்கிறார். அதுக்காக நானும், என் அண்ணியும் வந் தோம். என் அண்ணி எந்த ஃப்ளோரில் நடக்குது என்று பார்த்துவிட்டு வருகிறேன் என்று சென்றார்கள். ஆனால் இன்னும் வரவில்லை. ரொம்ப நேரம் ஆகிவிட்டது.

''வீட்டிற்குப் போகலாம் என்றால்கூட வந்து தேடுவாங் களே... என்றுதான் உட்கார்ந்து இருக்கிறேன்.''

நௌதின் அவள் அறியாமையைப் புரிந்து கொண்டான். இவளை எப்படியும் ஏமாற்றி விடலாம்.

# 7

''இருங்க ரிசப்ஷனில் போய் விசாரித்துவிட்டு வருகிறேன்'' என்று சென்று விசாரித்து வந்தான். ''அது மாதிரி இங்கு எந்தப் பார்ட்டியும் இல்லையாம். ஹோட்டல் மாறி வந்திட்டீங்களோ...'' என்றான்.

''எனக்குத் தெரியாது அண்ணிதான் சொன்னாங்க.''

''அண்ணியோட போன் நம்பர் சொல்லுங்க'' என்றான். அவள் சொல்லவும் போன் போட்டு அவளிடம் கொடுத்தான்.

''அவள் அண்ணி எங்கிருக்கீங்க. ஏன் இன்னும் நீங்கள் வரவில்லை'' என்றாள்.

''வினயா பார்ட்டி வேற ஹோட்டலில். நான் உன் அண்ணனுக்குப் போன் போட்டேன். அவர் இன்னும் வராமல் என்ன செய்து கொண்டிருக்கே என்று திட்டினார். அதான் நான் உன்னை மறந்து விட்டேன். நீ இன்னுமா அங்கே இருக்கே. நீ வீட்டுக்குப் போய்விடு'' என்றாள்.

அவளுக்குக் கண் கலங்கியது. 'வரமாட்டேன் என்றவளை இங்குக் கூட்டி வந்துவிட்டு விட்டுப் போய் விட்டாளே. இப்போ என்ன செய்வது. அண்ணி கூடக் காரில் வந்ததால் பர்ஸ் கூட எடுத்து வரவில்லையே.



இந்த இரவில் எப்படி ஆட்டோவில், இவ்வளவு தூரம் போவது' என்று தெரியாமல், அவள் போனை கட் பண்ணியதுகூடத் தெரியாமல் அப்படியே நின்றாள்.

அவள் நின்ற கோலத்தைப் பார்த்து போனை பிடுங்கிக் காதில் வைத்தான். அது கட்டாகியிருந்தது. என்ன என்பது போல் அவளைப் பார்த்தான். அவள் அண்ணி சொன்னதை அப்படியே சொன்னாள். அவனுக்கு எல்லாம் புரிந்தது. 'இவளை வேண்டும் என்றேதான் இங்கு கூட்டி வந்துவிட்டுப் போயிருக்காள். இவளுக்கும் உலக நடப்பு தெரியவில்லை. அதனால் தான் அவள் உண்மை எல்லாம் என்னிடம் சொல்கிறாள்.'

''சரி இப்போ எப்படி வீட்டுக்குப் போவீங்க...?''

''அதான் தெரியலே... நான் பர்ஸ் கூட எடுத்து வரவில்லை'' எனும்போதே கண்ணீர் தெறித்தது.

''சரி வாங்க, நான் உங்களைக் கூட்டிக் கொண்டு வீட்டில் விடுகிறேன்.''

வினயாவும் சரியென்று கிளம்பினாள். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'எப்படி இந்தப் பெண் இப்படி நான் சொல்வதை நம்பி வருகிறாள். இல்லை இவள் கேரக்டரே இப்படித்தானா?'

அவளிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தான். ''நீங்கள் இது மாதிரி அடிக்கடி வெளியே வருவீங்களா...?'' என்று.

''இல்லை. நான் வரமாட்டேன் காலேஜ். காலேஜ் விட்டால் வீடு. இது மாதிரி நான் எங்கும் தனியாகப் போனதில்லை. போனாலும் வரவழி தெரியாது. காலேஜுக்குக் கூட காரில் தான் போவேன். நடந்து போகச்

சொன்னால் கூட வழி தெரியாது நான் ஆட்டோ பணத்தை உங்களுக்குக் கொடுத்து விடுகிறேன். எப்படிக் கொடுப்பது. நீங்கள் எங்கு இருக்கீங்க'' என்றாள்.

அவன் விளையாட்டாக விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்தான். அதை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டாள். அவன் அவளை வீட்டில் இறக்கி விட்டுவிட்டு மறுபடியும் ஹோட்டலுக்குச் சென்றான்.

அவன் பிரண்ட்ஸ் எல்லோரும் கேலி செய்தனர். ''ஐயா எப்போ இருந்து சோசியல் சர்வீஸ் செய்ய ஆரம்பிச்சீங்க. கழுகு ஒண்ணும் சும்மா கோழிக் குஞ்சைப் பாதுகாக்காதே, என்ன விஷயம் படிந்துவிட்டதா...?'' என்றனர்.

ஒருவன் ''வேண்டாம் நௌதின். பெரிய இடத்துப் பெண் போல் இருக்கா. குடும்பப் பெண் வேறு. பார்க்க அப்பாவியாக இருக்கா. அவளை விட்டுவிடு'' என்றான்.

மற்றவர்கள் ''என்னடா நீயே இப்படித் தயங்குறே. நீ மட்டும் அந்தப் பெண்ணைப் படுக்கையில் வீழ்த்து. அப்பத்தான் நீ சரியான ஆண் பிள்ளை.'' ஆளாளுக்குப் பேசி அவனுக்கு உசுப்பேத்தி விட்டனர்.

அவனும் சேலன்ஞ் பண்ணினான். ''நான் எப்படியாவது அவளை என் காலடியில் விழ வைக்கிறேன்'' என்று சவால் விட்டான்.

''அதையும் தான் பார்ப்போமே. அவள் உனக்குப் படிய மாட்டாள்'' என்றனர் சிலர்.

அன்றே மனதில் வஞ்சம் வைத்து விட்டான். மனதில் 'பாவி.. படுபாவி, உன்னால் எப்படி, இப்படி நடந்து



கொள்ள முடிந்தது. உன்னை எப்படி நம்பினேன். என்னை ஏமாற்றி விட்டாயே.' அவளை அறியாமல் கண்களில் கண்ணீர் வழிந்தது.

அந்த நாளை மறக்க முடியாமல் தவித்தாள். இப்போ கூட நெஞ்சு துடித்தது. அவளுக்கு உண்மையான முழு அன்பும் கிடைத்ததில்லை. சிறு வயதிலேயே அவள் தாய், தந்தை இல்லை. வேலைக்காரங்க, அண்ணன் இவர்களைப் பார்த்துத் தான் வளர்ந்தாள்.

அண்ணன் பிசினசை கவனிக்கவும் தங்கையை மறந்தான். பார்த்தால் ஒரு ஹாய் என்று போய் விடுவான். ஒரே வீட்டில் இருந்து கொண்டு இருவரும் சந்திப்பதேயில்லை. இவளிடம் உட்கார்ந்து ஸ்கூலில் என்ன நடந்தது என்று கேட்க ஆளில்லை. அவளின் மனதில் இருப்பதை யாரிடமும் சொல்ல வழியில்லை.

அண்ணன் எனக்குக் கல்யாணம் என்றான். அண்ணி வீட்டுக்கு வந்தால் நமக்கு ஒரு துணை கிடைக்கும். இனிமேல் தனிமையாக இருக்க வேண்டாம். நமக்கு ஒரு நல்ல தாய், தோழி கிடைத்து விட்டாள் என்ற சந்தோசத்தில், எதிர்பார்ப்பில் இருந்தாள்.

ஆனால் அதிலும் அவளுக்கு ஏமாற்றமே. அண்ணி அவளுடன் பேசவில்லை. தேவையென்றால் தவிர. மீண்டும் தனிமை. இருவரும் மாலையில் வெளியே கிளம்பினால் இரவு எப்போ வருவார்கள் என்று தெரியாது. இவளுக்கு ஏக்கமாக இருக்கும் என்னையும் ஒரு நாள் கூட்டிப் போகக்கூடாதா என்று.

சென்னையில் பிறந்து வளர்ந்தது என்று தான் பேர். இதுவரை ஒரு இடத்துக்குப் போனதில்லை. பீச்சுக்கு மட்டும் இரண்டு தடவை சென்றிருக்கா.

இது மாதிரி அன்பு கிடைக்காமல் ஏங்கி, தவித்துக் கிடந்தவளுக்கு நௌதினின் அன்பான பேச்சு, ஆதரவான நடவடிக்கை அவளுக்கு அவன் மேல் நம்பிக்கை தந்தது. ஆட்டோ பணத்தை எப்படியாவது அவனிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அவனை மறுபடியும் எப்போ பார்ப்போம் என்று மனசு துடித்தது.

அவளுக்கே தன்னைப் பற்றி ஆச்சரியமாக இருந்தது. தான் எப்போ இப்படி மாறினோம் என்று காலேஜில் சில மாணவிகள் தங்கள் காதல் பற்றிப் பேசுவதைக் கேட்டிருக்காள். அதை நினைக்கும்போதே கன்னம் சூடேறின.

ஒரு பெண் மற்ற ஆண்களுடன் சகஜமாகப் பழகினால், சட்டெனக் கண்டுபிடித்து விடுவாள். யார் நல்லவன், கெட்டவன் என்று. யாரிடமும் பழகாமல் ஒரு ஆண் மட்டும் அன்பாகப் பேசினால் சட்டென ஏமாந்து விடுவாள். இதுக்கு உதாரணம் வினயாதான்.

## 8

இப்படித்தான் அவனைத் தேடி அவன் வீட்டிற்குச் சென்றாள். வாசலில் வாட்ச்மேன் அவளை யாரென்று விசாரித்தான். அவளுக்கு யாரென்று சொல்லத் தெரியவில்லை. அவன் பெயர் கூடத் தெரியாது.



ஹேண்ட் பேக்கில் இருந்து விசிட்டிங் கார்டை எடுத்தாள். அதை வாங்கிப் பார்த்த அவன் ''சரி உள்ளே போங்கள்'' என்றான், அவளை ஒரு மாதிரியாகப் பார்த்து.

அவள் மெதுவாக உள்ளே போனாள். பெரிய பங்களா. ஆள் நடமாட்டமே இல்லை. சிறிது நேரம் சென்று ஒரு வேலைக்காரன் வந்தான்.

அவனிடம் ''சார் இல்லையா...?'' என்றாள். ''அவர் மேலே இருக்கார் போய்ப் பார்'' என்றான்.

அவள் மெதுவாகப் படியேறி மேலே சென்றாள். 'நான் இங்கு வந்தது தவறோ...' என்று நினைத்தாள்.

நௌதின் ஆபீஸ் அறையில் இருந்தான். கொலுசு சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். வினயா வந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். எப்படி இவளைச் சந்திப்பது என்று நினைத்திருந்தான். அவளை எதிர்கொண்டு வரவேற்றான்.

''வாங்க வினயா வாட் சர்ப்ரைஸ். நான் உங்களை எதிர்பார்க்கவேயில்லை.''

அவள் முத்துப் பல் ஒளிர புன்னகைத்தாள். ''நான் உடனே வர முடியவில்லை. அதனால் தான் இத்தனை நாள் ஆயிற்று. இந்தாங்க உங்க பணம்'' என்று நீட்டினாள்.

அவன் வாங்காமல் ''இந்தப் பணத்துக்காகத்தான் வந்தீங்களா...? நான் என்னமோ என்னைப் பார்க்கத்தான் வந்தீங்க என்று நினைத்தேன். பணம் உங்களிடமே இருக்கட்டும். இது நம்ம பிரண்ட்சை வளர்க்க உதவட்டுமே.''

''நாம நல்ல பிரெண்ட்சா இருப்போம். இப்ப பணத்தைப் பிடிங்க'' என்றாள்.

''நீங்கள் சொன்னால் சரிதான்'' என்று பணத்தை வாங்கும் சாக்கில் அவள் கையைத் தொட்டான். அவள் மின்சாரம் தாக்கியது போல் 'வெடுக்'கென இழுத்துக் கொண்டாள்.

அதை அவன் கவனித்தான். 'இவளைப் பேச்சில் மயக்கிவிட முடியாது. காதல் என்ற போர்வையில் தான் மடக்க வேண்டும்' என்று திட்டம் போட்டான்.

ரொம்ப நேரம் நின்றதில் அவளுக்குக் கால் வலித்தது. நினைவுகளை அகற்றிவிட்டு படுக்கச் சென்றாள்.

இப்படியே இரண்டு வாரம் சென்றது. ஹேமா விடிகாலையில் வாசல் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுது காரை விட்டிறங்கி நௌதின் அவள் பக்கத்தில் வந்து நின்றான்.

அவள் பக்கத்தில் ஒரு ஜோடி கால்கள் தெரிந்தன. நிமிர்ந்து பார்க்கவில்லை. அது நௌதினோட கால்கள் தான் என்று தெரிந்தது.

அவள் அவனை அலட்சியப் படுத்தியதை அவன் தாங்கவில்லை. உடனே உள்ளே போனான். அம்மா விடம் போய் ''இந்த வேலைக்காரிக்கு என்ன திமிர். நான் வந்து நிற்கிறேன். திரும்பிக்கூடப் பார்க்காமல் கோலம் போட்டுக் கொண்டு இருக்கிறாள். என்னைப் பார்த்து விட்டு வாங்க என்றுகூடச் சொல்லவில்லை. இப்படி யொரு வேலைக்காரியை நான் பார்த்ததில்லை'' என்று போட்டுக் கொடுத்து விட்டான்.

வசந்தாவிற்கு கேட்கவா வேண்டும். அவள் கணவனிடம் ''என் பிள்ளை வந்திருக்கான். அவளுக்கு



என்ன கொழுப்பு இருந்தா, என் பிள்ளையை மதிக்காமல் இருப்பாள். என் பிள்ளை எத்தனை சொத்துக்கு அதிபதி. ஒரு வேலைக்காரிக்கு இத்தனை அகம்பாவம் கூடாது. ஒண்ணுமில்லாமல் இருக்கும்போதே இப்படி ஆடுறா'' என்று திட்டினார்.

ஹேமா வாயைத் திறக்கவில்லை. 'வந்ததுமே பிரச்ச னையை ஆரம்பித்து விட்டான். இவன் எப்போ ஊருக் குப் போவானோ' என்று நினைத்தாள்.

அவன் அதற்குள் ''நான் இங்கு வருவதே அவளுக்குப் பிடிக்கவில்லை. நான் வந்தால் எப்போ போவேன் என்று நினைக்கிறாள்.''

அவள் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள். 'எப்படி நான் மனதில் நினைத்தை இவ்வளவு துல்லிய மாகச் சொல்கிறான்' என்று அவன் முகத்தைப் பார்த் தாள்.

அவன் 'என் திறமை எப்படி?' என்று புருவத்தை உயர்த்திக் காட்டினான். அவன் முகத்தில் வெற்றிப் புன்னகை.

அவள் பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

வசந்தா ''ஏன் மச..மசன்னு நின்னுக்கிட்டு இருக்கே. போய் வேலையைப் பார்.''

''அம்மா எனக்கு டீ வேண்டும். எடுத்துக் கொண்டு மேலே வரச் சொல்லுங்கள்'' என்று சென்று விட்டான்.

ஹேமா போய் டீ போட்டுக் கொண்டு மேலே சென் றாள்.

திடும்மென ''இரண்டு வாரமாக நிம்மதியாக இருந் தாய். அப்படித்தானே...? நான் உன்னை நிம்மதியாக இருக்க விடமாட்டேன்'' என்றான்.

''அதுதான் தெரிந்த விசயம் ஆயிற்றே. அதை வேறு சொல்ல வேண்டுமா...?'' என்றாள் துடுக்காக.

''நல்லா பேசக் கத்துக்கிட்டே...''

''எல்லாம் சகவாச தோஷம்தான்'' பளிச்செனச் சொன் னாள்.

''ம்... ம்... ரொம்ப அளவுக்கு மீறிப் போறே. பார்த்து ஜாக்கிரதை.''

''நான் இன்னும் ஜாக்கிரதையாக இருக்க என்னிடம் என்ன இருக்குது'' அவள் குரல் கரகரத்தது.

''சரி... சரி அழுகாதே. நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்.''

அவளுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு கோபம் வந்ததோ. கையில் வைத்திருந்த டீயை அவன் மேல் விட்டெறிந்தாள். அவன் படக்கென விலகிக் கொண் டான்.

அவள் கையைப் பிடித்துத் திருகினான். ''என்னடி உனக்கு இவ்வளவு தைரியம். ஏன் வராது உனக்கு. வீட்டை விட்டு வந்தவள்தானே. நீ இப்ப பெரிய இடத் துப் பிள்ளையை. வளைத்துப் போட முடியவில்லையே என்று தவிப்பாக இருக்கிறது. உனக்கு அப்படி ஆள் கேட்கிறது. இல்லையென்றால் நீ வீட்டைவிட்டு வருவாயா...?'' என்று குத்திக் காட்டினான்.

அவள் கை வலி வேறு. அவன் சொன்ன சொல், நெஞ்சில் நெருஞ்சியாய் குத்திற்று.



''நானாகவா வந்தேன். நீங்க வரச் சொல்லித்தான் வந்தேன். எதற்கு என் மீது இப்படி அபாண்டமாக பழியைச் சுமத்துறீங்க'' என்றாள்.

''நான் ஆண் பிள்ளை வரச்சொல்வேன். நீ இத்தனை வருடம் வளர்த்த அண்ணனை விட்டு வரலாமா...? கல்யாணம் என்றதும் இப்படி அலைகிறாயே...? உனக்கு வெக்கமா இல்லை.''

அவள் ''கையை விடுங்க வலிக்குது'' என்றாள்.

''என்னிடம் மன்னிப்புக் கேள். அப்பத்தான் விடு வேன்.''

''நான் எதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும்...?''

''என்னை அலட்சியப் படுத்தியதற்கு. என் மீது டீயை வீசியதுக்கு'' என்றான்.

''நான் வேலைக்காரிதானே. நான் ஏன் உங்களை அலட்சியப்படுத்தப் போறேன்.''

மற்றொரு கையில் வைத்திருந்த சிகரெட்டால், அவள் வயிற்றில் திடீரென சுட்டான்.

''ஐயோ...'' என்று துள்ளினாள். அப்பொழுதும் அவளை விடவில்லை. ''மன்னிப்புக் கேள். அப்பத்தான் விடுவேன்.''

வலி தாங்க முடியாமல் ''என்னை மன்னித்து விடுங் கள்'' என்றாள்.

''நான் இவ்வளவு தூரம் கேட்ட பிறகு, உன் மன்னிப்பு யாருக்கு வேண்டும். நீ என்னைக் கட்டிப் பிடித்து என் கன்னத்தில் முத்தம் இடு. அப்போ தான் நான் மன்னிப் பேன்.''

''என் உயிர் போனாலும் போகுமே தவிர, நீங்க நினைத்தது ஒரு நாளும் நடக்காது.''

அதற்குள் கீழே இருந்து வசந்தா குரல் கொடுக்கவும், அவன் அவள் கையை விட்டான்.

அவள் அழுதழுது கண் வீங்கி இருந்தது. அவள் பைப்பில் முகத்தை கழுவிக் கொண்டு முந்தானையில் முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டு வெளியே சென்றாள்.

காலை டிபனையும் மேலே கொண்டு வரச் சொல்லி விட்டான். மதியம் அவன் ஆபீஸ் அறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் அம்மாவே ''சாப் பாட்டை எடுத்துக் கொண்டு மேலே போ'' என்றார். ''வைத்துவிட்டு வந்து விடாதே. இருந்து போட்டு விட்டு வா'' என்றார்.

'நல்ல தாய். மகன் இன்னும் ஒழுக்கமா இருந்தா அவ்வளவுதான்' என்று நினைத்துக் கொண்டு மேலே சாப்பாட்டை எடுத்துக் கொண்டு போனாள். காலையில் அவன் படுத்திய பாட்டில் சாப்பிடவேயில்லை. மதியம் இவன் சாப்பிட்டு, நான் எப்போ சாப்பிடுவது.

டைனிங் டேபிளில் வைத்துவிட்டு, ஆபீஸ் அறையை எட்டிப் பார்த்தாள். அவன் கம்ப்யூட்டரில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். 'சாப்பாட்டை வைத்து விட்டுக் கூப்பிடவில்லை என்றால் அவன் அம்மாவிடம் சொல்லி என்னைத் திட்டுவாங்க வைத்து விடுவானோ...' என்று நினைத்து அவனைக் கூப்பிடப் போனாள். என்ன என்று அவனை அழைப்பது. இனி பேர் சொல்லி அழைக்க முடியுமா...?



''சார்...'' என்று அழைத்தாள்.

அவன் என்ன என்று கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. சிறிது நேரம் அப்படியே நின்றாள். கீழே போனாலும் ஏன் சாப்பாடு போடாமல் வந்தே என்று கேட்பார், அதனால் சோபாவில் உட்கார்ந்தாள்.

அவளுக்கு அசதியாக இருந்தது. 'பகல் முழுவதும் வேலை. இரவில் படுத்தாலும் தூக்கம் வருவதில்லை. இந்தப் பாவியை என்றைக்கு மனதில் நினைத்தேனோ... அன்றே தூக்கம், நிம்மதி எல்லாம் போயிற்று' என்று அப்படியே படுத்துத் தூங்கிப் போனாள்.

நௌதின் வேலை முடித்து எடுத்து வைத்துவிட்டு மணியைப் பார்த்தான். மணி நான்கு. அப்பொழுது தான் அவளின் நினைவு வந்தது. சார் என்று கூப்பிட்டாளே என்று வெளியே வந்தான். அவள் சோபாவில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அவள் முகத்தில் குழந்தைத் தனம் மாறாமல் இருந் தது. ஆனால் அவள் முகத்தில் எப்பொழுதும் ஒரு சோகம். அவனைப் பார்த்ததும், அவள் கண், முகம், உதடு, புருவம் அத்தனையும் சேர்ந்து சிரிக்கும். இப்பொழுது சிரிப்பதையே மறந்து விட்டாள். அவள் உதடு புன்னகை புன்னகை என்றால் என்ன விலை என்று கேட்டது.

சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பிடித்துத் திருகிய இடத்தில் வீங்கி இருந்தது. எப்படி வேலை பார்த்தாள். வந்தவள் இப்படித் தூங்கு கிறாள். இது அம்மாவுக்குத் தெரிந்தால் அவ்வளவு தான் என்று நினைத்துக் கொண்டு ''வினயா... வினயா'' என்று எழுப்பினான்.

அவள் அலறி அடித்துக் கொண்டு எழுந்தாள். அந்த குளிரிலும் முகத்தில் முத்து... முத்தாக வியர்த்தது. மணியைப் பார்த்தாள். மணி நான்கு. ''ஐயோ... மணி நான்காகி விட்டதே... நீங்க சாப்பிட்டீங்களா...?'' என்றாள்.

''இல்லை. இப்பவே மணி நான்கு. எனக்கு வேண்டாம். டிபன் காபி போதும்'' என்றான்.

''நான் சாப்பாட்டை அப்படியே கீழே எடுத்துப் போனால், நான் அவ்வளவு தான். ஏன்டி சாப்பாடு போடாமல் இவ்வளவு நேரம். நீ மேலே என்ன பண்ணினே என்றால், நான் என்ன சொல்வேன்'' பயத்தில் குரல் நடுங்கியது.

''நான் உங்க மகன் கூடப் படுத்திருந்தேன் என்று சொல்வதுதானே'' என்றான் அலட்சியமாக.

அவள் மிரள... மிரள விழித்தாள். என்ன செய்வது என்று புரியாமல். ''நீ சாப்பிட்டியா'' என்றான்.

''வேலைக்காரிக்கு எல்லாம் பசிக்குமா...? உங்களுக்கும், உங்க அம்மாவுக்கும் தான் பசிக்கும். எனக்கெதுக்குப் பசிக்குது. எனக்கும் அம்மா இருந்தா இவளுக்கும் பசிக்கும் என்று நினைத்திருப்பாங்க. அதான் இல்லையே. நான் உங்களை என் அம்மா போலத்தான் நினைத்தேன். அந்த அன்பை உ..ங்....'' என்றவள், உதட்டைக் கடித்துக் கொண்டு சாப்பாட்டை எல்லாம் எடுத்துக் கொண்டு கீழே சென்றாள்.

சாப்பாடு அப்படியே இருப்பதைப் பார்த்துவிட்டு ''ஏன்டி என் பிள்ளை சாப்பிடவில்லையா...? இந்நேரம் வரைக்கும் மேலே என்ன பண்ணினே...?''



'என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழிக்க, செல்வராஜ் ''நான்தான் தோட்டத்தில் கொஞ்சம் வேலையிருக்குது. அதைப் பார் என்றேன்' என்றார்.

அவள் பார்வையாலேயே அவருக்கு நன்றி சொன்னாள். நௌதின் இதைக் கேட்டு அசந்து போனான். 'அப்பா ஏன் பொய் சொல்கிறார். பொய் சொன்னால் அவருக்குப் பிடிக்காதே...' என்று நினைத்தான்.

''எதுக்குங்க அவளைத் தோட்டத்தில் வேலை பார்க்கச் சொன்னீங்க. அவள் காலையிலும் சாப்பிடவில்லை. இப்பவும் சாப்பிடவில்லை.''

''காலையில் ஏன் சாப்பிடவில்லை...?''

''காலையில் லேட்டாகி விட்டது. என் பிள்ளைக்கு ஒரு மணிக்கு மதிய சாப்பாடு வேண்டும். அதனால் அவள் சாப்பிடப் போனவளை நான்தான் சாப்பிட வேண்டாம். நேரம் ஆகிவிட்டது வேலையைப் பார், அதை அப்படியே வை. மதியம் சாப்பிடுவே என்றேன். இவள் வந்ததில் இருந்து நம் வீட்டில் எதுவும் வீணாகப் போவதில்லை'' என்றார் பெருமையாக.

''எதுக்கு வசந்தா நீ இப்படிப் பாவம் பண்ணுறே. எல்லா வேலையும் அந்தப் பெண் தானே செய்யுறா. அவளுக்குப் பசிக்காதா...? சாப்பிட்டு விட்டு வேலை பார்க்க எவ்வளவு நேரம் ஆகும்...?''

''உன் பிள்ளை பெரிது என்று தானே அவளைப் பட்டினி போட்டே. அவள் யார் பெற்ற பெண்ணோ. அவள் எப்படியெல்லாம் வளர்ந்தாளோ, அவளைப் பெற்றவள் பார்த்தால் அவள் வயிறு எப்படி எரியும். நீயும்

ஒரு தாய் தானே. இதை நீ நினைத்துப் பார்த்தாயா...? இப்போ மணி என்ன காலையில் வைத்த இட்லியை இப்போ சாப்பிடச் சொல்கிறாயே. நமக்கு என்ன குறை. எவ்வளவோ செலவு செய்கிறோம். அவள் சாப்பிடுவ தால் நாம் குறைந்து விடுவோமா...?''

# 9

''அன்றும் அப்படித்தான் இரண்டு சுடிதார் செட் எடுத்துக் கொடுத்ததுக்கு அவ்வளவு திட்டினே. உன் பழைய கிழிந்த, சுருங்கிய சேலையைக் கொடுக்கி றாயே, உனக்கு மனசாட்சி இல்லை மனசாட்சி இருக்கிற வங்களுக்கே இல்லை. உனக்கு எங்கே இருக்கப் போகிறது.''

''............''

''அவளும் ஒரு வயசுப் பெண் தானே. கிழிந்த சேலையைக் கட்டலாமா...? குடுக்கிறது குடுக்கிறே... நல்ல சேலையாவது குடு. அந்த சுடிதாரைப் பிடுங்கி வைத்துக் கொண்டாயே, உனக்கு அது எதுக்கு. சேலை தான், கொடுத்தாயே அதற்குத் தேவையான மற்ற பொருள் எதுவும் வேண்டாமா...?''

''நான் எடுத்துக் கொடுத்தால் எவ்வளவு தரக் குறை வாகப் பேசுறே. உனக்கு ஒரு மகள் இருந்தால் இப்படித் தான் பேசுவியா...?'' என்றார் கோபமாக.



அத்தனையும் நௌதின் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் மனதில் அவள் ட்ரெஸ்ஸும், அவள் நகையும், கைகளில் வளையலும் எத்தனை டிசைன் எத்தனை வகைகள் என்று மனதில் வந்து போயின.

அவள் ஏ.ஸி. ரூமிலும், ஏ.ஸி. காரிலும் வலம் வந் தவள். இன்று வெறும் தரையில் படுத்துக் கொண்டு, அத்தனை வேலையும் பார்க்கிறாள்.

மறுநாள் காலையில் டிபன் நேரத்தில் முரளி வந் தான். அவனை வரவேற்றனர். ஹேமாவும் ''வாங்க'' என்றாள்.

''இப்ப உடம்பு எப்படி இருக்கு ஹேமா'' என்றான்.

''நல்லாயிருக்கு'' என்றாள்.

மகனை முரளிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். நௌதினும் முரளியைப் பார்த்து ''ஹலோ'' என்றான்.

மகனிடம் ''இவர் பேர் முரளி. இவர் ஒரு டாக்டர்'' என்றார்.

''தெரிகிறது. வந்ததுமே உடம்பைப் பற்றி விசாரிக் கிறாரே.''

''நீயும் சாப்பிடு முரளி'' என்றார் வசந்தா.

ஹேமா டிபன் எடுத்து வைத்தாள். அவள் கையைப் பார்த்த முரளி. ''ஏன் ஹேமா கை வீங்கி இருக்கு'' என் றான்.

அவள் ''கீழே விழுந்து விட்டேன். அதான் வீங்கி விட்டது.''

வசந்தா அதற்குள் ''ஆமா பப்பா பாரு கீழே விழ. எருமை மாட்டிற்கு வயசானது போல் வயசாகலை.

பார்த்து நடக்கக்கூடாது. கை வீங்கி இருக்கு, கால் வீங்கி இருக்கு என்று வேலை பார்க்காமல் இருந்து விடாதே'' என்றார் காட்டமாக.

முரளிக்கு ஏன் கேட்டோம் என்று இருந்தது. கேட்டதால்தானே இவளுக்குத் திட்டு கிடைக்கிறது. அவன் எழுந்து விட்டான்.

''சாப்பிடு முரளி ஏன் எழுந்திட்டே...?''

''இல்லை சார் போதும்.''

ஹேமாவிடம் நாலைந்து கவர்களைக் கொடுத்தான். ''இந்தா ஹேமா. உனக்கு சுடிதார் எடுத்து வந்தேன். இந்தா வாங்கிக் கொள்.''

அவள் தயங்கி, எதுக்குப் பயப்படணும் என்று வாங்கிக் கொண்டாள்.

அவன் நான் வருகிறேன் என்று விடைபெற்றுக் கொண்டு சென்றான். கதவு வரை சென்றவன் ஹேமாவைக் கூப்பிட்டு ''கைக்கு மருந்து வாங்கிப் போட்டுக் கொள்'' என்று பணத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

''இல்லை. உங்களிடமே இருக்கட்டும். தேவை என்றால் வாங்கிக் கொள்கிறேன்'' என்றாள். இதைப் பார்த்தும் பார்க்காதது போல் பார்த்துக் கொண்டிருந்தான் நௌதின்.

அன்று இரவு ஹேமா அறைக்குள் வந்தான் நௌதின். அவள் அவன் வந்ததும் எழுந்து நின்றாள். அவன் அம்மாவும், அப்பாவும் வெளியே போயிருந்தனர். இவளுக்கு அந்த இரவை நினைத்துப் பயமாக இருந்தது. ''என்ன



வேண்டும் உங்களுக்கு'' என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

பேசிக் கொண்டே வெளியே போக இரண்டெட்டு எடுத்து வைத்தாள். அவன் அவள் கையை லாவகமாகப் பிடித்துக் கதவைச் சாத்தித் தாளிட்டான். அவள் முரளி வாங்கிக் கொடுத்த சுடிதாரைப் போட்டிருந்தாள்.

''அவன் வாங்கிக் கொடுத்த சுடிதார் எப்படி இருக்குது என்று பார்க்க வந்தேன்'' என்று அவள் துப்பட்டாவை உருவினான்.

''இங்க பாருங்க உங்களுக்கும், எனக்கும் இருந்த உறவு முடிந்து விட்டது. நான் யாரிடம் சுடிதார் வாங்கினால் உங்களுக்கென்ன...?''

ஓங்கி அறைந்தான். ''எனக்கென்னவா. என் வீட்டில் இருந்து கொண்டு நீ இப்படி அலைகிறாயா...?'' என்று அவளைக் கட்டியணைத்தான். அவள் விடுபட எவ்வளவோ போராடினாள். அவன் கையைக் கடித்தாள். நகத்தால் பிராண்டினாள். அவள் ''விட்டுருங்க... விட்டுருங்க'' என்று கதறி அழுதாள்.

''நான் போய் விடுகிறேன். இனி நான் இங்கு இருக்க மாட்டேன். ஐயோ... கடவுளே'' என்று அழுதாள். அவள் ட்ரெஸ்சைக் கழட்டி அவன் மூஞ்சியில் எறிந்தான். அவன் கை எல்லை மீறுவதைத் தடுக்க முடியாமல்.

''வாங்க உங்க ஆசை இது தானே. ஒரு நாள் என்னைச் சீரழிச்சது பத்தாது. தினம்... தினம் வாங்க. நான் எப்படி உங்களை நம்பினேன். என்னை என்ன பாடு படுத்தி

னீங்க. உங்களுக்கு என் உடம்பு தானே வேண்டும். வாங்க உங்க ஆசை, வெறி, தீரும் மட்டும் அனுபவிங்க. இன்னும் மற்றவர்களையும் கூட்டி வந்து விடுங்க. உங்களை நான் விரும்பியதுக்கு, கணவனாக என் மனதில் நினைத்ததற்கு எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்.''

நௌதின் எதுவும் பேசாமல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து விட்டான். ஹேமா மூலையில் அப்படியே சுருண்டு படுத்து அழுது கொண்டிருந்தாள். பழைய நினைவுகள் முட்டி மோதிக் கொண்டு வந்தன.

அவனை எத்தனை தரம் ஆசையாகச் சந்தித்தாள். எப்படிப் பேசினான். அவ்வளவு அன்பைக் கொட்டியவன் எப்படி மாறினான். அவன் உண்மையாக அன்பாக இருக்கவில்லை. எல்லாம் நடிப்பு, அவன் வாயாலேயே சொன்னதுதானே. எத்தனையோ முறை அவளைத் தொட முயன்றான். அதுக்கு அவள் இடம் கொடுக்கவில்லை.

உன்மேல் உயிரையே வைத்திருக்கேன். நீயில்லாமல் என்னால் வாழ முடியாது. என் கண்ணே என்று கொஞ்சியவன். இன்று இப்படி ராவணனை விடக் கேவலமாக நடக்கிறான்.

நான் உன்னை விரும்புகிறேன். நீ என்னை விரும்புகிறாயா...? என்று எவ்வளவு மென்மையாகக் கேட்டான். நமக்கு யாரும் அன்பு காட்டாததுக்கு, இவன் சேர்த்து வைத்து ஒட்டு மொத்தமாகக் காட்டுகிறான் என்று நினைத்தாளே. கல்யாணம் பண்ணிக் கொண்டு அண்



ணன், அண்ணி முன் நின்று இவர் என் கணவர். இவர் எனக்காகவே வாழ்பவர். எனக்குத் திகட்ட... திகட்ட அன்பைப் பொழிவார் என்று தலை நிமிர்ந்து எல்லோருக்கும் கேட்குமாறு கத்த வேண்டும் என்று நினைத்தாளே... எல்லாம் வீணாகிவிட்டது.

''உன் அண்ணனிடம் நான் பெண் கேட்டு வரவா'' என்றான். ''எனக்கும் அம்மா, அப்பா யாரும் இல்லை. அதனால் எனக்கு எல்லாமே நீதான் வினயா'' என்று கண் கலங்கினான்.

இவன் பெண் கேட்டு வந்தால் தன் அண்ணன் தரமாட்டான். ''நீங்க வந்து அவமானப்பட வேண்டாம். அதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது'' என்றாள்.

## 10

''அப்புறம் வேற வழி என்ன இருக்குது. உன் அண்ணன் எப்போ சம்மதித்து, நம் கல்யாணம் எப்போ நடக்கிறது. அதுவரை உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாதுடா'' என்றான் தவிப்பாக.

''நான் எப்படியாவது எங்க அண்ணனிடம் மெதுவாகப் பேசிச் சம்மதம் வாங்கி விடுகிறேன். என் அண்ணன் தான் என்னை வளர்த்தார். அவர் ஆசியோடத்தான் நம் கல்யாணம் நடக்க வேண்டும்'' என்றாள்.

அவன் சரி என்றான். அவள் மனம் குளிர்ந்து போனாள். தன் கருத்தை, விருப்பத்தைச் சொன்னதுமே ஏற்றுக் கொண்டு விட்டானே. யாருக்குக் கிடைக்கும் இது மாதிரி கணவன். இப்போ எங்கு பார்த்தாலும் பிரச்சனை. அவன் அடிக்கிறான், குடிக்கிறான், டைவர்ஸ் வேண்டும் என்கிறான் என்று எவ்வளவோ கேட்டிருக்கிறாள்.

'நாம் கொடுத்து வைத்தவள். இவ்வளவு நாள் தனிமையில் இருந்ததுக்கு கடவுள் மனம் இறங்கி இப்படிப்பட்ட கணவனைக் கொடுத்திருக்கிறார். நாம் செய்த புண்ணியமோ இல்லை என்னைப் பெற்றவர்கள் செய்த புண்ணியமோ, நீங்கள் இருந்து பார்த்திருந்தாக்கூட இப்படியொரு மாப்பிள்ளையைப் பார்த்திருக்க மாட்டீங்க' என்று அம்மா, அப்பாவைச் சொன்னாள் பெருமையாக.

உலகிலேயே தான் மட்டுந்தான் சந்தோசமாக இருப்பதாக நினைத்தாள். எல்லோருக்கும் உதாரணமாக வாழ வேண்டும் என்று நினைத்தாள். இப்போ அவளே அடுத்தவங்களுக்கு இவளைப் போல் நடந்தால் இப்படித்தான் ஆகணும் என்று உதாரணமாக இருந்தாள்.

அவளுக்கு வெளி உலகப் பழக்கம் இல்லை. அவள் பழகிய முதல் ஆண் மகன் நௌதின் தான். அவளை விட்டுப் பிடித்தான். அவள் போக்கிலேயே விட்டு அவளை தன் புறம் திருப்பினான். 'நான் எத்தனை நாள் தனியாக இருப்பது வினயா. இனிமேலும் என்னால் தனித்திருக்க முடியாது' என்று தவித்தான். அவளும் அதை நம்பினாள்.



அவளைச் சந்திக்கும்போது எல்லாம் அவளிடம் கேட்டான். ''என்ன வினு உன் அண்ணனிடம் கேட்டாயா...? என்ன சொன்னார்?'' என்று நச்சரித்தான்.

சில நாள் கழித்து ''வினு நான் ஒரு ஐடியா சொல்வேன் கேட்பியா...?'' என்றான்.

''சொல்லுங்க நௌதின். நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்பேன்.''

''உன் அண்ணனுக்குத் தெரியாமல் நாம் இருவரும் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக் கொள்ளலாமா...?''

அவள் அதிர்ந்து அவனைப் பார்த்தாள். ''தெரியாமல் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்று சொல்றீங்களா...?''

''உன் அண்ணன் எப்போ சம்மதிச்சு, எப்போ நாம் கல்யாணம் பண்ணிக் கொள்வது. அப்படி நடந்தால், அது அறுபதாம் கல்யாணமாகத்தான் இருக்கும்'' என்றான் சோகமாக.

அவன் சொன்ன விதம் அவளுக்குச் சிரிப்பு வந்தது. ''இவ்வளவு நாள் பொறுத்து விட்டோம். உங்களுக்கும் யாரும் இல்லை. எனக்கு அண்ணனாவது இருக்கான். அவனும் இல்லாமல் எப்படிங்க. நாம் கல்யாணம் பண்ணிக் கொள்வது. இன்னும் கொஞ்ச நாள் வெயிட் பண்ணிப் பார்ப்போம்.''

''நீயும் சொல்லமாட்டே... நான் சொல்வதையும் கேட்கமாட்டே. என்னமோ செய்'' என்றான் விட்டேரியாக.

அவள் அண்ணன் அன்று வந்து ''வினயா உனக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கேன். இந்தா போட்டோ,

இவன்தான் மாப்பிள்ளை. அடுத்த வாரம் நிச்சயதார்த்தம்'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

'போட்டோவைப் பார். உனக்குப் பிடித்திருக்கா என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. முடிவு பண்ணிவிட்டு வந்து சொல்கிறான். இனிமேலும் இவனை நம்பிப் பயனில்லை. இவன் சொல்வதைக் கேட்டு நௌதினை இழக்க விரும்பவில்லை. இனி அவன் சொல்வது போல் தெரியாமல் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டியதுதான்' என்று முடிவு பண்ணி நௌதினிடம் தெரிவித்தாள்.

அவனும் சந்தோசமாக ஏற்றுக் கொண்டு ''என் பிரண்ட்சிடம் எல்லாம் சொல்லி வைக்கிறேன். அவர்கள் எல்லா ஏற்பாடுகளும் செய்து விடுவார்கள்'' என்று சொன்னான்.

இவளைக் ''கல்யாணத்திற்கு முதல் நாளே என் வீட்டுக்கு வந்துவிடு. கல்யாணத்தன்று கிளம்பினால், ஏதாவது சினிமா மாதிரி தடை ஏற்பட்டு உன்னால் வர முடியாது போய், அது உன் அண்ணனுக்குத் தெரிந்தால் பின் நம் வாழ்நாள் முழுமைக்கும் ஒன்று சேர முடியாது. அவன் பார்த்திருக்கும் மாப்பிள்ளைக்கு உன்னைக் கல்யாணம் பண்ணி வைத்து விடுவான்'' என்று அவளிடம் சொன்னான்.

''எதற்கும் ஒரு வார்த்தை அண்ணனிடம் உங்களை விரும்புகிறேன் என்று சொல்லட்டுமா...?'' என்றாள்.

''வேண்டாம். அப்படி எதுவும் சொல்லிவிடாதே. உன்னை அறையில் போட்டுப் பூட்டிவிடுவான்'' என்றான்.



இவளும் பயந்து கொண்டு, ''சரி நீங்கள் சொல்வது போல் வந்து விடுகிறேன்'' என்றாள்.

''நீ வரும்போது எதுவும் எடுத்து வரவேண்டாம். கட்டிய துணியுடன் வா. அது போதும். எனக்கு நீ மட்டுந்தான் வேண்டும்.''

அவள் பெருமையுடன் தலையசைத்தாள். 'இந்த மாதிரி ஒரு கணவன் யாருக்குக் கிடைக்கும். வரதட்சணை, பணம், நகை என்று பறக்கும் இந்த நாளில்' என்று நினைத்துக் கொண்டாள்.

அவன் சொன்னது போலவே கல்யாணத்திற்கு முதல் நாள் காலையிலேயே வந்து விட்டாள்.

நௌதின் அவளை வரவேற்றான். அவளுக்கு வெட்கமாகப் போய்விட்டது. ''என்ன இது இன்று தான் புதுசா வந்த மாதிரி'' என்றாள்.

''நீ இத்தனை நாள் வந்ததுக்கும், இன்று நீ வருவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்குல்லே...'' என்று கண் சிமிட்டினான்.

''நீ வீட்டில் இரு. நான் ஆபீஸ் போய்விட்டு எல்லா வேலையும் சரியாகச் செய்திருக்காங்களா...? என்று பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

இரவு தான் வந்தான். ஒரே களைப்பாக 'சாப்பிடுங்க' என்று டிபன் எடுத்து வைத்தாள். ''இன்று தான் நான் நிம்மதியாகச் சாப்பிடுகிறேன்'' என்று சாப்பிட்டான்.

அவளை ''என் அறைக்கு வா'' என்று விட்டுப் போனான். இவளும் அவனுக்கு பால் ஒரு கப் எடுத்துக் கொண்டு

போனாள். 'நாளை இரவு நாம் உரிமையுடன் இந்தப் பாலை எடுத்துக் கொண்டு போகலாம்.' அதை நினைக்கும்போதே மனது குறுகுறுத்தது.

பாலை அவனிடம் கொடுத்துவிட்டுக் கட்டிலின் ஓரமாக உட்கார்ந்தாள். தலை குனிந்திருந்தாள்.

''என்ன வினு. உனக்கு வெட்கம். உன் முகம் குங்குமம் கணக்கா சிவந்து இருக்குது. நாளைக்கு இன்னேரம் என்ன நடக்கும் என்று நினைத்துக் கொண்டிருக்கியா?'' என்று கேலி பேசினான்.

அவள் முகம் மேலும் சிவந்தது.

''வினு நாம் ஏன் நாளை வரை காத்திருக்கணும். இன்றே நாம் சந்தோசமாக இருந்தா என்ன...?''

அவள் திடுக்குற்று எழுந்து நின்றாள். ''எ..ன்..ன.. சொல்றீங்க?''

நடுங்கினாள்.

''இதில் இவ்வளவு அதிர்ச்சியுற என்ன இருக்கு வினு. நாம் இருவரும் நாளை தம்பதிகளாகப் போறவங்க. இதில் என்ன தப்பு இருக்குது. ஒரு வித்தியாசமா இருக்கட்டுமே. இது மாதிரி இன்று இருந்தால், நாம் வாழ்க்கை முழுவதும் இதை நினைத்து சந்தோஷப் படலாம்.

''கல்யாணத்திற்குப் பிறகு இது எல்லோருக்கும் சகஜம் தானே. நாம் வாழ்க்கையை இது மாதிரித் தொடங்கலாமே'' என்றான் பொறுமையாக.

அவள் இதற்குச் சம்மதிக்கவில்லை. அவள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவனுக்குக் கோபம்



வந்தது. ''அப்போ நீ என்னை நம்பலை அப்படித் தானே. என் மீது நம்பிக்கையில்லாமல் எதற்கு நீ இங்கு வரணும்?''

# 11

''என் மீது நம்பிக்கையில்லாத நீ, இப்பவே உன் வீட்டுக்குப் போகலாம். நான் உன்னைத் தடுக்கவில்லை'' என்று திரும்பி உட்கார்ந்து கொண்டான்.

அவள் உடம்பெல்லாம் நடுங்கிற்று. ''என்ன பேசுறீங்க நீங்க. உங்க மீது நம்பிக்கையில்லாமல்தான் நான் வீட்டை விட்டு வந்தேனா...? இன்று வேண்டாம். எதற்கு அவசரப்படணும். நாளை நான் உங்கள் சொத்தாகி விடுவேன். உரிமையோட எடுத்துக் கொள்வதுதானே'' என்றாள்.

''இல்லை. எனக்கு இன்றே வேண்டும். உன்னால் முடியுமா...? முடியாதா...?''

''என்னால் முடியாது. நீங்கள் என்ன சொன்னாலும் நான் கேட்க மாட்டேன்'' என்றாள் பிடிவாதமாக.

''அப்படின்னா நம் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கணும்'' என்றான்.

அவள் அவனை வெறித்து நோக்கினாள். ''ஏங்க இப்படிப் பேசுறீங்க'' என்றாள் அழுகுரலில்.

''அப்போ நீ என்னை நம்பலியே. என்னை முழுமையாக நம்பாதவளை எப்படிக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியும்...?''

''நான் நம்பாமல் தான் வீட்டை விட்டு வந்தேனா. நான் உங்களை முழுமையாக, என் மனதார, கடவுள் சாட்சியா நம்புகிறேன். போதுமா இல்லை கற்பூரம் அடித்துச் சத்தியம் செய்யட்டுமா?''

''வாயில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் மனசில், நீ என்னை நம்பவில்லை என்று தெரிகிறது.''

''நம்புகிறேன்... நம்புகிறேன்'' என்று கதறி அழுதாள்.

''அப்படினா நான் சொல்வதை நீ கேட்டாத்தான் உன்னை நான் நம்புவேன்.''

''ஐயோ இன்று ஒரு நாள் பொறுக்கக் கூடாதா...? எதற்கு உங்களுக்கு இந்தப் பிடிவாதம்.''

''நீ போகலாம் வினயா. இனிமேல் நம் கல்யாணம் நடக்காது.'' அவள் நீர் வழியும் கண்களோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ''நான் எப்படிங்க இனி வீட்டுக்குப் போக முடியும்.''

''அது தெரியுதுல்லே. உன்னை நகை கேட்டேனா...? பணம் கேட்டேனா...? என்னை நம்பி வந்தவளுக்கு, உன்னைத் தர என் இந்த தயக்கம். எங்கே தன்னை அனுபவித்துவிட்டு, நம்மைக் கைவிட்டு விடுவானோ... என்று தானே நினைக்கிறே. காலையில் கல்யாணம். இன்று இரவு தாலி கட்டப் போற கணவனைப் பற்றி எவ்வளவு உயர்வான சிந்தனை. நீ இப்படி என்னை



நினைப்பாய் என்று கொஞ்சங்கூட நான் எதிர்பார்க்கலே'' என்றான் ஆத்திரமாக.

அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள். அவன் எதற்கும் மசிய வில்லை. அவன் ஒரே வார்த்தையில் ''என் மீது நம்பிக்கை இருந்தால் வா. இல்லை என்றால் கார் இருக்கு. டிரைவரிடம் சொல்லி நீ வீட்டுக்குப் போகலாம்'' என்றான் முடிவாக.

அவள் என்ன பண்ண முடியும். அவளுக்கு இதில் உடன்பாடே இல்லை. இருந்தாலும் அவனை மீற முடியவில்லை. 'வீட்டை விட்டு வந்தாகி விட்டது. இனி வீட்டிற்குப் போக முடியாது. இவனை விட்டாலும் வேற வழியில்லை. இவன் சொல்வதையும் தட்ட முடிய வில்லை. நாளைக் கல்யாணம் செய்யப்போறவன் தானே. வேண்டாம் என்று போனாலும் வேற ஒருவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது.'

என்னதான் நினைத்தாலும் மனது சமாதானம் அடைய வில்லை. அவள் உடம்பில் ஓடிய இரத்தமும், உயர்ந்த எண்ணங்களும், ஒழுக்கமும், பண்பாடும் அவளைக் கீழிறங்க விடவில்லை. 'என்ன செய்வது. முடிவாகப் போ என்று சொல்லி விட்டானே. மறுபடியும் கேட்டுப் பார்க்கலாமா?' என்று அவன் கிட்டே போய், அவன் கையைப் பிடித்துக் கொண்டு ''நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்'' என்றாள்.

அவன் வெடுக்கென கையை உருவிக் கொண்டான். அவள் அப்படியே நின்றாள்.

''நீ போகலாம் வினயா'' என்றான் அதிகாரமாக. ''உன்னால் எனக்கு எவ்வளவு சிரமம். என் ஆபீசில் யாருக்கும்

தெரியாமல், என் பிரண்ட்ஸ் சில பேருக்கு மட்டும், அதுவும் கையெழுத்துப் போட வேண்டுமே என்று தான் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். உனக்காக நான் கஷ்டப்படும்போது, நீ எனக்காக இதைச் செய்யக் கூடாதா...? உனக்கு மனம் இல்லை. அவ்வளவு தான். நீ போகலாம். நீ வந்ததையோ, நீ இங்கு இன்று இருந்ததையோ, நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்.

நீ உன் பிரண்ட்ஸ் வீட்டுக்குப் போனேன். நேரம் ஆகி விட்டது என்று ஏதாவது சொல்லிக் கொள். உன் அண்ணன் பார்க்கும் மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு நீ சந்தோஷமாக இரு. நீ போய் விட்டால் நான் வேற கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று மட்டும் நினைக்காதே. முதலும், முடிவும் நீ தான். நான் உன்னை மாதிரி இல்லை. மனதில் ஒன்றும், வெளியில் ஒன்றும் பேசுவதற்கு.''

அவளுக்குத் தாங்க முடியவில்லை. அவன் மடிமீது விழுந்து கதறி அழுதாள். அவன் அவளை அப்படியே எடுத்து அணைத்துக் கொண்டான்.

காலையில் கண் விழித்தபோது மணி எட்டு. பதறி எழுந்தாள். 'கல்யாணம் பத்து மணிக்கு. இப்படித் தூங்கி விட்டோமே' என்று சுற்றும் முற்றும் பார்த்தாள். நௌதினைக் காணவில்லை. கீழே வந்தாள். அவன் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

அவனிடம் அவசரமாக ''என்னங்க என்னை எழுப்பி விடக் கூடாதா...? இவ்வளவு நேரம் தூங்கிவிட்டேனே. எப்போ நாம் கிளம்புவது. மணி இப்பவே எட்டுக்கு மேல் ஆகிவிட்டதே.''



''எங்கே கிளம்பணும் வினயா...?''

அவள் திகைத்தாள். ''என்ன இப்படிக் கேட்கிறீங்க. இன்று நம் கல்யாணம். அதாவது நினைப்பிருக்கா?'' என்றாள்.

''அப்படியா...!'' என்றான் ஆச்சரியமாக. ''உனக்கு யார் சொன்னது...?''

''விளையாடுறீங்களா நீங்க. நீங்க தானே சொன்னீங்க'' என்றாள்.

''சரி நானே சொல்லி விடுகிறேன். நமக்கு இனிமேல் கல்யாணம் இல்லை என்று.''

''கல்..யா..ணம் இல்..லையா...? ஏ...ன்...? நி..ஜ..மா சொல்றீங்களா...? சும்மா என்னை ஏமாற்றத்தானே சொல்றீங்க?''

''நான் எதுக்கு உன்னை ஏமாற்றணும். நீ யார்...?''

உலகத்தில் உள்ள அத்தனை இடிகளும் அவள் தலையில் விழுந்தது போல் இருந்தது. கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது நிற்க முடியாமல் பக்கத்தில் இருந்த சோபாவில் உட்கார்ந்தாள். மனதைத் திடப் படுத்திக் கொண்டு ''இன்று நமக்குக் கல்யாணமா...? இல்லையா...?'' என்றாள் மறுபடியும்.

''என்ன இது. தேய்ந்த ரிக்கார்டு மாதிரி கேட்டதையே கேட்டுக்கிட்டு. அதான் தெளிவாச் சொல்லிட்டேன்ல. அப்புறம் என்ன? நீ போகலாம்'' என்றான்.

''எங்கே...?'' என்றாள். ஒற்றைச் சொல்லாக.

''அது உன் இஷ்டம். அதைத் தீர்மானிக்க வேண்டியது நீ. நானல்ல.'' வார்த்தை கடுமையாக வந்தன.

''நீங்கள் என்னைக் காதலித்தது. கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்று என்னை வரச் சொன்னது. இராத்திரி நடந்ததெல்லாம்...?''

''நான் உன்னை உண்மையிலேயே காதலிக்க வில்லை. என் பிரண்ட்ஸ் எல்லோரும் உன்னைத் தொட முடியுமா...? என்று என்னிடம் சவால் விட்டார்கள். அது என்னால் முடியும் என்று செய்து காட்டினேன்.

''மற்ற பெண்கள் எல்லாம், என் அழகை, கம்பீரத்தை, பணத்தைப் பார்த்துவிட்டு உடனே மயங்கி விடுவாங்க. கொஞ்சம் நீ வித்தியாசமா இருந்தே. அதான் காதல் என்ற போர்வையில், உன்னை வீழ்த்தினேன்'' என்று தோள் களைக் குலுக்கினான்.

## 12

''காதலித்தால் நீ படிந்துவிடுவாய் என்று எதிர்பார்த் தேன். அது முடியவில்லை. அதான் கல்யாணம் வரை வந்தேன். நான் எதுவும் ஏற்பாடு பண்ணவில்லை. சும்மா உன்னை ஏமாற்றினேன். அப்பத்தானே நீ என்னை நம்புவே. எப்படி என் நடிப்பு. ஆனால் உனக்கு மட்டுந் தான் இத்தனை மாதங்கள் ஆயிற்று'' என்றான் ஆணவ மாக.

''..............''



''அதற்குத்தான் நான் திட்டம் போட்டேன். உன்னை முதல் நாளே வந்துவிடு என்றேன். உன்னை இராத்திரி சம்மதிக்க வைக்க என்ன பாடு பட வேண்டியிருந்தது. எங்கே போய்விடுவாயோ என்று பயந்து போனேன்.''

அவள் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது.

''என் பிரண்ட்ஸ் எல்லாம் என்னைக் கேலி பண்ணிச் சிரிப்பாங்க. நல்ல வேளை நான் நினைத்தது நடந்தது.''

அவள் அத்தனையும் கேட்டுக் கொண்டு கல்லாக அமர்ந்திருந்தாள். அந்தச் சிலைக்கு உயிர் இருக்கிறதா என்று சந்தேகமாகக் கூட இருந்தது. அவள் மனதில் பெரிய சூறாவளிக் காற்று வீசிக் கொண்டிருந்தது. இப்படிக்கூட மனிதர்கள் இருப்பார்களா...? அண்ணா 'உனக்குத் தெரியாமல் தப்பு பண்ணியதற்கு எனக்குக் கை மேல் தண்டனை கிடைத்து விட்டது.'

அவனிடம் வாய் திறந்து, ''என்னை அடைய காதல் என்ற புனிதமான வார்த்தையைப் பயன்படுத்தி இருக்க வேண்டாம். காதல் அதற்கு எப்பேர்ப்பட்ட மாபெரும் சக்தி. அந்த ஒற்றைச் சொல்லுக்கு. அது மாபெரும் சாம் ராஜ்ஜியத்தையே உருவாக்கி இருக்கிறது. அது போல் அழித்தும் இருக்கிறது.

''காதல் என்னை அழித்து விட்டது. உங்களை எப்படி நம்பினேன். ஒரு பெண் வீட்டை விட்டு வந்து, ஒரு பகல் ஒரு இரவு உங்களோடு இருந்து கெட்டுச் சீரழிந்து...'' என்று சொல்லும்போதே முகத்தில் அடித்துக் கொண்டு அழுதாள். அவள் அழுததைப் பார்த்தால் கல்லும் கரைந் திருக்கும். ஆனால் அவன் இரும்பாக அசையாமல் உட்கார்ந்து இருந்தான்.

''ஏய்... இங்கே பார். இப்படி அழுது மாய்மாலம் பண்ணினால் உன்னை ஏற்றுக் கொள்வேன் என்று நினைக்காதே. நீ பத்தோடு பதினொன்று. அத்தோடு நீ ஒன்று. அவ்வளவு தான். எழுந்து சீக்கிரம் போ. நான் ஆபீஸ் கிளம்பணும். உனக்குப் பணம் எதுவும் வேண்டுமா...?'' என்றான்.

அவள் எழுந்து அவன் சட்டையைப் பிடித்துக் கன்னத்தில் அறைந்தாள். அவன் முகத்தில் தூ... எனக் காறித் துப்பினாள். ''சீ நீயெல்லாம் ஒரு மனுசனா. நீ ஒரு நல்ல தாய்க்குத்தான் பிறந்தியா. உன் தாயும் இப்படித் தான் இருந்திருப்பாள். அவள் வயிற்றில் பிறந்த உனக்கும் அதே புத்திதான். உன் உடம்பில் ஒரு சொட்டு இரத்தமாவது நல்ல இரத்தம் ஓடினா. நீ இது மாதிரி தப்பு பண்ண மாட்டே. நான் இராத்திரி எவ்வளவு கெஞ்சினேன். வேண்டாம் என்று. எத்தனை பொய் பேசினே?''

''என் உடம்பை மட்டுமா...? உனக்குக் கொடுத்தேன். என் உடல், பொருள், ஆவி, என் உள்ளம், உணர்வு, விருப்பு, வெறுப்பு அத்தனையும் உன் காலடியில் சமர்ப்பித்தேனே. பாவி நீ அதைப் புரிந்து கொள்ளவில்லையா...? என் உடம்பு மட்டுந்தான் உன் கண்ணுக்குத் தெரிந்ததா...? ஐயோ நான் என்ன செய்வேன். இந்தப் படுபாவியை நம்பி இப்படி வீணாப் போனேனே. இனி நான் என்ன செய்வேன்'' என்று அவன் மடிமீது விழுந்து அழுதாள்.

அவளைத் தள்ளிவிட்டு ''எழுந்திரிடி. உனக்கு எவ்வளவு திமிர். என் அம்மாவையா கேவலமாப் பேசுறே. நீ இன்று எப்படி இருக்கிறே என்று நினைத்துப் பார்'' என்று



அவளைப் பிடித்து வெளியே கொண்டு விட்டுவிட்டுக் கதவைச் சாத்தினான்.

வெளியே வாட்ச்மேன் இருந்தான். அவளுக்கு அவமானத்தில் உயிர் போய்விடாதா... என்று இருந்தது. அவன் வரும் வரை வெளியேயே இருந்தாள். அவன் கதவைத் திறந்து வந்ததும் அவன் காலைப் பிடித்துக் கெஞ்சினாள்.

''நான் பேசியது தப்புத்தான். என்னை மன்னித்து விடுங்கள். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்வதுபோல் நடக்கிறேன்'' என்று அழுதாள்.

''நேற்று இரவு நடந்ததுக்கு இன்று ஹோட்டலில் பார்ட்டி. என் பிரண்ட்ஸ் எல்லோருக்கும். வர்ரீயா அவன்களும் கேட்டான்கள். 'எங்களுக்கு ஒரு நாள் கம்பெனி கொடுப்பாளா...' என்று. இன்று இரவு அவன்களோடு இருக்கிறாயா...?''

அவள் காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

'இனி இவனிடம் பேசிப் பயனில்லை. இங்கிருந்தால் கூட இவன் கூட்டிக் கொடுத்தாலும் கொடுத்து விடுவான்' என்று மெல்லத் தள்ளாடியபடி வெளியே வந்தாள். எப்படியோ நடந்து வீட்டிற்கு வந்தாள்.

வெளியிலேயே வாட்ச்மேன். ''நீங்க வந்தா உள்ளே விடக்கூடாது என்று அண்ணன் சொல்லி இருக்காரும்மா'' என்றான்.

''நான் எதுக்கும் அண்ணனை நேரில் ஒருமுறை பார்க்கிறேனே'' என்று கெஞ்சினாள். சரி என்று அவனும் திறந்து விட்டான்.

இவள் உள்ளே போய் ''அண்ணா'' என்றாள். அவ்
வளவுதான். அவன் முடியைப் பிடித்து இழுத்து
வந்து வீதியில் விட்டு விட்டுத்தான் போனான். ''இனி
நீ இங்கு வராதே. எங்காவது போய்த் தொலை'' என்
றான்.

அவன் சொன்ன சொல் அவள் காதுகளில் ஒலித்துக்
கொண்டே இருந்தது. அவள் எழுந்து ஸ்டேஷனை
நோக்கிப் போனாள். அதன் பிறகு தான் ட்ரெயினில்
மாத்திரை சாப்பிட்டது. பிறகு இங்கு வந்தது.

இவள் இரவு முழுவதும் தூங்கவில்லை. விடிந்து
விட்டது. அழுததில் நல்ல ஜுரம். எழுந்திரிக்க முடிய
வில்லை. வேலை செய்யாமல் படுத்திருந்தாள்... 'அந்த
அம்மா திட்டுவாங்க.' தலையைத் தூக்கினால் பாரமாக
இருந்தது.

வசந்தாவின் குரல் கேட்டது ''என்னடி விடிந்து இவ்
வளவு நேரம் ஆகிவிட்டது. இன்னுமா தூங்குறே...?
எழுந்து வேலையைப் பார்'' என்றார்.

எழுந்து வெளியே வந்தால் அவன் முகத்தைப் பார்க்க
வேண்டும் என்று வரவில்லை. அவர் திட்டிக் கொண்டே
இருந்தார். பிறகு என்ன செய்வது என்று தெரியாமல்
எழுந்து வெளியே வந்தாள். மெதுவாக வேலையை
முடித்தாள்.

வீட்டில் நௌதின் இருப்பதாகத் தெரியவில்லை.
ஊருக்குப் போய்விட்டான் போல. அவள் சோகமாக
வளைய வருவதை செல்வராஜ் கவனித்தார்.

'தன் மகனுக்கும், இவளுக்கும் என்னவோ ரகசியம்
இருக்குது. இல்லையென்றால் அவனின் போட்டோ



இவளிடம் எப்படி இருக்கும். இருவரும் ஒருவரை
ஒருவர் முறைத்துக் கொள்வதும், பார்வையால் வெட்டிக்
கொள்வதும்' என்று அவர் மௌனமாகப் பார்த்துக்
கொண்டிருந்தார்.

# 13

ஹேமா இனி அவன் வரும்போது தான் இங்கிருக்
கக் கூடாது என்று நினைத்தாள். அடுத்த வாரம் சனி,
ஞாயிறு வருவான். முரளியும் எத்தனையோ தடவை
கூப்பிட்டான். 'எங்கள் ஊருக்கு வா ஹேமா என்று.' இந்த
முறை ஊட்டிக்குப் போய்விட வேண்டும்.

வெள்ளிக்கிழமையே செல்வராஜிடம் ''நான் ஊட்
டிக்கு முரளி வீட்டுக்குப் போய்விட்டு, திங்கள்கிழமை
வருகிறேன்'' என்று கேட்டாள்.

அவர் யோசனையோடு அவள் முகத்தைப் பார்த்தார்.
அவள் தலையை குனிந்து கொண்டாள்.

''சரிம்மா. நீ போய்ட்டு வா. வீட்டுக்குள்ளேயே
இருப்பது உனக்கும் சிரமமாக இருக்கும். எப்படிப்
போவே...?''

''நான் முரளி சாருக்கு போன் பண்ணி வரச் சொல்
கிறேன்'' என்றாள்.

''எதுக்கு அவருக்கு வீண் தொந்தரவு. நீ போன் பண்ணி
வருகிறேன் என்று சொல்லிவிட்டு நம் காரிலேயே போ''
என்றார்.

''சரி'' என்று தலையாட்டிவிட்டு வசந்தாவிடமும் சொல்லிவிட்டுக் கிளம்பிச் சென்றுவிட்டாள்.

அந்த வார சனிக்கிழமை நௌதின் வந்தான். வீடு அமைதியாக வெறிச்சென்றிருந்தது. பழைய வேலைக் காரி ஒருத்தி இருந்தாள்.

அம்மாவிடம் மெதுவாக ''அவள் ஹேமா எங்கேம்மா'' என்றான். ''அவள் முரளி வீட்டுக்கு ஊட்டிக்குப் போயி ருக்கா.''

''எதுக்கு...? என்ன விஷயமா போயிருக்கா திடீர்னு...?''

''என்னவோ தெரியலை. திடீர்னு போய்ட்டு வர் றேன்னு சொன்னா. ஒரு வாரமா அவளும் ஏதோ ஒரு மாதிரியாக இருந்தாள். நானும் போய்ட்டு வரட்டுமே என்று சரி சொல்லிவிட்டேன். நீ அதுக்கப்புறம் தான் வரு கிறேன் என்று போன் பண்ணினே. முன்னாடியே தெரிந் திருந்தாள் நான் போகாதே வேலை இருக்கும் என்று சொல்லியிருப்பேன்.''

அவனுக்கு அவளின் திட்டம் புரிந்தது. நான் வரு வேன் என்று தெரிந்துதான் சென்றிருக்கா. அவன் மறுநாளே கிளம்பிச் சென்றுவிட்டான்.

ஹேமா திங்கட்கிழமை வந்துவிட்டாள். இப்படியே வாராவாரம் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு ஊட்டி சென்றாள். இப்படியே ஒரு மாதம் சென்றது. அங்கு ஏதாவது ஒரு வேலை கிடைக்குமா என்று முரளியிடம் விசாரித்தாள்.

அவன் ''ஏன் உனக்கு அங்கு என்ன குறை. நல்ல பாதுகாப்பான இடம். வேலை கிடைத்தாலும் எங்கு



தங்குவே. இது சரிப்பட்டு வராது. அதனால் நீ அங்கேயே இரு'' என்றான்.

நௌதின் அந்த வாரத்தில் சனி, ஞாயிறு வராமல் இடையில் போன் பண்ணாமல் வந்தான் திடீரென்று.

ஹேமாவைப் பார்த்து ''என்னம்மா கண்ணு, இந்த வாரம் ஊட்டிக்குப் போகலையா...?'' என்றான் நக்கலாக.

அவன் அம்மாவிடம் ''நீங்க இவளை ஒரு வேலைக் காரி போலவா வைத்திருக்கீங்க. அவ சொந்த வீடு மாதிரி அல்லவா... நடந்து கொள்கிறாள்'' என்று அவளை மேலும் கீழுமாகப் பார்வையால் அளந்தான்.

அவள் கட்டியிருந்த சேலை அவன் அம்மாவுடையது. கிழிந்திருந்தது. அதை மடித்துப் போட்டு கிழிசலை மறைத்திருந்தாள்.

''அம்மா என் அறையில் ஹீட்டர் போடச் சொல் லும்மா. நான் குளிக்கணும் எனக்கு பசி வேற'' என்றான்.

வசந்தா ஹேமாவை விரட்டினார். ''போ போய் சுத்தம் பண்ணி விட்டு ஹீட்டர் போட்டு விட்டு வா. எல்லாம் சொல்லணும்.''

ஹேமா போய் கூட்டிப் பெருக்கி தரையைத் துடைத்து விட்டு ஹீட்டரைப் போட பிளக்கில் கை வைத்தாள். அது ஷாக் அடித்து அவளைத் தூக்கி அடித்தது. அவள் தடுமாறி அம்மா... என்று கதவில் விழுந்தாள். கை மரத்துப் போனது போல் இருந்தது. பயத்தில் படபடப் பாக வந்தது.

நௌதின் அவள் விழுந்ததைப் பார்த்து, ''என்ன ஷாக் அடித்து விட்டதா, பார்த்துச் செய்யக்கூடாதா, வா'' என்று

கையைப் பிடித்து எழுப்பினான். அவளால் எழுந்திரிக்க முடியவில்லை. ''கையை விடுங்க. நான் எழுந்து விடு வேன்'' என்று கையை உருவிக் கொண்டாள்.

பின் கைகளை ஊன்றி எழுந்து மெதுவாக வெளியே வந்தாள். அவளால் நடக்க முடியாமல் தடுமாறினாள். சோபாவைப் பிடித்துக் கொண்டு அப்படியே உதட்டைக் கடித்துக் கொண்டு கண்மூடி நின்றாள். அவளின் உடம்பில் நடுக்கம் தெரிந்தது.

''சிறிது நேரம் உட்கார் வினயா'' என்றான். அவள் காது கேட்காது போல் நின்றாள். சிறிது நேரத்தில் சென்று விட்டாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவு சாப்பாடு முடிந்ததும் செல்வராஜ் சில போட் டோவைக் காண்பித்து ''உனக்குப் பெண் பார்க்கிறேன். இது பிடித்திருந்தால் சொல். இல்லையென்றால் வேற பெண் பார்க்கலாம்'' என்றார்.

அவள் மனதில் ஆயிரம் எண்ணங்கள், வேதனைகள் யாரிடம் சொல்வாள். அவள் வேதனையைச் சொல்லி யழக்கூட அவளுக்கு யாருமில்லையே என்று அழுதாள்.

அவள் அறையை விட்டுத் தோட்டத்துக்கு வந்து வாய்விட்டு அழுதாள். அந்த இரவில் இருட்டைப் பார்த்தாலே பயப்படும் அவள் இந்த அமாவாசை இர வில் தன்னந்தனியாக உட்கார்ந்து அழுது கொண்டிருந் தாள்.

அவள் வாழ்க்கையே ஒரே இருட்டாகி விட்டது. அதிக துக்கத்தில் பயம் கூடத் தெரியாது போல. அவள்



தோட்டத்தில் தனியாக உட்கார்ந்திருப்பதை நௌதினும் பார்த்தான். அவள் என்ன சொல்வாள் என்று எதிர் பார்த்தான்.

''அவன் அப்பா எதையும் சொல்ல மாட்டார். அப்படிச் சொன்னாலும் தட்ட முடியாது. அவன் அம்மாவும் நீ கல்யாணம் பண்ணிக் கொள்'' என்றார். அவன் அப்பா விற்கு தன் மேல் நம்பிக்கையில்லை என்று அவனுக்குத் தெரிந்தது. இதை சில மாதங்கள் தள்ளிப் போடலாம் என்று நினைத்தான்.

ஆனால் அவன் அப்பாவோ பிடிவாதமாக ''இன்றே பெண் பார்க்க வேண்டும்'' என்றார்.

இதையெல்லாம் ஹேமா கேட்டுக் கொண்டிருந்தாள். பெண் பார்க்க அவளையும் கூப்பிட்டார்கள். அவள் எதுவும் பேசாமல் அவர்களுடன் கிளம்பினாள். இதைப் பார்த்த நௌதின் குழம்பினான்.

## 14

அன்று இரவு டிபனை மாடிக்குக் கொண்டு வரச் சொல்லி விட்டுப் போனான். அவளும் எடுத்துக் கொண்டு போனாள்.

''பெண் உனக்குப் பிடித்திருக்கா...?'' என்றான்.

அவள் நிதானமாக ''பெண் உங்களுக்குத்தான் பிடிக்க வேண்டும். எனக்குப் பிடித்து என்ன ஆகப் போகிறது.

பாவம் அந்தப் பெண். என்ன பாவம் பண்ணினாளோ தெரியவில்லை. உங்களுக்கு மனைவியாக வர.''

''ஏன் என்னிடம் என்ன குறை. அதை நீயும் பார்த்திருப்பாயே'' என்று கண் சிமிட்டினான்.

''சீ.. சீ.. இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமா யில்லை.''

''ஏன். நீ என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வில்லை என்ற பொறாமையில் பேசுகிறாயா...?''

''இனிமேல் அந்த வார்த்தையை என் மனதால் கூட நினைக்க மாட்டேன். அதுக்கு உங்களுக்குத் தகுதி யில்லை'' என்றாள் கோபமாக.

''என்னடி எனக்குத் தகுதியில்லை. நான் உன்னையேக் கல்யாணம் செய்து, என் காலில் விழுந்து கெஞ்ச வைக் கலே. நான் ஆம்பளையில்லை.''

''நான் உயிரை விட்டாலும் விடுவேனே தவிர உங்களை ஒரு நாளும் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன்.''

''அதையும் தான் பார்ப்போமே.''

நௌதின் சென்னை சென்று விட்டான். அந்த வீட்டிற்கு ஒரு புது விருந்தாளி வந்தாள்.

சீமா நவநாகரீக நங்கை. மாடல் அழகி. நௌதினோட முறைப்பெண். அவள் வந்து ஹேமாவைப் பாடாய் படுத்தினாள். அவளின் அழகு, கொடி உடல் வாகு, வண்டை ஒத்த கண்கள், பாய்மரம் போல் சரிந்த மூக்கு, ஆப்பிள் கன்னம் என்று அத்தனையும் பார்த்துப் பிரமித் தாள்.



இவளைப் பார்த்ததுமே சீமாவுக்கு சந்தேகம் வந்தது. 'அத்தை வீட்டு வேலைக்காரி என்கிறான். ஆனால் இவளைப் பார்த்தால் பெரிய இடத்துப் பெண் போல் இருக்கா. நௌதின் அத்தானும்.. சரியில்லை. அவனைப் பற்றியும் இவள் கேள்விப்பட்டிருக்கா. இது அவனோட வேலையாயிருக்குமா' என்று சந்தேகப்பட்டாள்.

அவளைத் துருவித் துருவி கேள்வி கேட்டாள். ஹேமா எல்லாவற்றுக்கும் ஒரு புன்னகையே பதிலாகத் தந்தாள். மீண்டும் மீண்டும் அவளைக் குடைந்தாள்.

அவள் ''உனக்கு என்ன தேவை. என்னிடம் இருந்து என்ன தெரிந்து கொள்ளணும். இது உனக்கு அனாவசிய மான கேள்வி'' என்று முகத்தில் அடிப்பது போல் சொல்லி விட்டாள்.

அவளுக்கு வந்ததே கோபம், ''என்னடி நீ பெரிய இவளா...? இந்த வீட்டு வேலைக்காரி நீ. என்னை வா போ என்று எதிர்த்தா பேசுறே. உன்னை என்ன செய் கிறேன் பார்'' என்று உள்ளே சென்று விட்டாள்.

மறுநாள் காலையில் செல்வராஜும், வசந்தாவும் ஊட்டியில் உள்ள எஸ்டேட்டுக்குச் சென்றுவிட்டனர்.

ஹேமா வேலையை முடித்துவிட்டு குளிக்கப் போனாள். அவள் அறையில் பாத்ரூம் இல்லை. வீட்டின் பின்புறம் பொதுக் குளியல் அறை இருக்கும். அதைத்தான் ஹேமா பயன்படுத்திக் கொள்வாள். வீட்டில் சீமா மட்டும் இருந் தாள்.

குளியல் அறைக் கதவில் துணிகளைப் போட்டு விட்டுக் குளித்தாள்.

சீமா மெதுவாகச் சென்று அவள் அவிழ்த்த துணியை யும், குளித்துவிட்டுப் போடும் துணியையும் எடுத்துக் கொண்டு வந்து வெளியே விட்டெறிந்துவிட்டு, வெளி யேறும் தாழ்ப்பாளைப் போட்டு விட்டுப் போய் விட் டாள்.

ஹேமா இதைக் கவனிக்கவில்லை. குளித்துவிட்டுத் துணியைப் பார்த்தாள். எந்தத் துணியும் இல்லை. அவ ளுக்கு சர்வமும் அடங்கியது.

'இங்கு போட்ட துணி என்னானது. யார் எடுத் திருப்பாங்க. வீட்டில் சீமா தவிர யாரும் இல்லையே.' அவளுக்கு நிற்க முடியாமல் கை, கால் எல்லாம் நடுங் கியது.

''சீமா... சீமா... மா'' என்று கத்தினாள். கதவைத் தட்டினாள். அவள் என்னவென்று கேட்கவில்லை. வீட்டில் இருந்தால்தானே கேட்பதற்கு. அவள் காரை எடுத்துக் கொண்டு வெளியே போய் விட்டாள்.

ஹேமாவுக்குக் கத்திக் கத்தியே தொண்டை வறண்டு விட்டது. அழுதமுது முகமெல்லாம் வீங்கிவிட்டது. அவள் என்ன செய்வாள். 'அடிப்பாவி நீயும் ஒரு பெண் தானே. என்னை இந்தக் கோலத்தில் இப்படி நிற்க வைத்து விட்டாயே. நான் உனக்கு என்னடி பாவம் பண்ணினேன். கடவுளே எனக்கு ஏன் இந்தத் தண்டனை. அவனை மனதால் நினைத்ததற்கு அவன் கொடுத்த தண்டனை போதாதா...? நீயும் என்னை இப்படித் தண்டித்து விட்டாயே' என்று அழுதாள்.

கதவைத் தட்டித் தட்டிக் கையும் ஓய்ந்தது. கத்திக் கத்தி தொண்டையும் கட்டிப் போயிற்று. மதியமும் ஆனது. யாரும் வரவில்லை. யாராவது அந்தப் பக்கம் வரமாட்டாங்களா? என்று பக்கெட்டைக் கவிழ்த்துப் போட்டு அதில் ஏறி நின்று தலையை மட்டும் சன்னலில் வைத்து கத்திப் பார்த்தாள். யாரும் வர வில்லை.



மேகம் சூழ்ந்து மழை வரும்போல் என்று நினைக்கும் போதே, நல்ல பெரிய மழை பிடித்துக் கொண்டது. குளிர் காற்று உடம்பில் ஊசியாய்க் குத்திற்று. குளிரில் உடம்பு நடுங்கியது. அவளால் கட்டுப்படுத்த முடிய வில்லை.

மாலையானது. உடம்பின் நடுக்கம், குளிர், கோபம் எல்லாம் சேர்த்து கதவைத் தட்டினாள். அவளுக்கு மயக்கமே வரும்போல் இருந்தது. வெளியே கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. மேலும் வேகமாகத் தட்டி னாள்.

நௌதின் காரை விட்டு இறங்கி வீட்டுக்குள் வந்தான். வீடு திறந்து கிடந்தது. முன் அறையில் ஒருவரும் இல்லை. யோசனையுடன் உள்ளே சென்றான். அங்கும் ஒருவரும் இல்லை.

பின் கட்டில் இருந்து ஏதோ சத்தம் கேட்டது. இவன் அந்தப் பக்கம் சென்றான். ஹேமா கதவைத் தட்டி ''யார் வந்திருக்கிறது. இங்கே வாங்களேன்'' என்று கதவை பலங்கொண்ட மட்டும் தட்டினாள்.

நௌதின் வேகமாகச் சென்றான். வெளித் தாழ்ப்பாளை விலக்கி ''வினயா வா வெளியே'' என்றான்.

அவளுக்கு நௌதின் குரல் என்று தெரிந்தாலும் பயத்தில் ''நீங்கள் யார்'' என்றாள்.

''நான் தான் வினயா. தாழ்ப்பாளை விலக்கி விட்டேன். வெளியே வா'' என்றான்.

''நீங்கள் என் அறைக்குப் போய் எனக்கு போட்டுக் கொள்ள டிரஸ் எடுத்துட்டு வாங்க'' என்றாள்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. பேசாமல் போய் எடுத்து வந்து கதவு மேல் போட்டான்.

அவள் எடுத்து அணிந்து கொண்டு கதவைத் திறந்தாள். அவளைப் பார்த்து அவனே திகைத்தான். ''என்ன வினயா இது..? முகமெல்லாம் இப்படி வீங்கி இருக்குது'' என்று கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் உள்ளே சென்றாள்.

அப்பொழுதுதான் உள்ளே வந்தார்கள் மூவரும். ஹேமா போன வேகத்தில் சீமாவைப் பிடித்துக் கன்னங் கன்னமாக அறைந்தாள். அவள் முடியைப் பிடித்து ஆட்டினாள். வசந்தாவும், செல்வராஜும் பிடித்து இழுத்தும், ஹேமா விடவில்லை. ''செய்வாயா இப்படி இனிமேல்'' என்று அறைந்தாள்.

## 15

நௌதின் வேகமாக வந்து ஹேமாவை அப்படியே பிடித்துக் கொண்டு சோபாவில் உட்கார வைத்தான்.

''ஏய்... என்ன நடந்தது. எதுக்கு சீமாவைப் போட்டு அடிக்கிறே'' வசந்தாவும் வாயில் வந்தபடி கத்தினார்.



ஹேமா முகத்தை மூடிக் கொண்டு அழுதபடி விஷயத்தைச் சொன்னாள். இதைக் கேட்டு நௌதின் ஆடிப் போய்விட்டான்.

''சரி நீ உன் அறைக்குப் போ'' என்றான்.

அதற்குள் வசந்தா ''இந்த சாதாரண விஷயத்துக்காகவா இவளைப் போட்டு இந்த அடி அடிக்கணுமா...? இனி மேல் நீ இந்த வீட்டில் இருக்கக் கூடாது. வீட்டை விட்டு வெளியே போ'' என்று பிடித்துத் தள்ளினார்.

அவர் தள்ளிய வேகத்தில் அப்படியே மயக்கம் போட்டு விழுந்தாள். நௌதின் வேகமாகச் சென்று அவளை அவள் அறைக்குத் தூக்கிச் சென்றான். அவள் உடம்பு அனலாகக் கொதித்தது.

முகத்தில் தண்ணீர் தெளித்தும் நினைவு வரவில்லை. முரளிக்கு போன் செய்தனர். முரளியும் சில மணி நேரத்திலேயே வந்தான்.

அவளுக்கு ஊசி போட்டுவிட்டு, ''நல்லா ரெஸ்ட் எடுக்கணும் என்று தூங்குவதற்கு மாத்திரை கொடுத்தான். முதலில் ஹேமா சாப்பிடட்டும்'' என்றான்.

வசந்தா திட்டிக் கொண்டே இருந்தார்.

நௌதின் போய் டிபன் எடுத்து வந்து ''வினயா'' என்றான்.

முரளி அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தான். ''என்ன சார் ஹேமாவைப் போய் வினயா என்கிறீங்க'' என்றான்.

''சாரி சார்... ஏதோ நினைப்புல மாற்றிக் கூப்பிட்டு விட்டேன்.''

ஹேமா விழித்துப் பார்த்துவிட்டு கையில் தட்டுடன் இருக்கும் நௌதினைப் பார்த்தாள். ''சாப்பிடு ஹேமா'' என்றான்.

''வேண்டாம்'' என்று தலையசைத்தாள். அவன் விடவில்லை. ''சாப்பிடு மாத்திரை போடணும். வெறும் வயிற்றில் மாத்திரை போடக்கூடாது'' என்றான்.

'ரொம்ப அக்கறைதான். எல்லாம் உன்னால் தான். நான் இந்த மாதிரி ஆனதற்குக் காரணம் நீங்க தானே. இப்ப என்ன நடிப்பு வேண்டிகிடக்கு' என்று மனதில் நினைத்து முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

முரளி ''எழுந்து சாப்பிடு ஹேமா. சாப்பிட்டு மாத்திரை போட்டால் தான் ஜுரம் குறையும். நீ என்ன சின்னப் பிள்ளையா...?'' என்றான்.

''முரளி சார் நான் உங்களுடன் உங்க வீட்டுக்கு வருகிறேன்'' என்றாள்.

''சரி வரலாம். முதலில் சாப்பிடு'' என்றவுடன் மெதுவாக எழுந்து தட்டை வாங்கிச் சாப்பிட்டாள்.

நௌதினுக்கு அவமானமாக இருந்தது. அடுத்தவனுக்கு முன்னால் தன்னை அவமானப்படுத்தி விட்டாள் என்று அவன் பார்வை அவள் முகத்தில் ஊடுருவியது. ஊசியாய் குத்திற்று. தன் பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

முரளி அவளைக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு காருக்குச் சென்றான். பெரியவர்களிடம் ''நான் போய் விட்டு வருகிறேன்'' என்றாள் மெதுவாக.

''போ... இனிமேல் வராதே இந்த வீட்டுப் பக்கம்.''

''வசந்தா'' என்று அதட்டினார் செல்வராஜ். பிறகு ஹேமாவிடம் திரும்பி ''நல்லா ரெஸ்ட் எடுத்துக் கிட்டு மெதுவாக வாம்மா. இவள் சொல்கிறாள் என்று



மட்டும் நீ நினைக்காதே. நான் இருக்கிறேன் உனக்கு'' என்றார்.

ஹேமா பேசாமல் சென்று விட்டாள். அவள் சென்றதும் வசந்தா காளி ரூபம் எடுத்து விட்டாள்.

''நான் சொல்வதையும் மீறி அவளை இந்த வீட்டுக்கு வரச் சொல்றீங்களே, உங்களுக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா...? அவள் முன்னாடியே மட்டம் தட்டிப் பேசினால் என்னை மதிப்பாளா...? நான் இருக்கிறேன் நீ வா என்று சொல்றீங்களே அதுக்கு என்ன அர்த்தம். நீங்க அவளை வச்சிருக்கீங்களா...?'' என்று அவர் வாய் மூடு முன் அறைந்தார்.

வசந்தா, நௌதின், சீமா அத்தனை பேரும் அதிர்ந்தனர். 'அப்பாவுக்குக் கோபம் வந்து பார்த்தது இல்லையே. அம்மா என்ன பேசினாலும் பேசாமல் போய்விடும் அப்பா இன்று அம்மாவை அடித்திருக்கிறார்.

அப்பாவை அம்மா இப்படியொரு கேவலமான ஒரு கேள்வியைக் கேட்டிருக்கக்கூடாது.' அவன் மனது துடித்தது. வினயாவையும் அப்பாவையும் இணைத்துப் பேசிய தற்கு.

சீமா ''ஏன் மாமா அத்தையை அடிக்கிறீங்க. அவங்க என்ன ஒழுங்கா. இந்த வயதில் வீட்டை விட்டு வரும் பெண் நல்லவளா...? அவள் எப்படி மோசமானவளாக இருந்தால் இப்படி எவன் கூடவோ காரில் போவா...'' என்று கத்தினாள்.

''அவள் யாரையோ நம்பக்கூடாதவனை நம்பித்தான் வீட்டைவிட்டு வந்திருக்கா. அந்த நம்பிக்கைத் துரோகி

அவளை ஏமாற்றி இருக்கலாம்'' என்று ஒரு கூர்மையான பார்வையை நௌதின் மீது செலுத்திப் பின் உடனே மாற்றிக் கொண்டார்.

இதை நௌதினும் கவனித்தான். 'வினயா எதுவும் சொல்லியிருப்பாளோ, அது மாதிரி சொல்லமாட்டாளே. பின் அப்பா எப்படி இது மாதிரி பொடி வைத்துப் பேசுகிறார். பேச்சில் குத்தல் இருக்கே' என்று நினைத்தான்.

'எல்லாம் அவளால்தான். அவள் திமிரை அடக்கணும். என்னை அவமானப்படுத்திவிட்டு, அவன் கூடவா போறே. அவன் ஹேமா என்று உருகுறானே. அவன் அவளை விரும்புவானோ' என்று நினைத்தான். அவனுக்கு ஏனோ தேவையில்லாமல் கோபம் வந்தது.

மாதங்கள் உருண்டோடின. செல்வராஜ் மகனை நச்சரித்தார். அவன் பிடிகொடுக்காமல் இருந்தான். வினயாவையே கல்யாணம் பண்ணிக் கொண்டு அவளை அடக்க வேண்டும். எப்படித் திமிரா இப்போ எதிர்த்துப் பேசுறா. என்னையா அலட்சியப்படுத்துறே. அன்று அவள் ஊட்டிக்குப் போனதும் இரண்டு நாள் சென்று போன் போட்டு ''ஜுரம் எப்படி இருக்குது'' என்றான். அதுக்கு பதில் சொல்லாமல் போனை கட் பண்ணினாள்.

ஹேமா ஒரு பதினைந்து நாள் கழித்துத்தான் வந்தாள். அடுத்த வாரத்தில் நௌதின் வந்தான். அவன் பிரண்ட்ஸ்களுடன். ஹேமாவுக்குத்தான் தலைவலியாக இருந்தது. வேலை அதிகமாக இருந்தது. சீமா வேறு இருந்தாள்.



நினைத்ததுமே ஒரு டிபன் கேட்டான். அவளுக்குத் தெரியாததையெல்லாம் செய்யச் சொன்னான். நன்றாக இல்லையென்று அவள் முன்னாடியே தூக்கிப் போட்டான். இதைச் செய்ய அவள் என்ன பாடுபட்டாள் என்பது அவளுக்குத்தான் தெரியும்.

ஒரு நாள் இரவு தோட்டத்தில் உட்கார்ந்து தண்ணி அடித்தனர். ஹேமாவைக் கூப்பிட்டு முந்திரி வறுத்து எடுத்து வரச் சொன்னான்.

அவள் தயங்கித் தயங்கியே சென்றாள். அடி வயிறு கலங்கியது. 'சிங்கத்தின் குகைக்குள்ளே கூடப் போய் முழுதாகத் திரும்பி விடலாம். இவன் இருக்கும் இடத்துக்குச் செல்வது. அதுவும் இந்த மாதிரி தண்ணி அடித்துக் கொண்டு இருக்கும்போது, இவன் என்ன வேண்டுமானாலும் செய்வான். என் சிறகுகளை ஒவ்வொன்றாகப் பிய்த்துப் போட்டு, நான் வலிக்க... வலிக்க, இரத்தம் சொட்டச் சொட்டத் துடிப்பது அவனுக்கு ஆனந்தமாக இருக்கும்.

அவனுக்கு என்ன இதயமோ, கடவுள் இதயத்துக்குப் பதில் இரும்பை வைத்திருக்கிறார், என் விஷயத்தில். போகாமல் இருந்தாலும் திட்டுவான். முந்திரியை எடுத்துக் கொண்டு மெதுவாகச் சென்றாள்.

''ஏய்... என்ன இவ்வளவு நேரம். ஆடி அசைஞ்சு வர்றே. எத்தனை தரம் கூப்பிட்டு விட்டேன்.''

அவளைப் பார்த்த அனைவரும் அதிர்ந்தனர். ''இவ... இவ...'' என்று தடுமாறினார்கள்.

நௌதின் கட... கட...வெனச் சிரித்தான். ''நீங்கள் நினைப்பது போல் அவளே தான். இப்ப என் வீட்டு

வேலைக்காரி. என் படுக்கையை அலங்கரிக்க இவளுக்கு ஒரு இரவு தான் தகுதி. இப்ப இங்கே வேலை பார்த்து வயிற்றைக் கழுவிக் கொண்டு இருக்கிறாள்.''

அவள் உயிரைப் பிடுங்கிக் கொதிக்கும் எண்ணெயில் போட்டது போல் இருந்தது.

# 16

அவளுக்குக் கோபத்தில், பதட்டத்தில் முகம் சூடாகிச் சிவந்தது. உதடு துடித்தது. அதை ஓரக் கண்ணால் பார்த்து ரசித்தான். 'என்னையாடி அவன் முன் அவமானப் படுத்தினே. உனக்கு வச்சேன் பாரு செக்கு.'

ஹேமா வைத்துவிட்டுச் சென்றாள்.

''ஏய்... ஹேமா. இங்கே வா. வந்து இதை எடுத்து கிளாசில் ஊற்றி விட்டுப் போ'' என்றான்.

மற்றவர்கள் ''நௌதின் வேண்டாம். அவள் போகட்டும்'' என்றனர்.

''அவள் ஊருக்கு ஒரு பெயரை மாற்றி வைத்துக் கொள்கிறாள். இது மாதிரி எத்தனை பேரோடு போனாளோ தெரியவில்லை'' அவன் கோபம், ஆத்திரம், வெறி எல்லாம் குடித்துவிட்டு எரிமலையாகக் கக்கினான்.

அவளை விடவில்லை. ''எடுத்து ஊத்துடி'' என்று அதட்டினான்.



''என்னால் முடியாது'' என்று இரண்டெட்டு எடுத்து வைத்தாள்.

அவளை ஒரே எட்டில் பிடித்துக்கொண்டு கன்னத்தில் அறைந்தான். ''வந்து ஊத்திக் கொடு'' என்று ஷூ காலால் அவள் காலை மிதித்தான்.

வலி தாங்க முடியவில்லை. ''காலை எடுங்க'' என்றாள் தீனமாக.

''நீ வந்து முதலில் ஊற்று'' என்றான்.

அவள் அவன் சொன்னபடி பாட்டிலை எடுத்துக் கை நடுங்க ஊற்றினாள். அவள் கண்ணீர் ஒவ்வொரு துளியும் டம்ளரில் விழுந்தது. 'என்னைக் கல்யாணம் தான் செய்து கொள்ளவில்லை. என்னை இப்படிச் சித்ர வதையாவது பண்ணாமல் விடலாமே' என்று நினைத்தாள்.

ஒரு டம்ளரை எடுத்து அவளையும் குடிக்குமாறு வற்புறுத்தினான்.

''எனக்கு வேண்டாம். என்னை விடுங்க'' என்றாள்.

மற்றொருவன் போதையில் அவளைப் பிடித்துக் ''குடித்துத்தான் ஆகணும்'' என்றான்.

நௌதின் அதற்குள் அவள் வாயில் வைத்து ஊற்றினான். அவள் தட்டிவிடவே அது அவள் மேலேயே கொட்டிற்று. மற்றொருவன் பிடியில் இருந்து உதறிக் கொண்டு, வேகமாகத் திரும்பி காலில் கிடந்த செருப்பைக் கழட்டி சரமாறியாக அடித்தாள். அவளுக்குள் இத்தனை மாதமாக இருந்த கோபம், ஆத்திரம், ஏமாற்றம் எல்லாம் அவளிடம் இருந்து வெளிப்பட்டு அவனை அடிக்கச் செய்தது.

நௌதினே திகைத்துப் போய்விட்டான். மேஜையில் இருந்த ஒரு பாட்டிலை எடுத்து அதை லேசாக உடைத்து அவனை குத்தப் போனாள். நௌதின் அவளைப் பிடித்துப் பாட்டிலை வாங்கிக் கொண்டு ''உள்ளே போ...'' என்று அதட்டினான்.

ஒரு டம்ளரை எடுத்து அவன் மீது வீசிவிட்டு வேகமாகச் சென்றாள்.

'இனிமேல் இங்கிருக்கக் கூடாது. இந்த உயிரை விடத் தான் வேண்டும். இவன் கூட இப்படி என்னால் போராட முடியாது' என்று நினைத்தாள்.

அவள் செல்வராஜுக்கும், முரளிக்கும் செய்து கொடுத்த சத்தியம் நினைவுக்கு வந்தது. 'சத்தியம் என்ன பெரிய சத்தியம். இந்தக் காலத்தில் எல்லாம் சத்தியம் சர்க்கரைப் பொங்கல் போல. நாம் இறந்தால் யாருக்கு என்ன நஷ்டம். கவலைப்படப் போறாங்க' என்று நினைத்தாள்.

விடிவதற்கு முன்னாடியே எழுந்து வீட்டை விட்டுக் கிளம்பினாள். மலைக்கு அந்தப் பக்கம் ஒரு பெரிய பள்ளத்தாக்கு இருந்தது. அதை நோக்கிச் சென்றாள். பக்கத்து எஸ்டேட் பெண்மணி அத்தனை வயதிலும் சுறுசுறுப்பாக வாக்கிங் போய்விட்டு வந்தார்.

'ஹலோ பேபி என்ன இந்த நேரத்தில். அதுவும் இந்தப் பக்கம்' என்று பார்வையால் அவளை அளந்தார். அவளின் முகம் முகத்தில் கலக்கம், தீவிர யோசனை அத்தனையும் அவளை ஒரு நொடியில் எடை போட்டு விட்டார்.



''வா பேபி. நீ இந்த மாதிரி இடத்துக்கெல்லாம், இப்ப இந்த நேரத்தில் போகக்கூடாது. வா'' என்று அவளின் அனுமதியின்றி, கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றார்.

அவர் வீட்டிற்குப் போனதும் ஒரு கப் டீ சூடாகக் கொடுத்தார். அதை வாங்கிக் குடித்துவிட்டு, சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ''நான் வீட்டிற்குப் போகிறேன் ஆன்ட்டி'' என்று விடைபெற்றுக் கொண்டு சென்றாள்.

நௌதின் ஜாகிங் போய்விட்டு வரும் வழியில் அந்தப் பெண்மணி பார்த்து வருமாறு ஜாடை காண்பித்து அழைத்தார். நௌதினும் ''என்னங்க ஆன்ட்டி'' என்று போனான்.

''வா உன்னுடன் சற்றுப் பேச வேண்டும். வீட்டின் உள்ளே போய் உட்கார்ந்து கப்பில் டீ ஊற்றிக் கொடுத்தார். அவனின் தொழில் பற்றி விசாரித்தார். பேசிக் கொண்டே உன் வீட்டில் இருக்கும் பெண் ஹேமா அந்த மலைப் பக்கமாக இன்று இருட்டோடு வந்தாள். நான் தான் அவளிடம் பேசிக் கூட்டி வந்து, சிறிது நேரம் அமர வைத்து, அனுப்பி வைத்தேன்.''

'எதுக்கு இதை நம்மக்கிட்டே சொல்றாங்க...'

''நௌதின் என்ன இது...? நான் கேட்கிறேன் என்று கோபப்படக்கூடாது. நேற்று இரவு தோட்டத்தில் நடந்ததை நான் மாடியில் இருந்து பார்த்துக்கொண்டு தான் இருந்தேன். அதனால் நீ மழுப்பாதே. நான் அப்பொழுதே கீழே இறங்கி வந்திருப்பேன். உன்னை அத்தனை பேர் முன் கண்டிக்கக் கூடாது என்று பேசாமல்

இருந்துவிட்டேன். விடியட்டும் தனியாகக் கூப்பிட்டுச் சொல்லலாம் என்று இருந்தேன்.

''அவள் ஒரு வயசுப் பெண். அவளிடம் நீங்கள் அப்படி நடந்து கொள்ளலாமா...? என் கண்ணிலயே கண்ணீர் வந்துவிட்டது. நீ அவளை விரும்புறே என்று நினைக்கிறேன். அதையும் மீறி ஏதோ அவளிடம் உனக்கு வெறுப்பு. அதை அவளிடம் இப்படிக் காட்டுறே. அயாம் கரெக்ட்'' என்று அவன் முகத்தை ஆராய்ந்தார்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை ஆன்ட்டி.''

''இதே நம் வீட்டுப் பெண்ணாய் இருந்தால், நீ இதுமாதிரி நடந்து கொள்வாயா...? நீ ஒரு பிசினஸ் மேன். இந்த சின்ன வயதிலேயே, நீ உயர்ந்த இடத்துக்கு வந்து விட்டாய். ஆனால்...? உன் கேரக்டர் சரியில்லையே...?''

''..............''

''உன் அப்பா எவ்வளவு பெரிய ஆள். அவருக்குத் தலைகுனிவு வர்ற மாதிரி நடந்து கொள்ளாதே. இதுக்கு மேலே விரிவா நான் உனக்குச் சொல்ல வேண்டியது இல்லை. அந்தப் பெண் நான் பார்த்துக் கூட்டி வராவிட்டால் அவள் இந்நேரம் தவறான முடிவுக்கு வந்திருப்பாள். பாவம் இல்லையா?

''அவளை உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் கூட என்னிடம் அனுப்புங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். இல்லையென்றால் அவளை அவள் ஊருக்கு அனுப்பி விடுங்கள்'' என்றார்.



''சாரி ஆன்ட்டி. இனி இது மாதிரி நடக்காது'' என்றான். கம்மிய குரலில். ''வர்றேன் ஆன்ட்டி'' என்று வந்து விட்டான்.

நௌதின் அறைக்கு வந்தான். ஹேமா அங்கு தான் இருந்தாள். கூட்டிப் பெருக்கி, அழுக்குத் துணிகளை எடுத்துவிட்டு, பெட், தலையணை உறை மாற்றித் துவைக்க எடுத்து வைத்துவிட்டு, பூச்சாடியில் பூக்களை அடுக்கிக் கொண்டிருந்தாள். அவன் உள்ளே வந்ததை அவள் கவனிக்கவில்லை.

கதவில் சாய்ந்து கொண்டு அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் போட்டிருந்த சுடிதார் சாயம் போய் வெளுத்திருந்தது. அவள் போடும் டிரஸ்சின் விலை, அவளிடம் இருந்து வரும் இதமான நறுமணம், அவள் விரல்கள் வெண்டைப் பிஞ்சு போல் அத்தனை மென்மையாக நீண்டு இருக்கும்.

ஏதோ உள்ளுணர்வு அவளை உணர்த்த, அவள் திரும்பிப் பார்த்தாள். அவன் நின்றிருந்தான். அவள் திரும்பி அவள் வேலையில் கவனமாக இருந்தாள். அழுக்குத் துணிகளை எடுத்துக் கொண்டு, நிமிர்ந்து பார்க்காமல் கீழே இறங்கினாள்.

அவன் ''டிபனை எடுத்துக் கொண்டு மேலே வா...'' என்றான் அழுத்தமாக.

அவள் வேலைகளை முடித்துக்கொண்டு, டிபனை எடுத்துக் கொண்டு மேலே போனாள். அதை சீமா வந்து பிடுங்கிக் கொண்டு ''நீ போ. நான் கொண்டு கொடுக்கிறேன்'' என்றாள்.

''சரி'' என்று கொடுத்துவிட்டு இவள் போய்விட்
டாள்.

# 17

டிபனை சீமா எடுத்து வருவதைப் பார்த்துவிட்டு,
''அவள் எங்கே நீ எடுத்து வர்றே'' என்றான்.
''அவள் தான் எடுத்து வந்தாள். நான் தான் பிடுங்கிக்
கொண்டு வந்தேன்'' அவன் எதுவும் பேசவில்லை.
''வாங்கத்தான் நான் எடுத்து வைக்கிறேன். அவளை
இந்த வீட்டை விட்டு அனுப்ப வேண்டியது தானே.
அவளிடம் நீ யார் என்று எப்படிக் கேட்டாலும் பதிலே
சொல்ல மாட்டேங்கிறா. எது கேட்டாலும் ஒரு புன்னகை
மட்டும் செய்கிறாள். நான் வந்ததில் இருந்து கொடுக்
கும் டார்ச்சருக்கு வேற யாராவது இருந்தால் போடி என்று
போய்விடுவாள். இவள் அசைய மாட்டேங்கிறா'' என்
றாள்.

அவன் முகம் கல்லாக இருந்தது. எந்த உணர்ச்சியும்
முகத்தில் காட்டவில்லை.

சீமாவுக்கு ஆத்திரமாக வந்தது. 'இவனுக்கும், அவளுக்
கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்று. கல்லுளி
மங்கன் மாதிரி எது சொன்னாலும் பேசாமல் இருக்கிறான்'
என்று பல்லைக் கடித்தாள்.



மாலையில் ஹேமா தோட்டத்தில் வேலை பார்த்துக்
கொண்டிருந்தாள். நௌதின் அவளிடம் பேச வேண்
டுமே மேலே வரச் சொன்னால் சீமா விடமாட்டேங்கிறா.
இவள் எப்போ பார்த்தாலும் அடுப்படியில் தான் இருக்
கிறாள். இப்போ போய் தோட்டத்திலும் பேச முடி
யாது என்று நினைத்து, அவன் அம்மாவிடம் ''என்
பாத்ரூம் வழுக்குது. நான் காலையில் விழுந்திருப்பேன்.
சீமாவைக் கொஞ்சம் வந்து கழுவிவிடச் சொல்லும்மா''
என்றான்.

அவர் அதுக்கு ''ஏன் சீமா எதற்கு? வீட்டில் தான் ஒரு
தண்டச்சோறு இருக்கே. அவளைக் கூப்பிட்டு கழுவச்
சொல்கிறேன்'' என்றார்.

அவனும் இதை எதிர் பார்த்துத்தான் சொன்னான்.
ஹேமாவைக் கூப்பிட்டு ''போய் நல்லா கழுவிவிட்டு
வா'' என்றார்.

இவளும் மேலே போனாள். நௌதின் கதவைச் சாத்தி
விட்டு வந்து அவளை உட்காரச் சொன்னான்.

''நான் பாத்ரூம் கழுவ வந்தேன்'' என்றாள். எங்கோ
பார்த்துக் கொண்டு.

''அதெல்லாம் நல்லாத்தான் இருக்குது. நான் உன்
னிடம் பேச வேண்டும். அதான் உன்னை வரச் சொன்
னேன். இப்படி உட்கார்'' என்றான் பக்கத்தில் தட்டி

அவள் மூடிய கதவையும், அவன் தட்டிய இடத்தையும்
பார்த்துவிட்டு தனி சோபா ஒன்றில் அமர்ந்தாள்.

''நான் நேரடியாகவே உன்னிடம் கேட்கிறேன். நான்
உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்'' என்
றான்.

அவள் 'சடாரென' அவனை நிமிர்ந்து பார்த்தாள். 'நான் அன்று இதுக்குத்தானே அவ்வளவு கெஞ்சினேன். அன்று மறுத்துவிட்டு இன்று என்ன வந்தது. இப்பொழுது கல்யாணம் பண்ணிக் கொள்ள' என்று நினைத்தாள்.

அவளிடம் எந்த ஒரு அதிர்வோ, சலனமோ இல்லை. பேசாமல் அமர்ந்திருந்தாள்.

''நான் கேட்பது உன் காதில் விழவில்லையா...?'' என்றான் அழுத்தமாக. அந்தக் குரல் கனமாக இருந்தது. அவள் உடம்பு லேசாக நடுங்கியது.

''எனக்குக் கல்யாணம் வேண்டாம். நீங்கள் யாரையாவது கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள்'' என்றாள்.

''உன்னிடம் நான் அட்வைஸ் கேட்கலை. உன் முடிவைக் கேட்கிறேன். போனால் போகுது என்று உன் சம்மதத்தைக் கேட்டால் ரொம்பப் பேசுறே. உன்னை இழுத்துக் கொண்டு போய் தாலி கட்ட என்னால் முடியாதா...?'' என்றான் கர்வமாக.

அவள் மனம் வேதனைப்பட்டது. ''இப்பக்கூட என்னை நீங்க நினைத்துப் பார்க்கவில்லை. என் மனம், ஆசை, எதிர்பார்ப்பு, விருப்பு, வெறுப்பு எல்லாம். நீங்கள் நினைத்ததை உடனே சாதிக்க வேண்டும். என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள எவன் சொன்னான். ஏன் என்றால் உங்களுக்குத்தான் சுய புத்தி இல்லையே. அதான் கேட்டேன்'' என்றாள் பொறுமையாக.

அவனுக்குக் கோபம் வந்தது. ''இதப்பார். எனக்கும், பொறுமைக்கும் வெகு தூரம் என்பது உனக்கு நன்றா



கவே தெரியும். அதனால் நான் கேட்கும் கேள்விக்கு ஒழுங்கா பதில் சொல்.''

''எதுக்குச் சொல்லணும். நீங்க யார்...? நான் இந்த வீட்டை விட்டுப் போய்விடுவேன். எனக்குச் சம்மதம் இல்லை. உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள. நான் இனி மனதாலும் நினைப்பேனா...? கல்யாணத்தைப் பற்றி அன்று என்னைத் துடிக்க வைத்தீங்களே அதை மறக்க முடியுமா...? உங்களை நம்பி நான் வந்ததுக்கு அனுபவிக்கிறேன். இன்னும் கல்யாணம் பண்ணிக் கொண்டால் என்ன என்னைச் செய்வீங்களோ தெரியாது. என்னை விட்டு விடுங்கள். நான் போய்விடுகிறேன்.''

''எங்கே போவாய்'' என்றான் கிண்டலாக.

''ஏன் எங்கோ போய் என் உயிரை விடக்கூடவா எனக்கு உரிமையில்லை. நான் வாழ்ந்த வரைக்கும் போதும். உங்களால் நான் அனுபவித்த சுகம் போதும்'' என்றாள்.

''நான் முடிவாகச் சொல்கிறேன். நீ என்னைக் கல்யாணம் பண்ணித்தான் ஆகணும்'' என்றான் கட்டளையாக.

''என்ன மிரட்டுறீங்களா...? உங்களால் முடிந்தால் செய்யுங்கள்.''

''நான் செய்யவில்லையென்றால், ஆண் பிள்ளையே இல்லை'' என்றான்.

அவள் இகழ்ச்சியாக உதட்டைச் சுழித்தாள்.

''என்ன உதடு சுழிப்பு வேண்டியிருக்குது...?''

''இல்லை. நீங்கள் ஆண் பிள்ளை என்றீர்களே, அதை நினைத்துச் சிரித்தேன்'' என்றாள்.

அவனுக்கு சினம் தலைக்கேறியது. கண் கோவைப் பழம் போல் சிவந்து விட்டது. ''அன்று நீ உணரவில்லையா...? நான் முழுமையான ஆண் மகன் என்று'' குத்தினான்.

அவள் இதயத்தில் இரத்தம் வடிந்தது. அவனைக் குதறி விடும் வேகத்தில் ''ஒரு பெண்ணை நிர்ப்பந் தப்படுத்தி, சூழ்நிலைக் கைதியாக்கி, செத்த பாம்பை அடிப்பது போல் ஒரு பெண்ணை அடைவது, ஒரு ஆண் மகனுக்கு அழகா...?

''நான் விரும்பி என்னை மனசார உங்களிடம் ஒப் படைக்க வேண்டும். அதுபோல உங்களையும், நான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு தான் நான் சொல்ல வேண்டும். நீங்கள் ஒரு ஆண் மகனா என்று.

''நல்லதோ, கெட்டதோ தன்னை நம்பி வந்தவளைக் கண் கலங்காமல் வைத்து அவளுடன் குடும்பம் நடத்தி, குழந்தைகளைப் பெற்று, தொழிலும் தன்னம்பிக்கை யுடன் தலை நிமிர்ந்து நின்று, கட்டினவள் ஒருத்தியோடு வாழ்ந்து, அவளை பெற்றவர்களிடமோ, மற்றவர்களி டமோ, கையேந்த விடாமல் உனக்கு நான் இருக்கிறேன் என்று பக்கபலமாக இருப்பது தான் ஒரு ஆண் மகனுக்கு அழகு. பல பெண்களுடன் வாழ்வதால் பெரிய ஆம் பிள்ளை என்ற நினைப்பா... உங்க மனதில்?'' என்று வாய் மூடுமுன்.

அவன் சோபாவில் இருந்து எழுந்து பக்கத்தில் இருந்த நாற்காலியை தூக்கி அவள் தலையில் போட வந்தான்.



அவள் அப்படியே குனிந்து உட்காந்துவிட்டாள். என்ன பேசினாலும் பயம் அவள் உடம்பில் ஓடியது.

என்ன நினைத்தானோ அவள் மேல் போடாமல் பக்கத்தில் போட்டுவிட்டு, சன்னல் அருகே போய் நின்று வெளியே வெறித்தான்.

அவன் போட்ட வேகத்தில் நாற்காலி சுக்குச் சுக்காக நொறுங்கியது. அது தன் மேல் விழுந்திருந்தால் என்னா வது என்று நினைத்தாள்.

அவன் சடாரெனத் திரும்பி, ''உன்னை எப்படிச் சம் மதிக்க வைப்பது என்று எனக்குத் தெரியும்'' என்று ட்ராவில் இருந்து சில போட்டோவை எடுத்து அவள் முன் போட்டான்.

அதை எடுத்துப் பார்த்தவள் அப்படியே பார்வை நிலை குத்தி மூச்சே நின்றுவிடும் அளவிற்கு இருந்தது. அந்த இரவு கூட இவ்வளவு அதிர்ச்சியில்லை. இந்த போட்டோவைப் பார்த்து அவ்வளவு அதிர்ந்தாள்.

கை நடுங்கி போட்டோ கீழே விழுந்தது. அவனை வெறித்துப் பார்த்தாள். அவன் முகத்தில் புன்னகை அரும்பியது. எப்படி என்று. தன் ஒற்றைப் புருவத்தை தூக்கி காட்டினான்.

அவளுக்குப் பொங்கிக் கொண்டு வந்தது. ''என் இப்படிச் செய்தீங்க. உங்களுக்கு மனசாட்சியே இல்லையா...? நான் உங்களை எவ்வளவு முழுமையாக நம்பினேன். உங்களை நம்பித்தானே வீட்டை விட்டு வந்தேன். வந்த என்னை இப்படிக் கொடுமைப் படுத்த லாமா...?''

''நான் எவ்வளவு கெஞ்சியும் என்னைக் கல்யாணம் செய்ய மறுத்துவிட்டீங்க. இப்ப எதுக்காக என்னை மிரட்டுறீங்க என்று எனக்குத் தெரியவில்லை. இப்படி என்னை மிரட்டிக் கல்யாணம் பண்ணி நீங்க என்னத்த சாதிக்க போறீங்க. நான் தான் உங்கள் வாழ்க்கையில் இருந்தே விலகி வந்து விட்டேனே பிறகு என்ன.''

''......''

''என் உணர்வுகள், உணர்ச்சிகள் அத்தனையும் கொன்று விட்டீங்க. என்னிடம் என்ன இருக்குது. எனக்கு பயமாக இருக்குது. கல்யாணம் என்ற போர்வையில் என்னை என்ன பண்ணப் போறீங்க'' என்று எழுந்து சென்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

''......''

''யாரிடமாவது என்னை... ஐயோ சொல்லவே என் நா கூசுதே. நான் உங்களுக்கு என்ன தீங்கு செய்தேன். உங்களை மனதில் நினைத்தது தவிர. உங்க அன்பு உண்மையான அன்பு என்று நினைத்து ஏமாந்துவிட்டேனே. நான் என்ன செய்வேன். எனக்கு சாகக்கூட வழி தெரியலையே'' என்று அவன் மார்பிலேயே சாய்ந்து அழுதாள்.

''என்னை உங்க கையாலேயே கொன்று விடுங்கள். அப்பவாவது உங்க வெறி அடங்குதா என்று பார்ப்போம்.''

அவன் இரும்பாக நின்றான். ''நீ இதற்குச் சம்மதிக்கவில்லையென்றால், நான் இதை அப்பாவிடம் காட்டுவேன். அம்மா, முரளி எல்லோரிடமும் காட்டுவேன். உன்



முடிவை கூடிய *சீக்கிரம்* சொல்ல வேண்டும்'' என்று வெளியே சென்றுவிட்டான்.

## 18

திருமணம் முடிந்துவிட்டது. ஹேமா அதற்குப் பிறகு வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. மறுவாரம் வந்து அவளிடம் கேட்டான். அவள் பதில் சொல்லாமல் பேசாமல் இருந்தாள்.

''உன் மௌனத்தையே நான் சம்மதமாக எடுத்துக் கொள்கிறேன்'' என்றான் கண்களில் கூர்மையுடன்.

வீட்டில் அம்மாவுக்குத் தெரிந்ததும் வீடே அமளிப் பட்டது. ''ஏன்டா உனக்கு தலையெழுத்து. இவ யார் என்றே தெரியவில்லை. எங்கிருந்து வந்தாளோ, இவள் குடும்பம் என்ன, குலம் என்ன என்று தெரியாமல் இவளைப் போய் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்கிறாயே. இவ்வளவு நாள் உன் அப்பாதான் பைத்தியம் பிடித்திருந்தார் என்று நினைத்தேன். இப்ப உனக்கும் பிடித்துவிட்டதா..? நான் சம்மதிக்க மாட்டேன்'' என்றார்.

நௌதின் ஒரே வார்த்தையாக, ''அம்மா.. எனக்கு அவளைப் பிடித்திருக்கிறது. அவளைத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்'' என்றான் அழுத்தமாக. ஆனால் முடிவாக.

அவன் அம்மா அதற்குப் பிறகு ஒரு வார்த்தை பேச வில்லை. அவன் சொல்லுக்கு, அந்தக் குரலுக்கு அத் தனை சக்தி இருந்தது.

சீமா நௌதினிடம் குதித்தாள். ''என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, இப்போ இந்த வேலைக்காரியை கல்யாணம் பண்ணிக் கொள் கிறேன் என்று சொல்றீங்க.'' என்று கத்தினாள்.

''உன்னிடம் என்றைக்காவது நான் உன்னைக் கல் யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று சொல்லியிருக் கேனா..?'' என்றான்.

''வாயால் சொன்னால் தானா. அன்று தோட்டத்துக்கு பிக்னிக் போன போது ஹேமா முன்னாடியே எனக்கு ஊட்டி விட்டீங்க'' என்றாள்.

''சிக்கன் உனக்கு ரொம்ப பிடிக்குது என்றாய். உன் தட்டில் இல்லை. அதனால் எடுத்து உன் வாயில் வைத்து விட்டேன்.''

''பொய் நான் நம்பமாட்டேன். ஏற்கனவே உங் களுக்கும், ஹேமாவுக்கும் தொடர்பு இருக்குது. என்ன காரணத்தினாலோ பிரிந்து இருக்கீங்க. அவளை வெறுப் பேத்தத்தான் அன்று என்னிடம் குழைவாக நடந்து கொண்டீங்க.''

''ஆமாம். கரெக்ட். இப்ப என்ன செய்யணும் என்று சொல்றே. பேசாமல் ஊருக்குப் போற வழியைப் பாரு. என்னிடம் உன் ஜாலம் எல்லாம் செல்லாது.''

''என்னை விட அவள் எந்த விதத்தில் உயர்ந் தவள்.''



''எல்லா விதத்திலும் உன்னை விட உயர்ந்தவள். எனக்கு பிடித்திருந்தால் போதும். உன் விமர்சனத்தை நான் கேட்கவில்லை.''

அன்று இரவு ஹேமா அவன் அறைக்குச் சென்று உட்கார்ந்து இருந்தாள். நௌதின் ஒரு வேக நடையுடன் உள்ளே வந்தான். லைட்டை அணைத்திருந்தாள்.

வந்தவன் லைட்டைப் போட்டான். திரும்பியவன் அவளைப் பார்த்து அதிர்ந்தான். அவன் நெஞ்சே ஆடியது. அவன் இரும்பு இதயமும் ஆடியது.

''வினயா... என்ன இது'' அவன் குரல் லேசாக பிசிறு தட்டியது.

வேகமாக அவள் அருகில் சென்று பக்கத்தில் கிடந்த சேலையை எடுத்து அவள் மீது போர்த்திவிட்டான். ''உன் முட்டாள் தனத்திற்கு அளவே இல்லையா'' என்றான் கோபமாக.

அவள் பதில் எதுவும் சொல்லாமல், அசையாமல் இருந் தாள். அவன் ஒரு தலையணை, பெட்ஷீட் எடுத்துக் கொண்டு பக்கத்து அறைக்குச் சென்று கதவை அறைந்து சாத்தினான்.

அவள் எவ்வளவு நேரம் அப்படி உட்கார்ந்திருந்தாளோ தெரியவில்லை. மணி நான்கு அடித்தது. அப்பொழுது தான் உணர்வு வந்தது போல் எழுந்து உடைகளை அணிந்து கொண்டாள்.

அவன் எங்கே என்று அறை முழுவதும் தேடிப் பார்த்தாள். அவன் இங்கில்லை. பக்கத்து அறைக்கதவு மூடியிருந்தது. அங்கு படுத்திருப்பான் போல. கட்டிலில்

ஒரு ஓரத்தில் சுருண்டு படுத்தவள் அப்படியே உறங்கிப் போனாள்.

காலை மணி எட்டு. வினயா எழுந்திரிக்கவில்லை. நௌதினும் கொஞ்சம் லேட்டாகத்தான் எழுந்து வெளியே வந்தான். அவன் அவளிடம் வந்து முகத்தை உற்றுப் பார்த்தான். ஏதோ நினைவு வந்தது போல் தலையை உதறிக் கொண்டு சென்றுவிட்டான்.

நௌதின் வேலைகளை முடித்துக் கொண்டு, சாப்பிடப் போனான். அவன் அம்மா ''எங்கேடா அவள். இன்னும் எழுந்திரிக்கவில்லையா...? ஒரு ஆம்பளை நீ எழுந்து குளித்துவிட்டு வந்துட்டே. ஒரு பொம்பளை இன்னும் தூங்குறா. கழுத்தில் தாலி ஏறியதும் பார்த்தி யாடா திமிரை. இப்பவே என்னை மதிக்காமல் எப்படி இருக்கிறா பாரு. இத்தனை நாள் எப்படி இருந்தாள். இன்று எப்படி இருக்கா'' என்று கத்தினார்.

செல்வராஜ் ''ஏன் இப்படி கூப்பாடு போடுறே. சின்ன பெண் கொஞ்ச நேரம் தூங்கினா என்ன குடியா முழுகிப் போகும். நீயும் ஒரு பெண் தானே. உனக்கு இதெல்லாம் தெரிய வேண்டாம். இப்படி மகனிடம் பேச உனக்கு வெக்கமாயில்லை'' என்றார் கோபமாக.

''என்னை அடக்க வந்திடுங்க. நான் வாயைத் திறந் தாலே... உங்களுக்கு உடம்பெல்லாம் எரியும்'' என்று கழுத்தை நொடித்தார்.

நௌதினுக்குச் சிரிப்பாக இருந்தது. சத்தம் கேட்டு எழுந்து அவசரமாக கீழே வந்தாள் ஹேமா. எல்லோரும் சாப்பிட அமர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு ''சாரி கொஞ்



சம் நேரம் ஆகிவிட்டது. இதோ வருகிறேன்'' என்று தட்டை எடுத்து டிபன் வைத்தாள்.

''கொஞ்ச நேரம் என்ன. இன்னும் இரண்டு மணி நேரம் ஆனால் மதிய சாப்பாடே சாப்பிடலாம்.''

அவள் டிபன் எடுத்து வைப்பதைப் பார்த்துவிட்டு ''ஏண்டீ... குளிக்காமல் வந்து டிபன் எடுத்து வைக்கறியா...? நான் இன்று விரதம் வேறு'' என்று சாப்பாட்டுத் தட்டை எடுத்து வீசி எறிந்து விட்டு, சட்னி, சாம்பார் அனைத் தையும் கீழே தள்ளி ஊற்றி விட்டார்.

ஹேமா நடுநடுங்கிப் போனாள். 'தான் என்ன தவறு செய்தோம். குளிக்கவில்லை என்பது ஒரு பெரிய குற்றமா..? போய் குளி. டிபன் எடுத்து வைக்க வேண் டாம் என்றால் ஒரு வார்த்தையில் முடிந்துவிடும். இதுக் குப் போய் இத்தனை ஆர்ப்பாட்டமா..?' என்று நினைத் தாள்.

மீதி இருந்த சட்னியை அவள் தலையில் ஊற்ற வந்தார். அதற்குள் செல்வராஜ் ''ஹேமா நீ மேலே போ'' என்றார். அவள் திரும்பிப் பார்க்காமல் மேலே போய்விட் டாள்.

''ஏண்டி உனக்கு அறிவிருக்கா. ஒன்று சொல் புத்தி யாவது இருக்கணும். இல்லை சுய புத்தியாவது இருக் கணும். இரண்டும் இல்லாத உன்னிடம் பேசிப் பயன் இல்லை. நீயே சாப்பிட்டுக் கொள்'' என்று விருட் டென்று வெளியே போய்விட்டார்.

''பார்த்தியாடா உன் பொண்டாட்டி, எங்க இரண்டு பேருக்கும் சண்டை மூட்டிவிட்டுப் போய்விட்டாள்.''

நௌதின் எதுவும் பேசாமல் சென்றுவிட்டான். வீட்டில் நடப்பதை நினைத்துச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை. அவன் சென்னைக்குக் கிளம்பி போய் விட்டான். இது ஹேமாவுக்குத் தெரியாது.

இரண்டு மாதமாக வீட்டுக்கு வரவில்லை. எல்லோரிடமும் போன் பண்ணிப் பேசினான். அவளிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. ஹேமா எதையும் வெளிக் காட்டாமல் வளைய வந்தாள்.

வசந்தாவின் பேச்சு எல்லை மீறியது. மகன் இருந்தாலாவது ஓரளவுக்கு ஒரு மரியாதை இருந்தது. இப்பொழுது மகன் மனைவியை மதிக்கவில்லை என்று தெரிந்தவுடன். அவர் மாமியார் என்ற அந்தஸ்தை காட்டினார். ஹேமா ரொம்ப நொந்து போனாள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த செல்வராஜ். மகனுக்கு போன் பண்ணி வரச் சொல்லி, ''உன் மனைவி இங்கிருந்தது போதும். நீ சென்னைக்கு கூட்டிக் கொண்டு போய் குடும்பம் நடத்துறியா..? இல்லை உன் அம்மாவிடம் பேச்சு பொறுக்க முடியாமல் அவளைத் தற் கொலை செய்துக்கச் சொல்றீயா...? என்பதை தெளிவாகச் சொல்லிவிட்டுப் போ'' என்றார்.

## 19

''வினயா கிளம்பு நாளைக்கு சென்னைக்கு போகலாம்'' என்றான்.



மறுபேச்சு பேசாமல் கிளம்பி வந்தாள். மாமியார், மாமனார் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு ''போய்ட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு. 'இதை விட எனக்கு அங்கு என்ன காத்திருக்கோ. இங்காவது எனக்கு பாதுகாப்பாவது இருந்தது. அங்கு எனக்கு என்ன நடக்குமோ' என்று நினைத்து கலங்கிய கண்களுடன் காரில் ஏறினாள்.

நௌதினும் அவளிடம் எதுவும் பேசவில்லை. இரவு வீட்டிற்குச் சென்றனர். உள்ளே நுழையும் போதே அவளுக்கு பழைய நினைவு வந்து அவளை வாட்டியது. மனதை நிலையாக வைக்க முடியவில்லை. கை, கால், எல்லாம் அவளையறியாமல் உதறியது. அந்த அறை, அந்த இடம், இந்த சோபா எல்லாம் நினைவில் வந்தன.

தன்னை அடக்க முடியாமல் நடுக்கத்தை குறைக்க உதட்டை பற்களால் அழுந்த கடித்தாள். கடித்த இடத்தில் இருந்து இரத்தம் கசிந்தது. நௌதின் இதை கவனித்தான்.

ஒரு அறையை காட்டி ''இதை நீ பயன்படுத்திக் கொள்'' என்று சொல்லிவிட்டு போய்விட்டான். அங்கு வேலைக்கு ஆட்கள் இருந்தனர். இவள் செய்வதற்கு ஒன்றுமில்லை.

மறுநாள் அவளை கூப்பிட்டு, ''என் தேவைகளை எல்லாம், இனி நீதான் கவனிக்க வேண்டும்'' அங்கு அவள் பேசாமல் நிற்கவும், ''என்ன நான் சொல்வது காதில் விழவில்லையா...?'' என்றான்.

''சரி''என்று தலையை மட்டும் ஆட்டினாள்.

மறுநாள் காலை அவனுக்கு காபி கொண்டு போனாள். காலையிலேயே குளித்து பளிச்சென்று உடுத்திக் கொண்டு, அவனுக்கு கலந்து கொடுத்துவிட்டு சன்னல் புறம் திரும்பி தோட்டத்தை பார்த்தாள்.

''நீ காபி குடிச்சியா'' என்றான்.

''இல்லை'' என்று தலையாட்டினாள்.

''நீயும் குடி'' என்றான் அழுத்தமாக.

அந்தக் குரலில் கப்பில் காபியை ஊற்றி கை நடுங்க குடித்தாள். அவன் பார்வை அவளை துளைத்தது. முதலி லேயே அவள் மெல்லிய உடல். இப்பொழுது ரொம் பவும் மெலிந்து இருந்தாள்.

காபியை குடித்துவிட்டு அவன் பேப்பர் படித்தான். அவளுக்கு இங்கு இருப்பதா இல்லை எழுந்து போவதா என்று தெரியாமல் திருதிருவென விழித்தாள்.

போகலாம் என்று எழுந்தாள்.

அவன் ''ஏன் முக்கியமான வேலை எதுவும் இருக்கா'' என்றான்.

''இல்லை'' என்று தலையசைத்தாள்.

''ஏன் வாய் திறந்து சொன்னால் உன் வாயில் இருந்து முத்தா உதிர்ந்துவிடும். நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லியாகணும் நினைப்பில் வை. நான் குளிக்கப் போகணும். போய் டிரஸ் எடுத்து வை'' என்றான்.

இவள் அவன் அறைக்குள் சென்றாள். பீரோவைத் திறந்து எந்த டிரஸ்சை எடுத்து வைக்கணும் என்று



தெரியாமல் மலைத்து நின்றாள். அவன் குளித்துவிட்டு துண்டை சுற்றிக் கொண்டு வந்தான்.

''என்ன யோசனை பண்ணிக்கிட்டு இருக்கே. இவ னுக்கு எதுக்கு நாம் டிரஸ் எடுத்து வைக்கணும் என்றா...?''

''இல்லை எதை எடுத்து வைப்பது என்று தெரியாமல் தான்...''

கீழே சுற்றி, முற்றி தேடிப் பார்த்தான். ''ஐயோ! காண வில்லையே'' பதறினான்.

இவளுக்கு ஒன்றும் புரியவில்லை. எதை இப்படி தேடுகிறான் டிரஸ் கூட போடாமல் என்று. ''என்ன காண வில்லை'' என்றாள் மெதுவாக.

''முத்து கீழே கொட்டிற்று அதான் தேடினேன். கிடைத்தால் எடுத்து கோர்த்து உனக்கு போடலாம் என்று தான்'' என்று கண்களால் சிரித்தான்.

அந்த சிரிப்பு அவள் மனதை அடைத்தது. எத்தனை கேலிகள், கொஞ்சல்கள், சிணுங்கல்கள் நினைவில் வந்து போயின.

''நீ எதை வைத்தாலும் நான் போட்டுக் கொள்வேன். இனி உன் இஷ்டம் தான். மனைவி சொல்லை தட்டாமல் நடப்பவன் நான்'' என்றான், கேலிக்குரலில்.

அவள் ஒரு டிரஸ்சை எடுத்துக் கொடுத்தாள். அவன் ''இது நல்லாயிருக்குது'' என்றான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் பரந்த மார்பும், அகன்ற தோள்களும், பார்வையை தழைத்துக் கொண்டாள்.

டிரஸ்சை போட்டுக் கொண்டு பட்டனை போட்டு விடச் சொன்னான் அவள் தயங்கினாள்.

''போடு வினயா. எனக்கு நேரம் ஆகுது. இது கூட எனக்கு நீ செய்யக்கூடாதா...? வீட்டில் சும்மா தானே இருக்கே.''

அவள் பட்டன் போட்டுவிட்டாள். மிக அருகில் நின்றதால் அவளின் வாசம் இதமாக இருந்தது. அவனுக்கு கை பரபரவென இருந்தது. கட்டி அணைக்க வேண்டும் என்ற ஆவலை கட்டுப்படுத்திக் கொண்டான்.

''இந்த டிரஸ் எனக்கு நல்லா இருக்கா வினயா..?''

அவள் நிமிர்ந்து பார்க்காமலேயே ''நல்லாயிருக்குது'' என்று தலையசைத்தாள்.

''அதெப்படி என்னை பார்க்காமலேயே சொல்றே. என்னை நன்றாகப் பார்த்துச் சொல்'' என்றான்.

பார்க்காமல் விடமாட்டான் என்று அவனை நிமிர்ந்து பார்த்துச் சொன்னாள் ''நல்லாயிருக்குது'' என்று.

''சரி வா. டிபன் எடுத்து வை'' என்றான். இவளும் கூடவே வந்து டிபன் எடுத்து வைத்தாள்.

''ஏன் பேசாமே நிக்கிறே. நீயும் சாப்பிடு. இருப்பது இரண்டு பேர். சாப்பிடுவது ஆளுக்கொரு நேரமா..?'' என்றான்.

மறுபேச்சு பேசாமல் தட்டை எடுத்து வைத்து சாப்பிட்டாள்.



''உனக்கு இரண்டு இட்லி போதுமா'' என்றான் வெடுக்கென்று.

''இதைக் கொஞ்சம் அன்பாக கேட்டால் என்ன. ''ம்...'''' என்றாள்.

''நல்லாச் சாப்பிடு. இன்னும் கொஞ்சம் பொங்கல் வைத்துக் கொள். யார் செய்தது. நீ செய்தாயா...?''

''ஆமாம்'' என்றாள்.

''அதான் ரொம்ப நல்லாயிருக்குது. இன்னும் கொஞ்சம் வை'' என்றான். ''என்ன இவ்வளவு வைத்துவிட்டாய். இந்தா நீ கொஞ்சம் வைத்துக் கொள். நான் ஆபீஸ் போய் வேலை பார்ப்பதா இல்லை தூங்குவதா..?''

தினமும் இது தொடர்ந்தது. தேவை என்றால் தவிர இருவரும் பேசிக் கொள்வதில்லை. வினயாவுக்கு கஷ்டமாக இருந்தது. அவன் அவளை ஒதுக்கினான். எங்கு போனாலும் சொல்வதில்லை. நேற்று இரவு ரொம்ப லேட்டாக வந்தான். அவ்வளவு நேரம் உட்காந்து இருந்தாள். அவள் இருப்பதை பார்த்தும் பார்க்காத மாதிரி சென்றுவிட்டான்.

இவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ரொம்ப நேரம் ஆகியும் கீழே வரவில்லை. மெதுவாக ஏறி மேலே சென்றாள். குனிந்த தலை நிமிராமல் ''சாப்பிட வாங்க'' என்றாள். சத்தமே வரவில்லை. நிமிர்ந்து பார்த்தாள். அவன் அங்கில்லை.

திடீரென வந்து ''யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்...?''

''உங்...க..ளை சாப்பிடக் கூ..ப்..பிட வந்தேன்.''

''என்ன திடீர் கரிசனம் என் மேல். இத்தனை நாள் ஒரு தடவை கூடச் சாப்பிடச் சொல்லவில்லையே. சாப்பிட்டால் என்ன சாப்பிடாவிட்டால் என்ன என்று தானே இருந்தே...?''

அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. பேசாமல் நின்றாள்.

''நான் சாப்பிட்டாச்சு நீ போ...'' என்றான்.

மீண்டும் தயங்கி நின்றாள்.

என்ன என்பது போல் பார்த்தான்.

''உங்களுக்கு கல்பனா என்ற பெண் போன் பண்ணினாள்.''

அவன் முகம் கடுகடுத்தது. ''என்ன கேட்டாள்...?''

''நீங்க எங்கே என்று கேட்டாள்.''

''நீ என்ன சொன்னே...?''

''ஆபீஸ் போயிருக்காங்க. அங்கு போன் பண்ணுங்க'' என்றேன்.

''ம்... ம்...''

''நேற்றும் இரண்டு பேர் போன் பண்ணினாங்க. நீங்க மும்பை போகலாம் என்று சொன்னீங்களாம். எப்ப என்று தெரியவில்லை. அதான்'' என்றாள்.

''சரி நீ போ'' என்றான் ஆத்திரமாக.

அவள் கீழே வந்துவிட்டாள். போனை எடுத்து அவர்களை வாங்கு.. வாங்கு என்று வாங்கிவிட்டான். ''இனி எனக்கு நீங்கள் யாரும் போன் பண்ணக் கூடாது. எந்த காண்ட்டாக்டும் இனி வேண்டாம்.''



வினயா மீண்டும் நத்தை மாதிரி ஒடுங்கிவிட்டாள். அவளால் தாங்க முடியவில்லை. 'இவ்வளவு நாள் எப்படியோ. இனி மேலும் இப்படி நடப்பவனிடம் எப்படி இருப்பது. அவன் அப்படி நடப்பதற்கு காரணம் நீ தான்' என்று மனசாட்சி கூறியது.

'நா..னா.. ஆம். நீ ஒரு மனைவி என்ற அந்தஸ்தில் நடந்து கொண்டாயா..? அவன் எப்படி போனால் உனக்கென்ன.' அவள் மனம் தவியாய் தவித்தது. 'தன்னை ஏற்றுக் கொள்வானா...?' என்று. மனதில் ஆயிரம் ஆசைகளை வைத்துக் கொண்டு நடமாடினாள்.

அவள் மனம் ஏங்கியது. அவன் அணைப்பிற்கு. அவளுக்கே வெக்கமாக இருந்தது. இப்படி ஓர் எண்ணம் வரலாமா...? என்று. அவனிடம் அப்படி என்ன ஒரு ஈர்ப்பு. 'அவன் என்ன பாடு படுத்தினான். இனியும் அவனைப் பற்றி நினைக்கலாமா..?' தன் மனம் அவனையே நாடிச் சென்றது. அதை அடக்க முடியாமல் தடுமாறினாள்.

## 20

இரவெல்லாம் அழுது முகமெல்லாம் வீங்கி இருந்தது. முகத்தில் குளிர் தண்ணீர் அடித்து கழுவியும் வீக்கம் போகவில்லை.

அவள் முகத்தைப் பார்த்து நௌதின் புரிந்து கொண்டான். அழுதிருக்கா என்று. ஒரு வாரமாக அவனுக்கு எந்த வேலையும் அவள் செய்யவில்லை. அவனும் அவளைக் கட்டாயப்படுத்தவில்லை.

அந்த வாரத்தில் ஆபீசில் இருந்து ஆபீஸ் ஸ்டாப் எல்லோரும் டூர் கிளம்பினர். இது வருடா வருடம் போவது தான்.

நௌதினே அரேஞ் பண்ணுவான். செலவு அத்தனையும் ஆபீஸ்சோடது. அனைவரும் குடும்பத்தோடு வருவார்கள்.

வினயாவிடம் ''நம் ஆபீசில் இருந்து அனைவரும் டூர் போகிறோம். நாமும் போகணும். மூன்று நாளைக்குத் தேவையான டிரஸ் எல்லாம் எடுத்து வைத்துக் கொள்'' என்றான்.

''நான் வரவில்லை'' என்றாள். எங்கோ பார்த்துக் கொண்டு.

''பரவாயில்லை. என்னைப் பார்த்துக் கூடப் பேசலாம் வினயா. ஏன் வரவில்லை...?''

''எனக்குப் பிடிக்கவில்லை.''

''என்ன பிடிக்கவில்லை. இந்த டூரா... இல்லை என்னையா...?''

''நான் வரமாட்டேன்.''

''அதான் காரணம் கேட்கிறேன்...?''

''புரியாத மாதிரி நடிக்கிறவங்க கிட்டே என்ன பேச முடியும்.''



புருவத்தை சுளித்தான். ''புரியாத மாதிரி நடிக்கிறேனா..? சொல்வதைத் தெளிவாகச் சொல்'' என்றான் அதட்டலாக.

''இதுல ஒண்ணும் குறைச்சல் இல்லை. உதட்டைப் பிதுக்கினாள்.

''பிறகு எதில் குறைச்சல்'' என்றான் நமட்டுச் சிரிப்புடன். ''இன்னும் நான் கேட்ட கேள்விக்குப் பதில் வரவில்லை...?''

''நா..ன் எதுக்கு உங்களுடன். நான் வந்தால் உங்களுக்கு இடைஞ்சல் அதான்'' குரல் ஒரு மாதிரி குத்திற்று.

''நீ வந்தால் எனக்கு என்ன இடைஞ்சல்...?''

''உங்களுக்கு வேண்டியவங்க எத்தனையோ பேர் வருவாங்க. நான் எ..து..க்..கு'' என்று தான்.

அவன் அவளை ஊடுருவிப் பார்த்தான். அவன் பார்வை அவளை கத்தியாய் குத்திற்று.

''நீ அதற்கு இவ்வளவு சுற்றி வளைக்க வேண்டாமே. நீ அடுத்தவளுடன் போகும் போது நான் எதற்கு என்று கேட்டு இருக்கலாமே..?'' கோபத்தில் பற்களை கடித்தான். கைகளை இறுக மூடியிருந்தான்.

பின் நிதானமாக ''நான் ஒருத்தியையும் கூட்டி வரவில்லை. நீ பயப்படாம தாராளமாக வரலாம்.''

எல்லோரும் புறப்பட்டனர். அனைவரும் குடும்பத்துடன், குழந்தையுடன் வந்திருந்தார்கள். நௌதின் ''முன்னாடியே போய் அனைவரையும் ஏற்றிக் கொண்டு

வரும் வழியில் உன்னைக் கூட்டிப் போகிறேன். நீ கிளம்பி ரெடியாக இரு'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

வினயா தலை குளித்து முடியை தளரப் பின்னி, தலை நிறைய இருவாட்சி வைத்து, ஆகாய வண்ணச் சுடிதார். அதில் நிறைய பீட்ஸ், சமிக்கி, ஸ்பிரிங் மற்றும் குந்தன் ஒர்க் என்று கண்ணைப் பறித்தன. காதில் வைர சிமிக்கி அதனுடன் போட்டி போட்டன.

பஸ்சை நிறுத்திவிட்டு வினயாவை கூப்பிட வந்தான். வந்தவன் அவள் அலங்காரத்தைப் பார்த்துவிட்டு விசில் அடித்தான்.

''அம்மா என்ன இன்னிக்கு ஜொலிக்கிறீங்க'' என்று கன்னத்தை தட்டினான்.

அந்த அசைவில் ஜிமிக்கி ஆடியது. கற்களின் ஒளிக் கற்றை அவள் கன்னத்தில் டாலடித்தது. அவளை விழுங்கி விடுவது போல் பார்த்தான். அவள் முகம் சிவந்து தலைகுனிந்தாள்.

அவன் அவளை நெருங்கி அவள் முகம் நோக்கி குனிந்தான். பிறகு என்ன நினைத்தானோ, ''வா வினயா'' என்று பெட்டிகளை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

பஸ்சில் அனைவரும் வரவேற்றனர். அனைவருக்கும் ஒரு புன்னகையை பதிலாகத் தந்தாள். முதலில் கோயம்புத்தூர், பொள்ளாச்சி, வால்பாரை, மூணார் என்று திட்டம் போட்டிருந்தனர்.



வினயாவும் நௌதினும் ஒரு சீட்டில் அமர்ந்தனர். இவள் சன்னலோரம் உட்கார்ந்து கொண்டாள். குளிரவும் சன்னல் கதவை சாத்திவிட்டான். அவ்வளவு நெருக்கமாக உட்கார்ந்து இருப்பது அவளுக்கு குறுகுறுப்பாக இருந்தது.

''உனக்குத் தூக்கம் வந்தால் தூங்கு வினயா'' என்றான் மெதுவாக.

அவளும் தூங்காமல் ரொம்ப நேரம் விழித்துக் கொண்டு வந்தாள். பிறகு அவளை அறியாமல் தூங்கிப் போனாள். அப்படியே சரிந்து அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். அவனும் வாகாக அமர்ந்து கொண்டான்.

ஒரு பூச்செண்டு தன் மேல் இருந்ததைப் போல் இருந்தது. மல்லியின் மணமும், அவள் உபயோகித்திருந்த செண்ட்டின் மணமும், அவளின் அருகாமை எல்லாம் சேர்ந்து அவனைப் புரட்டிப் போட்டது. ஆதரவாக அவள் கையை எடுத்து தன் கைக்குள் வைத்துக் கொண்டான். தலையை மென்மையாக வருடிவிட்டான். அந்த சுகத்தில் அவனுடன் மேலும் ஒன்றி தூங்கிப் போனாள்.

காலையில் ஒரு பெரிய ஹோட்டல் முன் பஸ் நின்றது. அங்கு தங்கி குளித்துவிட்டு, காலை டிபன் சாப்பிட்டு கிளம்பினர்.

காலையில் நௌதின் எழுப்பித்தான் வினயா எழுந்தாள்.

அனைவரும் சுற்றிப் பார்த்தனர். சந்தோசமாக அனைவரும் பேசி கிண்டல் செய்தபடி இருந்தனர். வினயாவை கிண்டல் பண்ணினார்கள்.

''எங்களிடம் பேசவே மாட்டீங்களா..? எங்கள் பாஸ் சிடம் தான் பேசுவீங்களா...? அது கூட எண்ணித்தான் பேசுவீங்க போல. ஒரு வார்த்தை வெளியே கேட்க மாட்டேங்குது. எப்படி புரிந்து கொண்டு எங்கள் பாஸ் நடந்து கொள்கிறாரோ'' என்று கிண்டல் பண்ணி னார்கள்.

முகம் சிவந்து புன்னகை சிந்தினாள்.

''இதுக்கும் சிரிப்புத்தானா..? சார் நீங்க ஏன் சாயந்திரம் சீக்கிரமே வீட்டுக்குப் போறீங்க என்று இப்பத்தான் புரியுது.''

அவனும் மென்னகை புரிந்தான்.

அவள் கணவன், ''நீ என்னிடம் பேசினால், அந்த ஸ்டோர் முழுவதும் கேட்குமே அதுமாதிரி பேசச் சொல் றியா'' என்றான் கிண்டலாக.

''இவள் கல்யாணத்தின் இரவு என்னிடம் பேசினாள். மெதுவாகப் பேசாமல், மைக்கில் பேசுவது போல் பேசி, கல்யாணத்திற்கு வந்தவர்கள் அனைவரும் எங்கள் அறை வாயிலில் பாயை விரித்துப் போட்டு உட்கார்ந்து விட்டனர். ஏதோ மீட்டிங் நடக்குது'' என்று. சொல்லி முடிக்கவும் அங்கிருந்த அனைவரும் பலமாகச் சிரித் தனர்.

வினயா கூடச் சிரித்துவிட்டாள். எல்லோரும் பேசி சிரித்துக் கொண்டு சுற்றிப் பார்த்தனர். ஒரு குழந்தை அழகாக இருந்தது. அதைப் பார்த்த வினயாவுக்கு ஆசை யாக இருந்தது. நௌதின் காதில் ''எனக்கு அந்த குழந்தை வேண்டும்'' என்றாள் கிசுகிசுப்பாக.



''ஐயோ! அதை நமக்கு குடுக்கமாட்டாங்கம்மா'' என் றான் இதழோரம் துடிக்க.

''கொஞ்ச நேரம் தூக்கிவிட்டு குடுத்துவிடுகிறேன்'' என்றாள்.

அதற்குள் அவர்கள் பார்த்துவிட்டு ''என்ன உங்களுக் குள் ரகசியம். வீட்டில் இருவர் தானே இருக்கீங்க. அப்பொழுது பேசுவது பத்தாதா..? இங்கு வந்தும் இப்படி ரகசியம் பேசுவது முறையா..?'' என்றனர்.

நௌதின் ''அந்தக் குழந்தையை இவள் தூக்கணுமா'' என்றான்.

''இதுக்குப் போய் பாஸ்சிடம் ஏன் கேட்கணும். என் னிடமே கேட்டிருக்கலாமே. இந்தா பிடிங்க குழந்தையை'' நீட்டினாள்.

''குழந்தை மேல் ஆசையிருந்தால் சீக்கிரம் பெற்றுக் கொள்ள வேண்டியது தானே. ஏதாவது திட்டம் வைத் திருக்கீங்களா..?'' என்றாள் ஒரு வாயாடி.

நௌதின் ''திட்டமா..? அப்படி என்றால் என்ன..?'' என்று அப்பாவியாகக் கேட்டான்.

''பாஸ். உங்களுக்கு ஒன்றுமே தெரியாது பாருங்க. திட்டம் என்ன என்று எங்களிடமே கேட்கிறீங்க. இதை உங்கள் மனைவியிடம் கேளுங்கள். அவர்கள் சொல்லா மலா நீங்கள் இப்படி இருப்பீங்க'' என்றாள்.

நௌதின் வினயாவைப் பார்த்துச் சிரித்தான். அவள் கன்னங்குழியச் சிரித்தாள்.

''மேடம், சார் வீட்டில் எப்படி. நாங்கள் நேரம் தவறக் கூடாது என்று கடுமையாக நடந்து கொள்வார். உங்களிடம் எப்படி. அது மாதிரி தானா அல்லது எங்களிடம் மட்டுந்தானா உங்க வேலையெல்லாம்.''

''நாங்கள் எல்லாம் எங்க வீட்டுக்காரங்களுக்குப் பயப்படுறோமோ இல்லையோ. உங்க வீட்டுக்காரருக்கு பயந்துதான் நடக்கிறோம். ஆனா சார் உங்களுக்கு பயந்து நடப்பாங்க போல'' எல்லோரும் சிரித்தனர்.

''என் செல்வி உன் வீட்டில் சார் அப்படி நடந்தால், அது மாதிரி எல்லார் வீட்டிலும் நடக்குமா..? சார் பாவம் ரொம்ப இளைத்துப் போய் விட்டார். ரொம்ப வேலை வாங்குவே போல் இருக்கே...?''

''ஆமாம் சார். என்னை இரவு தூங்க விடுவதேயில்லை'' என்றான் சோகமாக. அதைக் கேட்ட அனைவருக்கும் சிரிப்பு பீரிட்டது.

''சார் உங்க மனைவி பற்றி சொல்லுங்கள்'' என்றார்கள்.

''என் மனைவி பற்றிச் சொல்ல என்ன இருக்கு. இவளும் உங்களை மாதிரிப் பெண் தான்.''

''நாங்க அதைப் பற்றி கேட்கலை. உங்க மேரேஜ் லவ் மேரேஜ்ஜா இல்லை அரேஞ் மேரேஜ்ஜா...?''

வினயாவைப் பார்த்துக் கொண்டே ''என்ன சொல்லட்டும் வினயா. என் மனைவியோட அனுமதி இல்லாமல் நான் எதுவும் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால் ரூம் போட்டு அடிப்பா'' என்று நடுங்கினான்.



''ரொம்ப பயந்த மாதிரி நடிக்காதீங்க சார். நாங்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் மழுப்புறீங்க'' என்றனர்.

# 21

பஸ்சிலும் பாட்டுப் பாடிக் கொண்டு சென்றனர். வினயா முறை வந்ததும் ''பாடுங்க.. பாடுங்க'' என்றனர் அனைவரும்.

''எனக்கு பாட வராது'' என்றாள் வெக்கமாக. ''இல்லை ஒரு லைனாவது பாடித்தான் ஆகணும்.''

நௌதினும் ''பாடு வினு'' என்றான். அவள் மெதுவாக **''ரகசியமானது காதல், மிக.. மிக ரகசியமானது காதல்''** என்று மிக மெல்லிய குரலில் முழுவதும் பாடினாள்.

அனைவரும் சத்தம் இல்லாமல் கேட்டனர். அவள் பாடும் போது இடையில் நௌதினும் சேர்ந்து கொண்டான். இருவரும் பாடி முடித்ததும், அனைவரும் பட.. பட வென கை தட்டினர். ''இரண்டு பேரும் இவ்வளவு நல்லாப் பாடுறீங்களே. வீட்டில் இருவரும் பாடிக் கொண்டே இருப்பீங்களா..?''

''அது சரி. இப்படியே பாடிக் கொண்டிருந்தால் வேற வேலையே எங்களுக்கு இல்லையா இரவு முழுவதும்,'' அவன் வினயாவின் நெற்றியில் மென்மையாக உதடு பதித்தான்.

''சார் இது பஸ். வேண்டும் என்றால் இறங்கி ரூம் போட்டு தங்கிவிட்டு வாங்க'' என்றான் ஒருவன். பஸ்ஸே சிரிப்பில் குலுங்கியது.

அந்தக் குழந்தையை வினயா வைத்திருந்தாள். அது பாத்ரூம் போய்விட்டது. குழந்தையை கொடுத்து விட்டாள். டிரஸ் நனைந்துவிட்டது. கசகசவென்று இருந்தது.

நௌதின் ''மாற்றிக் கொள்கிறாயா..?'' என்றான். ''ம்.. மாற்றிக் கொள்கிறேன். இப்போது எப்படி'' என்றாள். ''ஒரு ஹோட்டலில் போய் மாற்றிவிட்டு வரலாம்'' என்றான். ''சரி'' என்றாள்.

டிரைவரிடம் ஹோட்டலில் நிற்கச் சொன்னான். இருவரும் இறங்கிக் கொண்டு ''ஒரு பத்து நிமிடத்தில் வருகிறோம்'' என்று சொன்னான்.

''என் சார் அவசரம். நாங்கள் ஒன்றும் தப்பா எடுத்துக் கொள்ள மாட்டோம். நீங்க ஒரு மணி நேரம் சென்று வாருங்கள்'' என்றான்.

நௌதின் சிரித்துக் கொண்டே போய்விட்டான். ''குளிக்கட்டுமா'' என்றாள். ''குளித்தால் நேரம் ஆகிவிடும். அவர்கள் சொன்ன மாதிரி ஒரு மணி நேரம். தண்ணியை மட்டும் ஊற்றிக் கொண்டு டிரஸ் போட்டுக் கொண்டு கிளம்பு. நான் கீழே இருக்கட்டுமா'' என்றான்.

''வேண்டாம். எனக்கு பயமாக இருக்குது. இங்கேயே இருங்கள்'' என்றாள்.

''சரி'' என்று அவன் சோபாவில் அமர்ந்து இரண்டு காபிக்கு சொல்லிவிட்டு பேப்பர் பார்த்தான். அதற்குள் வினயா வந்துவிட்டாள். சேலையில் அழகிய பூங்கொடி போல் மின்னினாள்.



''காபியை குடி வினு. ஆறிப்போகப் போகுது. அந்த டிரஸ் எல்லாம் எடுத்து வைத்துவிட்டாயா..? என்றான். ''ம்.. எடுத்து வைத்துவிட்டேன்'' என்று காபியை குடித் தாள்.

''வேற என்ன வேண்டும் உனக்கு'' என்றான். ''சாக் லெட்டும், பிஸ்கட்டும் வேண்டும்'' என்றாள்.

வாங்கிக் கொண்டு கிளம்பினர். பஸ் கிளம்பியது. மதியம் சாப்பிட்டுவிட்டு பஸ்சில் அனைவரும் தூங் கினர். இரவெல்லாம் தூங்காததால் நௌதினும் தூங்கி னான். வினயாவின் தோளில் சாய்ந்து. அவள் என்ன சொல்ல முடியும். தூங்காதே என்று சொல்ல முடியுமா..? பேசாமல் வந்தாள். மற்றவர்களும் அப்படித்தான் தூங்கினர்.

இரவில் எப்பொழுதும் போல் கீழே படுத்துக் கொண் டாள். ஆனால் தூக்கம் வரவில்லை. மனம் நெகிழ்ந்து போயிருந்தது.

நௌதின் எழுந்து கதவை திறந்து கொண்டு வெளியே போனான். அவனுக்கும் தூக்கம் வரவில்லை. அவனுக்கும் நெஞ்சை அடைத்தது. நடந்ததெல்லாம் அவனுக்கு படம் போல் ஓடியது. அன்று அவள் கெஞ் சியது. தான் அவளை அவமானப்படுத்தியது. தான் செய்த தவறு அவளை தற்கொலை வரை தூண்டிவிட் டிருக்குது. இவன் நினைக்கவில்லை. இவள் இப்படி முடிவெடுப்பாள் என்று.

மறுநாளும் சந்தோசமாக பொழுதைக் கழித்தனர். பார்க்கில் உட்கார்ந்து கொண்டு பாட்டுக்கு பாட்டு விளையாடினர். நௌதின் முறை வந்ததும் பாடச் சொன்னார்கள்.

அவன் ''மெல்லினமே... மெல்லினமே நெஞ்சில் மெல்லிய காதல் பூக்கும். என் காதல் ஒன்றே உயர்ந்ததடி அதை வானம் அண்ணாந்து பார்க்கும்'' என்று மெலோடியாகப் பாடினான்.

அனைவரும் எழுந்து டான்ஸ் ஆடினர். வினயாவோ வேறு பக்கம் முகத்தை திருப்பிக் கொண்டாள். அதை நௌதின் கவனித்தான்.

மூன்று நாள் முடிந்ததும் அன்று இரவே கிளம்பினர். வினயாவுக்கு நல்ல அசதியாக இருந்தது. ரொம்ப சோர்வாக இருந்தாள். ''ஏன் என்ன செய்யுது'' என்றான். ''ஒன்றுமில்லை நல்லாத்தான் இருக்கு'' என்றாள்.

இரவு அவள் தூங்கியதும், அவளை மெதுவாக தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டான். அவளும் அயர்ந்து தூங்கினாள்.

எல்லோரையும் அவர்கள் வீட்டில் கொண்டு விடப்பட்டது. வினயாவும் நௌதினும் இறங்கிக் கொண்டனர். அவளுக்கு தூக்கம் கண்ணை சுழற்றியது. வந்து சோபாவிலே படுத்துக் கொண்டாள்.

''வினயா எழுந்து அறையில் வந்து படு'' என்றான். அவள் தூங்கிவிட்டாள். அவனும் அங்கேயே படுத்திருந்தான். சீக்கிரம் எழுந்துவிட்டான். வினயாவைப் பார்த்தான். அவள் சேலை விலகி இருந்தது. அதை சரி செய்து



விட்டு ஒரு போர்வையை எடுத்து அவள் மீது போர்த்தி விட்டுப் போய்விட்டான்.

அந்த வாரத்தில் குன்னூரில் இருந்து வசந்தாவும், செல்வராஜூம் வந்திருந்தனர். வசந்தாவை விட்டு விட்டு அவர் ஊருக்குச் சென்றுவிட்டார்.

வசந்தா வினயாவை வறுத்தெடுத்தார். ''இன்னும் குளிச்சிக்கிட்டுத்தான் இருக்கியா'' என்றார்.

அவளுக்கு திடீரென கேட்கவும் ஒன்றும் புரியவில்லை. நௌதின் முகத்தை பார்த்தாள். அவருக்கு கோபம் வந்தது. ''என்னடி நான் கேட்கிறேன். அவனைப் பார்க்கிறே. கட்டிக் கொண்டதுமே புருசனை கைக்குள் போட்டுக் கொள்ளணும் என்று தெரியுது. இது தெரியாதா.. உனக்கு?''

''ஆமாம் அத்தை குளித்துக் கொண்டு தான் இருக்கேன்.''

''கல்யாணம் ஆகி ஆறு மாதத்திற்கு மேல் ஆகிறது. இன்னும் ஒண்ணையும் காணோம். நல்லா மூணு நேரமும் தின்னுபுட்டு ஊரைச் சுத்து. வேளைக்கொரு அலங்காரம் பண்ணிக்கொண்டு. என்ன பிரயோஜனம்'' என்று நொடித்தார். இதை சொல்லியே அவளை திட்டிக் கொண்டிருந்தார்.

வினயா அறைக்கு வசந்தா வந்தார். ''என்னடி இந்த அறை யாருடையது...?'' ''என்னோடது தான் அத்தை.'' ''உன்னோடதா..? ஏன் தனியறையில் இருக்கே. நீ நௌதினோட இருப்பதில்லையா...?''

''இ..து சும்..மா. பகல் நேரத்தில் என்னோட பொருள். தனி..யா..க அதான்.''

''என்னடி உன்னோட பொருள். உன் அப்பன் வீட்டில் இருந்தா கொண்டு வந்தே. எல்லாம் என் மகன் வாங்கியது. அதில் என்ன ரகசியம். ஏதாவது என் மகனுக்குத் தெரியாமல் திருடி வைத்திருக்காயா...?'' என்றார் காட்டமாக.

வினயா நடுங்கிவிட்டாள். ''இல்லை அத்தை. இனி மேல் நான் அந்த அறைக்கு மாற்றிவிடுகிறேன்'' என்றாள்.

அன்று இரவு வினயா நௌதின் அறைக்குப் போய் கட்டிலுக்கடியில் ஓரமாகப் படுத்துக் கொண்டாள். நௌதின் வர நேரமாகும் என்று போன் பண்ணிச் சொல்லியிருந்தான். அதனால் வினயா வந்து படுத்துவிட்டாள். அவன் போன வேலை முடிந்துவிட்டதால் சீக்கிரம் வந்துவிட்டான். அவன் அம்மா அவனை பிடித்துக் கொண்டார்.

காலையில் வினயாவிடம் கேட்டதை மகனிடமும் கேட்டுத் திட்டினார்.

''சரிங்கம்மா எனக்கு தூக்கம் வருது. நான் போய் படுக்கிறேன்'' என்று சென்று விட்டான்.

## 22

அறைக்கதவை திறந்து கொண்டு உள்ளே போனான். இருட்டாக இருந்தது. லைட்டை போட்டான். கட்டிலின்



காலுக்கடியில் சுருண்டு படுத்திருந்தாள். ஃபேனும் போடவில்லை. ஏ.ஸி.யும் ஓடவில்லை. வியர்த்து இருந்தது. ஏ.ஸி.யைப் போட்டு ஃபேனையும் போட்டான். அவனுக்கு மனது கஷ்டமாக இருந்தது. 'இவளையும் அம்மா திட்டியிருப்பாங்க. அதான் இங்கே வந்து சுருண்டு படுத்திருக்கா' என்று நினைத்தான்.

படுத்தவனுக்கு தூக்கம் வரவில்லை. அன்று நடந்தது நினைவில் வந்தது. அப்பா கூப்பிட்டு ''இன்னும் உங்க சண்டை முடியவில்லையா?'' என்றார்.

அவன் அதிர்ந்து ''என்..ன..ப்பா சண்டை?'' என்றான்.

''அதான் உனக்கும் ஹேமாவுக்கும் நடக்கும் சண்டை.''

''அ..ப்..பா..பா'' என்றான் அதிர்ச்சியாக. ''வினயா சொன்னாலாப்பா.''

அவள் பெயர் வினயாவா..? அவள் சொல்லவில்லை. அன்று ட்ரெயினில் வந்தது. அவள் மாத்திரை சாப்பிட்டது. தானும், முரளியும் காப்பாற்றியது. அவள் கைப்பையில் உன் போட்டோ இருந்தது. அதை நான் அவளுக்குத் தெரியாமல் எடுத்து வைத்தது, அத்தனையும் சொன்னார்.

நான் எவ்வளவோ அந்தப் பெண்ணிடம் கேட்டும், அவள் ஊர், பெயர், யார் என்று எதுவும் சொல்லவில்லை. உன் போட்டோ இருந்ததாலே உன் பிரண்ட்ஸ் சிடம் விசாரித்துத் தெரிந்து கொண்டேன், நீ செய்த துரோகத்தை.''

''..........''

''அன்று நீ வந்ததும் உன்னைப் பார்த்து அதிர்ந்து காபியை கீழே போட்டாளே அதில் இருந்து நான் உங்

களை கவனித்துதான் வந்தேன். உன்னை நம்பி வீட்டை விட்டு வந்த பெண்ணை நீ இப்படிச் செய்து விரட்ட லாமா...?

''நா..ன் இவள் நடிக்கிறாள் என்று நினைத்தேன் அப்பா.

''காதல் என்ற வார்த்தையை நான் நம்பவில்லை. ஏன் என்றால் நீ பழகிய பழக்கம். அந்த மாதிரிப் பெண் களிடம் பழகிய உனக்கு எப்படி ஒரு நல்ல குடும்பத்துப் பெண்ணை நம்புவாய்.''

''அ...ப்..பா...பா...''

''எனக்கு எல்லாம் தெரியும். உன் வயது, வயசுக்கு மீறிய வருமானம், உன் சுதந்திரம், எல்லாம் உன்னைக் கெட்ட வழியில் இழுத்துச் சென்றன. உன்னைக் கண்டிக்க முடியாமல் நான் திண்டாடினேன். எப்படி ஒரு வயது வந்த மகனிடம் நான் என்ன சொல்ல முடியும். இந்த மாதிரி தப்பு செய்தால். என்ன நேரும் என்று தெருவுக்குத் தெரு, டி.வி. ரேடியோ, பேப்பர்ஸ் என்று, இது இல்லாத மீடியாவேயில்லை. நீ படித்தவன். உலகம் தெரிந்தவன். பிசினசில் எத்தனையோ மனிதர்களை சந்திக்கிறாய். உனக்கு நான் என்ன சொல்ல முடியும். தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்பார்கள். நீ கெட்ட வழியில் போவதைப் பார்த்து நான் எத்தனை நாள் கண்ணீர் வடித்திருப்பேன் தெரியுமா...?

''உன் வாயில் இருந்து உண்மை வரட்டும் என்றுதான் உனக்குப் பெண் பார்க்க ஏற்பாடு பண்ணினேன். அப் போதும் நீ உண்மையைச் சொல்லவில்லை. உன்னால் அந்தப் பெண்ணிற்கு எத்தனை அவமானம். என்னை யும், அவளையும், சேர்த்துப் பேசுறா உன் அம்மா. எனக்கு



எப்படி இருக்கும் சொல். ஒரு மகளைப் போன்றவளை இப்படிப் பேசினால் எப்படி. உனக்கு அன்று கூட மன சாட்சி உறுத்தவில்லை. நீ என்மேல் மரியாதை வைத் திருப்பது உண்மையென்றால் அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள். வேண்டாம் என்றால் பெத்த கடமைக்கு வேற பெண் பார்க்கிறேன். நீ செய்த பாவத்திற்கு அவள் என் கூடவே இருக்கட்டும். இதுவே உன் தங்கையாக இருந்தால், ஒரு அண்ணனாக என்ன நடவடிக்கை எடுப் பாய். அதான் கடவுள் உன் ஒருத்தனோடு நிறுத்திவிட்டார் போல'' என்று, எழுந்து சென்றுவிட்டார்.

அதன் பிறகுதான் நன்றாக யோசித்தான். அவள் தன்னிடம் பழகியது, அன்பைக் கொட்டியது, கெஞ்சியது, கதறி அழுதது, எல்லாம் நினைவுக்கு வந்தன. 'எப்படி துடித்திருப்பாள். எவ்வளவு மனம் நொந்திருந்தால் தற் கொலை வரைக்கும் போயிருப்பாள். அவளின் அன்பைப் புரிந்து கொள்ளாமல் எப்படி விரட்டினேன்.

அன்று அப்படிக் கேட்டாளே. நான் காதலித்த மாதிரி நடித்தேன். என் பிரண்ட்ஸ்சுகளுக்காக என்று சொன் னீங்களே. இன்று யாருக்காக என்னைக் கல்யாணம் பண் ணப் போறீங்க. இப்படி எதுக்காக நடிக்கிறீங்க என்று அழுதாளே. என் மீது துளி கூட நம்பிக்கையில்லை.' அவன் மனம் கசந்தது.

'வினு... உன்னை நான் மனசாரக் காதலிக்கிறேன். உன்னை விரும்பித்தான் கல்யாணம் பண்ணிக் கொண் டேன். இது எனக்குத் தெரிவதற்கு இத்தனை மாதங்கள் ஆயிற்று. என்னை நம்பு வினு' என்று மனதிற்குள் புலம் பினான்.

அவள் தரையில் படுத்தியிருந்தாள். ரொம்ப குளிர வும் குறுகிப் படுத்தாள். நௌதின் எழுந்து அவளை தூக்கி படுக்கையில் படுக்க வைத்தான். அவன் தொடு கையை உணர்ந்து அரக்கப் பரக்க உருண்டு கட்டிலில் இருந்து எழுந்து, 'ஐயோ' என்று போர்வையை எடுத்து போர்த்திக் கொண்டு கத்த ஆரம்பித்துவிட்டாள்.

அவனுக்கே ஒன்றும் புரியவில்லை. 'எதற்கு இப்படி கத்துகிறாள். கனவு எதுவும் கண்டிருப்பாளோ' என்று. ''வினயா இங்கே பார் நான் தான். எதுக்குப் பயப்படுறே'' என்று அவள் கையைப் பிடித்தான்.

அவள் ஓட ஆரம்பித்தாள். அழுது கொண்டே ''அன்னைக்கு என்னை போட்டோ எடுத்தீங்க. இன்று வீடியோ எடுத்து யாருக்கெல்லாம் காட்டப் போறீங்க. ஐயோ.. இதுக்குத்தானே நான் இந்த அறைக்குள்ளே வராமல் இருந்தேன். இதுக்குத்தான் நான் கல்யாணமே வேண்டாம் என்றேன்'' என்று கூறிக் கொண்டே ஓடி னாள்.

அவள் சொல்வதைக் கேட்ட அவனுக்கு, இதயம் சுக்கு நூறாக நொறுங்கியது. கண்களை இறுக மூடித் திறந்தான். இது அவனே மறந்துவிட்டான். சும்மா அவளை மிரட்டத்தான் அப்படிச் செய்தானே தவிர அது உண்மையில்லை. எங்கே கல்யாணம் வேண்டாம் என்று தன்னை விட்டுப் போய்விடுவாளோ என்று தான் அப்படிச் செய்தான். அது இன்று அவளின் மன நிலையை பாதிக்கும் என்று அவன் நினைக்கவில்லை.

வேகமாக அவளைப் பிடித்து நிறுத்தினான். ''இங்க பார் வினயா. அது மாதிரி எதுவும் இல்லை. அன்று



சும்மா தான் உன்னை பயமுறுத்தினேன். நான் இப்போ அதுமாதிரி செய்வேனா..? நீ என் மனைவி வினயா. நீ பயப்படாதே'' என்றான் மென்மையாக.

அவள் கண்களில் சந்தேகத்தோடு அவனைப் பார்த் தாள். ''ஐயோ.. அப்படி என்னை பார்வையாலேயே கொல்லாதே வினயா'' என்று இறுக அணைத்துக் கொண்டான். அவள் நெஞ்சு துடிப்பதை உணர்ந்தான். அவனிடம் இருந்து அவள் விடுபட முயற்சித்தாள். பின் மெதுவாக அவன் அணைப்பில் துவண்டாள். அவளை அப்படியே படுக்கையில் படுக்க வைத்துவிட்டு அறையை விட்டு வெளியேறினான்.

அன்று பிசினஸ் சம்பந்தமாக ஒரு பார்ட்டி இருந்தது தாஜ்ஜில். காலையிலேயே வினயாவிடம் ''இன்று மாலை ஒரு பார்ட்டி இருக்குது. அதுக்கு நாம் இரண்டு பேரும் போகணும். அதனால் நீ கிளம்பி ரெடியாக இரு'' என்றான்.

அவளும் கிளம்பி ரெடியாக இருந்தாள். ஃபேண்டா கலரில் எம்ராய்டிங் போட்டு, முந்தியில் கற்கள் பதித்து. லேசான சரிகை இழையோட, ஜமிக்கி வைத்து அழகாக இருந்தது. அதற்கு மேட்சாக பவளம் வைத்த தோடு, வளையல், நெக்லஸ் என்று செட்டாக அணிந்திருந்தாள். காதோரம் அதே கலரில் ரோஸ்.

வந்தவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அந்த பார்வை அவள் இதயத்துக்குள் நுழைந்தது. அவன் பார்வை கூர்மையாக துளைத்தது.

அவன் போய் சபாரியில் வந்தான். அந்தக் கலர் அவனுக்கு அத்தனை பொருத்தமாக இருந்தது. அவன்

படிகளில் இறங்கும் விதமே தனி அழகாக இருக்கும். அவள் பார்வையை தழைத்துக் கொண்டாள்.

## 23

''நீ ரெடியா வினயா. வா போகலாம்.'' அம்மாவிடம் போய்ட்டு வர்றோம்மா'' என்றான். வினயாவும் ''வருகிறோம் அத்தை'' என்றாள்.

இருவரையும் பார்த்த அவரே திகைத்தார். இப்படி ஒரு அழகா என்று. ''ஏம்மா தலையில் பூ வைக்கலையா..?'' என்றார்.

''இதோ வைத்திருக்கிறேன் அத்தை'' என்று ஒற்றை ரோஜாவை திருப்பிக் காட்டினாள்.

''தலை நிறைய மல்லிகைப் பூ வைக்கணும். பூ கூட இப்ப பேஷனாப் போய் விட்டது. பத்திரமா போய்ட்டு வாங்க''என்றார்.

போகும்போது பூக்கடையில் நிப்பாட்டி, இறங்கிப் போய் பூ வாங்கி வந்தான். அதை வினயாவிடம் கொடுத்து வைத்துக் கொள்ளச் சொன்னான்.

அவள் வாங்கி வைத்துக் கொண்டாள். அவனுக்கு அதை வைத்து விடணும் என்று ஆசை வந்தது. வெளியில் போகும் போது இதைச் செய்தால், அவள் மூடே மாறிப் போய்விடும் என்று பேசாமல் வந்தான்.



நௌதினுக்கு அனைவரும் தெரிந்தவர்களாக இருந்தனர். எல்லோருக்கும் அவளை அறிமுகப்படுத்தி வைத்தான். ''இப்படி ஒரு ஏஞ்சலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இப்படி ஒருத்திக்காகத்தான் கல்யாணத்தை தள்ளிப் போட்டியா..? ஜோடிப் பொருத்தம் பிரமாதம்'' என்றனர்.

வினயா சுற்றிலும் பார்வையை ஓடவிட்டாள். நௌதின் எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தான். அதை ஒரு ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். அவனை ஒட்டியே நின்றாள்.

அனைவரையும் சாப்பிட அழைத்தனர். வெஜ் நான் வெஜ் இரண்டும் இருந்தன. ''நீ என்ன சாப்பிடுறே வினயா.'' ''வெஜ்'' என்றாள் மெதுவாக.

''சரி வா'' என்று கூட்டிச் சென்றான். ''நீ இங்கு இரு. நான் போய் எடுத்து வரேன்'' என்று சென்றான்.

அவள் அங்கு நிற்கும்போது அவள் அண்ணனைப் பார்த்துவிட்டாள். அதே நேரம் அவனும் பார்த்துவிட்டு அருகில் வந்தான். ''நீ இன்னமும் உயிரோடு தான் இருக்கியா. இங்கு எதுக்காக வந்தே. என் மானத்தை வாங்கவா. இது மாதிரி பார்ட்டிகளுக்கு வந்து பெரிய... பெரிய ஆளைப் பிடிக்கவா...?'' என்று கோபமாக ஓங்கி அறைந்தான்.

அவன் அறைந்த வேகத்தில் அவள் தடுமாறி விழப் போனாள். அதைப் பார்த்த நௌதின் இரண்டெட்டில் வந்து கையில் இருந்ததை கீழே போட்டு விட்டு அவளைப் பிடித்து அணைத்துக் கொண்டான்.

கோபமாக நிமிர்ந்து ''என்ன சார் இது. இப்படி அநாக ரீகமாக நடந்து கொள்கிறீங்க. எதுக்காக இவளை இப்படி அடித்தீங்க'' என்று கையை ஓங்கினான்.

வினயா அதற்குள் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். ''வேண்டாம் தினு. அவரை அடிக்காதீங்க. விட்டுவிடுங்க. வாங்க நாம் இந்த இடத்தை விட்டுப் போகலாம்'' என்றாள். இன்னும் அவன் அணைப்பி லேயேதான் இருந்தாள். அவனைப் பார்க்க முடியாமல் அவன் மார்பிலேயே முகத்தை புதைத்துக் கொண் டாள்.

அவன் அப்படியே காருக்கு அழைத்து வந்தான். பக்கத்தில் உட்கார வைத்து விட்டு காரை வேகமாக எடுத்தான். அவள் எதுவும் பேசவில்லை. அவனும் எதுவும் கேட்கவில்லை. வீட்டிற்குப் போனதும் காரை விட்டிறங்கி வேகமாக மாடிக்குப் போய்விட்டாள். காரை அப்படியே விட்டுவிட்டு அவனும் பின்னாடியே சென் றான்.

அறைக்குள் போனவளை தன் புறம் திருப்பி, ''அவன் யார்...?'' என்றான் கோபமாக. அவன் மார்பிலே சாய்ந்து கொண்டு ''அவர் என் அண்ணன்'' என்று கதறி அழு தாள். அவன் ஒரு நிமிசம் ஆடிவிட்டான். ''அவர் உன் அண்...ண...னா'' என்றான்.

அவள் அழுகையூடே ''ஆம்'' என்றாள். அவனுக்கு எல்லாம் விளங்கிற்று. வீட்டை விட்டுப் போனவளை இன்று பார்த்ததும் கோபம் வந்துவிட்டது. அதான் அடித்து விட்டார். அவள் அழுகை நிற்கும் வரை அப்படியே



தோளில் சாய்த்திருந்தான். அவள் உச்சந்தலையில் தன் கன்னத்தை வைத்து அழுத்தினான்.

அவள் அழுகையை நிறுத்தியதும். அவளை கட்டிலில் உட்கார வைத்து தானும் அவள் அருகில் அமர்ந்தான். அவள் கையை எடுத்து தன் கைக்குள் வைத்து கொண்டு ''அவர் தான் உன் அண்ணனா'' என்றான்.

''அவர் பிசினசில் பெரிய ஆள் ஆயிற்றே'' என்றான். ''ஆமாம் என் அண்ணன் ஒரு பிசினஸ்மேன். உங் களுக்கு அவரை முன்னாடியே தெரியுமா...?''

''ம்... தெரியும். பிசினசில் நம்பர் ஒன் ஆயிற்றே. ஆனால் நீ அவர் தங்கை என்று எனக்குத் தெரியாது.''

அவள் கையை வெடுக்கென உருவிக் கொண்டாள். ''தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பீங்க. கல்யாணம் பண்ணியிருப்பீங்களா. அப்போ நான் இல்லாதவள் என்று தான் என்னை உதறிவிட்டீங்களா...'' என்று சீறி னாள்.

''இல்லை வினயா...'' என்று அவன் தொடங்கும் போதே, அவள் எழுந்து வெளியே போய்விட்டாள். அவளின் கோபம் அவனுக்குத் தெரிந்தது. தன் அண் ணனைப் பார்த்தது வேறு. அவள் இவ்வளவு பெரிய வீட்டுப் பெண்ணா. இவள் வசதி என்று தெரியும். ஆனால் இவ்வளவு வசதி என்று தெரியாது. அவள் என் வீட்டில் வேலைக்காரியாய், எவ்வளவு வேலை பார்த் தாள். தன்னைப் பற்றி இதுவரை ஒரு வார்த்தை சொல்லியதில்லையே. அவனுக்கு தன் மீதே கோபம் வந்தது.

இரவு மணி பத்தானது. கீழே இருந்து அவன் அம்மா குரல் கொடுத்தார். ''சாப்பிட வரலியா'' என்று. ''இதோ வருகிறோம் அம்மா'' என்று சொல்லிவிட்டு வினயா அறைக்கதவைத் தட்டினான். அவள் திறக்கவில்லை. கதவை திறந்து கொண்டு உள்ளே போனான்.

வினயா சேலை, நகை, பூ என ஒவ்வொன்றையும் கழட்டி தூக்கி எறிந்திருந்தாள். அறை முழுவதும் பூ, வளையல் ஒரு பக்கம் என்று சிதறிக் கிடந்தது. அவள் அப்படியே டிரஸ் கூட மாற்றாமல் கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள்.

அவனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. ''வினயா'' என்று மெதுவாக கூப்பிட்டான். அவள் அழுது கொண்டிருந்தாள். பக்கத்தில் போய் உட்கார்ந்து ''எந்திரி வினயா அழாதே. என் மேல் தான் தப்பு. இனி இது மாதிரி நடக்காது'' என்றான்.

அவளுக்கு கோபம் குமுறிக் கொண்டு வந்தது. அவன் பேசப்... பேச அழுகை அதிகமாகியது. ''வா வினயா'' என்று கெஞ்சினான். அவனுக்கே அவனைப் பற்றி ஆச்சரியமாக இருந்தது. இப்படி ஒரு பெண்ணிடம் இறங்கிப் போய் பேசுவோம் என்று.

அவள் ''எனக்கு பசிக்கலை வேண்டாம்'' என்றாள். அவன் போய் விட்டான். ஒரு டம்ளர் பாலோடு மேலே வந்தான். அவள் அதையும் குடிக்காமல் தூக்கி எறிந்தாள். அவனுக்கு கோபம் வந்தது.

''இப்ப என்ன தான் செய்யணும் என்கிறே. நடந்தது நடந்து போச்சு. இனி அதை மாற்ற முடியுமா..? நீ



இப்படியே அழுது கொண்டிருந்தால் சரியாகிவிடுமா..? எழுந்திரி வா வந்து படுத்துக் கொள்'' என்றான்.

''நான் அங்கு வரமாட்டேன். நீங்கள் போங்கள். என்னைத் தனியாக விடுங்கள்'' என்றாள். அவன் எழுந்து வெளியே போய்விட்டான். நடுவில் ஒருமுறை வந்து பார்த்தான். அப்பொழுதும் அவள் அழுது கொண்டிருந்தாள். அவனுக்கும் தூக்கம் வரவில்லை.

மறுநாள் வசந்தா ஊருக்கு கிளம்பினார். வினயா ஒரு வார்த்தை இரண்டு வார்த்தை பேசியதும் நின்று போனது. சாப்பாடும் எடுத்து வைப்பதில்லை. அவனும் பேசாமல் இருந்தான்.

அன்று வெள்ளிக்கிழமை. மாலையில் கோயிலுக்குப் போனாள். போனவள் அங்கேயே அமர்ந்துவிட்டாள். மணி எட்டாகிவிட்டது. வீட்டுக்கு கிளம்பினாள். வினயா கதவை திறந்து கொண்டு உள்ளே போகவும், பக்கத்து அறையில் இருந்து நௌதினும் ஒரு பெண்ணும் வெளியே வரவும் சரியாக இருந்தது.

அவளின் பார்வை அவர்கள் மேல் அப்படியே நிலைகுத்திப் போயின. கையில் இருந்த பூஜைக் கூடை கீழே விழுந்து உருண்டோடியது. அதிர்ச்சியில் அப்படியே சிலையாக நின்றாள். வந்தவள் கையில் பணம் கட்டாக இருந்தது. வினயாவின் பார்வை அவள் கையில் இருந்த பணத்தின் மீது போயிற்று.

நௌதின் வேகமாக வினயாவின் பக்கத்தில் வந்தான். பக்கத்தில் நின்றவளை ''நீ போ'' என்றான். அவள் போய் விட்டாள். நௌதின் வினயாவிடம் ''அவள் சும்மா வந்தாள்'' என்றான்.

## 24

''என்கிட்டே எதுவும் பேசாதீங்க. இனி என் முகத்தில் விழிக்காதீங்க'' என்று அவன் சொல்ல வருவதை கேட் காமல் தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

சாத்திய கதவையே வெறித்துக் கொண்டு சில கணம் நின்றான். அவன் முகத்தில் வேதனை படிந்தது. வெளியே சென்றுவிட்டான்.

அவளால் அறைக்குள், ஏன் இந்த வீட்டுக்குள்ளேயே இருக்க முடியவில்லை. மூச்சு அடைத்தது. 'சே.. இத் தனை நாள் எப்படியோ, ஒரு மனைவி என்று வந்து விட்டாள். அதுவும் வீட்டுக்கே கூட்டி வந்து. எவ்வளவு ஆணவம் இருக்கணும். ஆண் என்கிற திமிர். தான் எது வேண்டுமானாலும் பண்ணலாம். தன்னைக் கேட்க யார் இருக்கா என்கிற தைரியம். இனி இந்த வீட்டில் ஒரு நிமிடங்கூட இருக்கக் கூடாது' என்று கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

'அவள் மனம் இளகத் தொடங்கியிருந்த நேரம். இப்படி நடந்துவிட்டதே என்று நௌதினும் புலம்பினான். எத்தனை நாள் நான் தவித்திருப்பேன். மனம் மாறி வரமாட்டியா..? என்று எத்தனை இரவுகள் தூக்கம் இல்லாமல் நான் தவித்திருப்பேன். இப்படி ஆகிவிட் டதே.'



வினயா சுற்றும் முற்றும் பார்த்தாள். அவனைக் காண வில்லை. மெதுவாக கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து ஆட்டோவுக்கு கை நீட்டினாள். ஆட்டோ வில் ஏறி அட்ரஸ் சொன்னாள். மனம் தவித்தது. அவன் ஏற்றுக் கொள்வானா என்று. இவனை விடவா அவன் அவமானப்படுத்திவிடுவான். படுத்தினால் என்ன கூடப் பிறந்தவன்தானே என்று நினைத்தாள். என்ன நினைத்து மனதை சமாதானப்படுத்தினாலும் சமாதானம் ஆக வில்லை. பதட்டமாக இருந்தது.

ஆட்டோவை விட்டு இறங்கி கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். முன்னாடியே அவள் அண்ணன் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான். இவளைப் பார்த்ததுமே முன் வந்து ''வா வினயா'' என் றான்.

கூட இருந்தவரை ''நாளை பார்க்கலாம்'' என்று அனுப்பி வைத்தான்.

''என்னம்மா இந்த நேரத்தில் தனியாக வந்திருக்கே. மாப்பிள்ளை வரலியா. வெள்ளிக்கிழமை அதுவுமா தனியாக, அதவும் முதன்முதலா வந்திருக்கே. உள்ளே வா வினயா'' என்று அழைத்துச் சென்றான்.

அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. இது தன் அண் ணனா என்று. இப்படி மாறிவிட்டானே என்று பின் தொடர்ந்து போனாள். அவள் அண்ணி அவளை சிரித்த முகமாக வரவேற்றாள். இது அதைவிட ஆச்சரியமாக இருந்தது.

''சாரிம்மா. நான் அன்று ஹோட்டலில் அடித்திருக்கக் கூடாது. அவர்தான் உன் கணவர் என்று எனக்குத் தெரியாது. இந்த சின்ன வயதில் அவர் எத்தனை

உயர்ந்த இடத்தில் இருக்கார் தெரியுமா..? எனக்கு அவரை ரொம்ப வருடமாகத் தெரியும். நல்ல துடிப்புள்ள இளைஞன். சாதிக்க வேண்டும் என்ற வெறி அவரிடம் இருக்கும். நீ அவரைத் தான் கல்யாணம் பண்ணிக் கொண்டாய் என்று எனக்குத் தெரியாது. அன்று உன்னை அவர் அழைத்துச் சென்றதும், நான் விசாரித்துத் தெரிந்து கொண்டேன்.

''நீ என்னிடம் மறைக்காமல் நான் அவரைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று சொல்லியிருந் தால் நான் சந்தோசமாக கல்யாணம் செய்து கொடுத் திருப்பேன். எத்தனையோ பேர் என் காதுப்படவே, இவன் மடங்குவானா தன் பெண்ணைக் கொடுக்கலாமே என்று பேசிக்கொள்வார்கள்.

''எல்லோரையும் அத்தனை தைரியமாக தப்பை தப்பு என்று எதிர்த்துப் பேசுவார். நான் கூட தப்பு என்று தெரிந்தாலும் அதை தட்டிக் கேட்க முடியாது. கேட்டு விட்டு அதன்பின் நட்பாக இருப்பது கஷ்டம். அதனால் நாங்கள் எதுவும் கேட்க மாட்டோம்.''

''பழசை எல்லாம் இப்ப எதுக்காகப் பேசுறீங்க. வா வினயா வந்து உட்கார். என்ன சாப்பிடறே. மாப்பிள்ளை வரலியா..? நீ தனியாகவா வந்தே.''

''ம். தனியாகத்தான் வந்தேன். நா..ன் இங்கு இருக்க லாமா..?'' என்றாள் திணறலாக.

''வினயா என்ன இப்படிக் கேட்கிறே. இது உன் பிறந்த வீடு. நீ இங்கு இருக்க அனுமதி கேட்கணுமா...? எத்தனை நாள் வேண்டுமானாலும் நீ தாராளமா இங்கு இருக்கலாம்.''



அன்று இரவு பிசினஸ் விசயமாக அவள் அண்ணன் வெளியூர் போய்விட்டான். வினயா பேசாமல் இருந் தாள். அவள் அண்ணி கேட்டதுக்கும் சரியாக பதில் சொல்லவில்லை. அவளும் பேசாமல் இருந்துவிட்டாள். அவள் அண்ணன் வர இருபது நாள் ஆனது.

வெளியே போன நௌதின் இரவு ரொம்ப நேரம் கழித் துத்தான் வந்தான். வந்தவன் தன் அறைக்குப் போய் படுத்துவிட்டான். தூக்கம் வரவில்லை. அவள் அன்று கட்டிலுக்கடியில் படுத்திருந்தது, டூர் போயிருக்கும் போது அவளின் மென்மை, இனிமையான பேச்சு, அவ ளின் நெருக்கம், ஆகியவற்றை நினைத்து.. நினைத்து தூக்கம் வராமல் புரண்டான்.

காலையில் அவன் வேலைகளை முடித்துக் கொண்டு கீழே வந்தான். வினயாவை காணவில்லை. வேலைக் காரியிடம் ''அம்மா எங்கே'' என்றான்.

அவள் ''காலையில் இருந்து பார்க்கவில்லை'' என் றாள்.

அவன் அவள் அறைக்குள் சென்று பார்த்தான். அங்கும் இல்லை. பூஜை அறை மற்றும் உள்ள இடங் களிலும் தேடிப் பார்த்தான். எங்கும் இல்லை. அவன் உடல் பதறியது. மீண்டும் அவள் அறைக்குள் வந்து டிரஸ் எல்லாம் இருக்குதா என்று பார்த்தான். எல்லாம் அப் படியே இருந்தது. எங்கு போயிருப்பாள். அவளுக்குத் தனியாகப் போகத் தெரியாதே.

டிரைவரிடம் கேட்டான். ''அம்மாவை சீக்கிரமாக வெளியே கூட்டிப் போனியா'' என்று. அவன் ''இல்லை

யென்றான்'' யாரிடம் கேட்பது. வாட்ச்மேனிடம் கேட்ட
துக்கு அவனும் தெரியாது என்றான். அவன் வெளியே
போயிருந்த போதுதான் அவள் சென்றாள்.

அவனுக்குத் தலையை பிய்த்துக் கொள்ளலாம் போல்
இருந்தது. வியர்த்து வழிந்தது. எதுவும் தப்பான முடி
வுக்குப் போயிருப்பாளோ... எங்கு சென்றாள். ஏதா
வது கடிதம் இருக்குதா என்று பார்த்தான். எதுவும்
இல்லை.

அவனுக்குத் தெரிந்த இன்ஸ்பெக்டரிடம் ரகசியமாகச்
சொல்லி பஸ் ஸ்டாண்ட், இரயில்வே ஸ்டேசன் என்று
விசாரித்தான். எந்த தகவலும் கிடைக்கவில்லை. இப்ப
என்ன செய்வது. 'நான் தப்புப் பண்ணும் போதெல்லாம்
கூட இருந்தியே வினயா... நான் திருந்தி உன்னை
மனமார என் மனைவியாக ஏற்றுக் கொள்ள நினைக்
கும்போது, நீ என்னை விட்டுப் போய்விட்டாயே. நான்
என்ன செய்வேன். எங்கு போய் தேடுவேன்.' என்று
உடல் குலுங்க அழுதான்.

அவளின் பிரிவு இத்தனை தூரம் பாதிக்கும் என்று
அவனே நினைக்கவில்லை. அவள் இல்லாமல் வீடே
விரிச்சென்று இருந்தது. 'வினயா என்னை தவிக்க விடா
தேடா... வந்துவிடு. என்னால் உன்னைப் பிரிந்திருக்க
முடியாது' என்று கண்கலங்கினான்.

குன்னூருக்கும், முரளிக்கும் போன் பண்ணினான்.
அவர்கள் வினயா நல்லா இருக்காளா என்றனர். இவள்
அங்கும் போகவில்லை. என்று நினைத்துக் கொண்டான்.
ஆபீஸ் போனால் வேலையே ஓடவில்லை.



வினயாவோட அண்ணன் இருபது நாள் கழித்துத்தான் வந்தான். வினயா வீட்டில் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். ''இத்தனை நாள் நீ இங்கு தான் இருந்தியா'' என்றான்.

''ஆம் அண்ணா'' என்றாள். மனைவி அவனிடம் தனியாக, ''ஏதோ பிரச்சனை என்று நினைக்கிறேன். அதான் பேசாமல் இருக்கிறாள்.''

ஆபீஸ் போய் நௌதினுக்குப் போன் போட்டான். ''என்ன மாப்பிள்ளை. வினயா வந்து இருபது நாள் ஆகிறது. நீங்கள் வீட்டுக்கு வரவேயில்லையாமே. நான் வினயா வந்த அன்று வெளியூர் போய்விட்டு இன்று தான் வந்தேன். அன்று அத்தனை பேர் முன்னாடி நான் நடந்து கொண்டது தப்புத்தான். அதுக்காக என் தங்கை மீது கோபம் வேண்டாம். நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்'' என்றான்.

நௌதினுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. வினயா இருக்கிறாள் என்ற சந்தோசமே அவனுக்குப் போதும். இந்த இருபது நாள் அவன் பட்டபாடு போதும். வாழ்க்கையில் மறக்கவே முடியாது.

## 25

அவனுக்குப் பேச்சே வரவில்லை. ''வினயா எப்படி இருக்கிறாள்'' என்றான்.

''ம்.. நல்லா இருக்கா. ஆனால் அவள் கலகலப்பு, சிரிப்பு, பேச்சு எல்லாம் மிஸ்ஸிங். தனியாக உட்கார்ந்து கொண்டு கண் கலங்க ஏதாவது யோசித்து கொண் டிருக்கா. என் மேல் உள்ள கோபத்தில் என் தங்கையை கோபித்து கொள்ள வேண்டாம். வீட்டுக்கு வாங்க மாப்பிள்ளை'' என்றான் பணிவாக.

''சாயந்திரம் வருகிறேன்'' என்றான். அவனுக்கு வின யாவை உடனே பார்க்கணும் போல் இருந்தது. ஆபீசில் வேலையிருந்ததால் முடித்து விட்டுக் கிளம்பலாம் என்று மாலையில் கிளம்பினான்.

வீட்டிற்குப் போக இரவு ஏழு மணி ஆயிற்று. திடீரென நௌதின் வந்து நிற்கவும் வினயா தடுமாறிப் போனாள்.

''வாங்க'' என்று மெதுவாக கூறிவிட்டு, மாடிக்கு அவள் அறைக்குச் சென்றுவிட்டாள். வீடு பிரமாண்ட மாக இருந்தது. பணத்தின் செழுமை ஒவ்வொரு அங் குலமாகத் தெரிந்தது.

வினயாவோட அண்ணன் பலமாக வரவேற்றான். அவள் அண்ணியும் வந்து உபசரித்தாள். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, ''மேலே வினயா இருப் பாள். போய் பாருங்கள். இன்று இரவு இங்கு தான் தங்கணும்'' என்றான்.

''சரி'' என்று அவன் வினயாவைப் பார்க்க மேலே போனான். அவள் சன்னல் பக்கமாக நின்றிருந்தாள்.

''வினயா'' என்று ஆவலுடன் கூப்பிட்டான். அவள் திரும்பவில்லை. பின்புறமாகப் போய் லேசாக அணைத் தான். அவள் ''என்னை விடுங்கள். தொடாதீங்க'' என்றாள்.



அவன் ஒரடி பின்னால் நகர்ந்தான். ''வினயா'' என் றான் அதிர்ச்சியாக.

''ஏன் இப்படி என்னிடம் சொல்லாமல் வந்தே. நான் எப்படித் துடித்தேன் தெரியுமா...? இந்த இருபது நாளா...?''

''ரொம்ப நடிக்காதீங்க. உங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா? இந்த இருபது நாளா எந்தத் தொந்தரவும் இல்லாமல் தினம் ஒருத்தியா கூட்டி வந்து சந்தோசமா இருந்திருப்பீங்க. உங்களுக்குத் தொந்தரவா... இருக்கக் கூடாது என்று தானே நான் வந்துவிட்டேன். இப்போ என்ன வேண்டிக் கிடக்குது துடிப்பு... இனிமேல் என்ன இருக்குது நமக்குள்.''

''வினயா நான் சொல்வதைக் கேள். நீ நினைக்கிற மாதிரி நான் அந்தப் பொண்ணோட தப்புப் பண்ணலே. என்னை நம்பு. வா வீட்டிற்குப் போகலாம். நீ வீட்டில் இருக்கும்போது, நான் வீட்டிற்கே கூட்டி வந்து தப்பு பண்ணுவேனா... வினயா, நீ கொஞ்சங்கூட யோசிக்க மாட்டியா...?''

''என்னை ஒரு மனுஷியா நினைச்சிருந்தாத்தானே, நான் அந்த மாதிரி யோசிப்பதற்கு. ஏன் நீங்க ரொம்ப ஒழுங்கோ. தப்பு பண்ணாம இருக்க. எங்கே சொல்லுங்கள். நான் தப்பு பண்ணாதவன் என்று'' வார்த்தைகள் சாட்டை யாய்ச் சுழன்றன.

''நான் தப்புப் பண்ணாதவன் என்று உன்னிடம் சொல்ல வரவில்லை. அன்று அந்தப் பெண்ணிடம் தப்புப் பண்ணவில்லை, உன் கழுத்தில் தாலி கட்டிய

பிறகு நான் எந்தப் பெண்ணையும் தொட்டதில்லை வினயா. இது சத்தியம்'' என்றான்.

அவள் ''இதை நான் எப்படி நம்புவது'' என்றாள் ஆணித்தரமாக.

அவன் திகைத்தான். ''இதற்கு என்ன பதில் சொல்ல முடியும். என் மேல் உனக்கு நம்பிக்கையே இல்லையா வினயா...?''

''நம்பிக்கை என்ற வார்த்தையைச் சொல்வதற்குக் கூட உங்களுக்குத் தகுதியில்லை. ஒரு காலத்தில் நம்பித்தானே இந்த வீட்டை விட்டு வந்தேன். நம்ப வில்லை என்றால் வந்திருப்பேனா...?'' என்று கத்தி னாள்.

அவன் கண்களை இறுக மூடித் திறந்தான். முகம் பாறை போல் இறுகி இருந்தது.

''நமக்குள் எல்லாம் முடிந்து விட்டது. இனி நடப்ப தற்கு ஒன்றுமில்லை. என் உணர்வு, உணர்ச்சி எல்லாம் கொன்று விட்டீங்க. கொலைகாரனுக்குக் கூட மன்னிப்பு உண்டு. உங்களுக்கு இல்லை.''

அவன் இறங்கி வந்து மீண்டும் மென்மையாக ''வினயா நான் நிரூபிக்கிறேன். அந்தப் பணம் நான் எதுக்காகக் கொடுத்தேன் என்று.''

''ஏன் அவளிடம் சொல்லிக் கூட்டி வருவீங்க. இது கூடவா எனக்குத் தெரியாது'' சின்னப்பிள்ளை மாதிரி பிடிவாதமாகப் பேசுபவளிடம் என்ன சொல்லிப் புரிய வைக்க முடியும்.



''நம் பிரச்சனை உன் அண்ணனுக்குத் தெரிந்தால் நல்லாயிருக்குமா...?'' என்றான்.

''அதைப் பற்றி நானே கவலைப்படலை. வீணா நீங்க எதுக்குக் கவலைப்படணும்'' என்றாள் பட்டென்று.

அவனுக்குக் கோபம் வந்தது. ''இப்போ வரமுடியுமா...? முடியாதா...?''

''வரமுடியாது. என்ன செய்வீங்க...?''

''உன்னைத் தூக்கிக் கொண்டு போவேன்'' என்று அவளை இறுக அணைத்தான்.

அவள் திமிறினாள். ''விடுங்க என்னை. எனக்கு அரு வெறுப்பா இருக்குது. இது மாதிரி தானே அவளையும் தொட்டிருப்பீங்க'' என்றாள்.

பட்டென்று அவள் கன்னத்தில் கொடுத்தான். ''போகுது... போகுது என்று பார்த்தால் ரொம்பப் பேசுறே. இனி வாயைத் திறப்பே'' என்றான் கோபமாக.

அவள் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து மீண்டும் இளகி மென்மையாகச் சொன்னான். ''வா வினயா. நம் வீட்டுக்குப் போகலாம்.''

''என் பெயரைக்கூட இனி சொல்லாதீங்க. நான் உயிரோட இருக்கணும். சந்தோசமாக இருக்கணும் என் றால் என்னை விட்டுப் போய்விடுங்க. இனி என்னைப் பார்க்க வராதீங்க'' என்றாள்.

அவன் அவளை வெறித்துப் பார்த்தான். பின் மெதுவாக ''நீ சாக வேண்டாம். நிம்மதியாக இரு. இனி நான் இங்கு வரமாட்டேன்'' என்று போய்விட்டான்.

அவன் போன பிறகு கட்டிலில் படுத்துக் கொண்டு அழுதாள். இவளாலும் அவனைப் பிரிந்திருக்க முடியாது. இந்த இருபது நாளாக அவனைப் பார்க்காமல் இவள் தவித்த தவிப்பு கொஞ்ச நஞ்சமல்ல. 'இனி எப்படி நான் உயிரோடு இருப்பேன். இனி என்னைப் பார்க்க வரமாட்டேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டானே.

அவன் அவ்வளவு கெஞ்சியும் நான் நம்பவில்லை. அவன் அழுத்தக்காரன். சொன்னதைச் செய்வான்.' அவன் முகத்திலும் தாடி வளர்ந்திருந்தது.

ஆளே இளைத்துக் கறுத்துப் போய் இருந்தான். 'காணாமல் தவித்துப் போயிருப்பான். எங்கெங்கோ தேடினேன் என்றானே. எங்கு எல்லாம் தேடியிருப்பான்.

இது மாதிரி நான் நினைக்கலையே. பார்த்ததுமே அப்படி கட்டியணைத்தானே. துடிப்பு இல்லாமலா அப்படிச் செய்திருப்பான். தான் அப்படிப் பேசியிருக்கக் கூடாதோ. அவன் சொல்வதையும் காது கொடுத்துக் கேட்டிருக்கணுமோ' என்று நினைத்து அழுதாள்.

எப்படி அப்படிப் பேசினாள் என்று தெரியவில்லை. இத்தனை மாதமாகத் தேக்கி வைத்திருந்த ஆத்திரம், கோபம் எல்லாம் வெளியே வந்து விழுந்தன.

இப்படியே நாட்கள் ஓடின. அவர்கள் கல்யாண நாள் வந்தது. நௌதின் வினயாவுக்கு போன் பண்ணினான். அவள் பேசாமல் போனை கட் பண்ணினாள். 'இன்னும் கோபம் தீரவில்லை போல். எப்படி தீரும். தன் கணவருடன் இன்னொரு பெண்ணைப் பார்த்தாள்.'



அவன் அன்று காலையிலேயே வீட்டுக்கு வந்தான். வினயாவுக்கு டிரஸ், நகை எல்லாம் வாங்கி வந்திருந்தான். அவள் மேல் இருந்து கீழே வரவில்லை.

நௌதின் மேலே போனான். அவள் வா என்றுகூட அழைக்கவில்லை. 'என்னைப் பார்க்க வராதீங்க என்றால், வராமல் இருப்பதா. அப்படியே நான் சொல்வதைத் தவிர வேறு கேட்பதில்லை பாரு. இப்ப தனக்குக் கல்யாண நாள் என்றதும் தூக்கிக் கொண்டு வந்தாயிற்று. ஒரு புடவையை. யாருக்கு வேண்டும் உங்க புடவை' என்று மனதில் கறுவினாள்.

''வினயா...'' என்றான் ஆழ்ந்த குரலில்.

அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

''வினயா நான் தான் தப்பு பண்ணினேன் என்று, நீயும் கீழிறங்கலாமா...? என்னை தண்டிப்பதாக நினைத்து, நீ உன்னைத் தாழ்த்திக் கொள்ளாதே. இன்று நம் கல்யாண நாள். வா இந்தப் புடவையைக் கட்டிக் கொண்டு வா கோயிலுக்குப் போய்ட்டு வரலாம்.''

புடவையை வாங்கி விசிறி எறிந்தாள் அவன் முகத்தில். ''எதுக்கு எனக்குப் புடவை எடுத்துக் கொடுக்கிறீங்க. அவளுக்குக் கொடுப்பது தானே'' என்றாள். குரலில் கடுமையைக் காட்டி.

''ரொம்பப் பேசுறே வினயா. நல்ல நாள் அதுவுமா பிரச்சனை பண்ணக்கூடாது என்று நினைக்கிறேன். ஒழுங்கா வா... கோயிலுக்குப் போகலாம்.''

''நான் வரமாட்டேன். நீங்கள் போகலாம்'' என்றாள் கெத்தாக.

''நாம் எல்லோரும் போலவா... கல்யாணம் பண்ணிக் கொண்டோம். கல்யாண நாள் கொண்டாட. இதை நினைக்கவே எனக்கு அசிங்கமா இருக்குது. நமக்கு இதுவா கல்யாண நாள். எதை கல்யாண நாளா கொண்டாடுவது என்று முடிவெடுங்கள்.''

அவன் உதட்டை இறுக கடித்துக் கொண்டு பேசாமல் இறுகி நின்றான்.

## 26

''இது என் வீடு. இனிமே இங்கு வராதீங்க'' என்றாள் மிடுக்காக.

அவன் எதுவும் பேசாமல் சென்று விட்டான். அவன் போனதும் அந்தச் சேலை, நகை எல்லாம் எடுத்துப் பார்த்தாள். அந்தக் கலர் அவளுக்கு ரொம்பப் பிடித்த கலர். எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு அழுதாள்.

இத்தனை நாள் அவன் வரவில்லையே என்று அழுதாள். கல்யாண நாள் வருகிறதே, வந்து கடைக்குக் கூட்டிப் போனானா...? என்று அழுதாள். இப்போ வந்து கூப்பிட்டும் போகாமல், அவன் கூடப் போகவில்லையே



என்று அழுதாள். அவன் இல்லையென்றால் அவன் நினைப்பாகவே இருப்பதும், அவன் வந்தால், அவனைப் பேசுவதும், அவளுக்கே இது வெறுப்பாக இருந்தது. இப்படியே எவ்வளவு நாள் இருப்பது. அவனை விட்டு நிரந்தரமாக இருக்க முடியுமா...? அது அவளால் முடியாது. இத்தனை மாதங்களில் மனம் கொஞ்சம் இளகினாலும் அவன் செய்ததைப் பிடிவாதமாக நினைவிற்குக் கொண்டு, அவனை வெறுப்பது மாதிரி நடப்பாள்.

நௌதின் குன்னூர் சென்றிருந்தான். அவனும் இத்தனை மாதமாக அங்கு செல்லவில்லை. சென்றால் வினயா எங்கே என்ற கேள்வி வரும். என்ன பதில் சொல்ல முடியும். ஆனால் எவ்வளவு நாள் தள்ளிப்போட முடியும்.

''வினயா வரவில்லையா'' என்றதுக்கு ''அவள் வரவில்லை'' என்றான்.

''ஏன்டா வரவில்லை. அவளைத் தனியாக விட்டுட்டு நீ எதுக்கு வந்தே?''

''என்னம்மா இது. நான் உடனே ஊருக்குப் போகணும். அவளைக் கூட்டி வந்தால் உடனே கிளம்ப முடியாது. அதனால் தான். நான் நாளை கிளம்பிவிடுவேன். வேலைக்காரி துணையிருப்பா...'' என்றான்.

அவன் அப்பா அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

காலையில் ஜாகிங் போய் வந்து கொண்டிருந்தான். மழை பெய்ததில் ரோடு எல்லாம் வழுக்கியது. வேக

மாக ஓடியதில் கால் ஸ்லிப்பாகி சரிவில் உருண்டான். பாதி உருண்டதும் பக்கத்தில் இருந்த மரத்தைப் பற்றி பின் நிதானித்து மெதுவாக எழுந்து நின்றான். நிற்க முடியவில்லை. வலது கணுக்கால் வீங்கிவிட்டது.

மெதுவாக நடந்து வீட்டுக்குப் போய்விடலாம் என்று ஒரு அடி எடுத்து வைத்தான். வலி தாங்க முடியவில்லை. எப்படி நடந்து வீட்டுக்குப் போவது. யாராவது வரு கிறார்களா என்று பார்த்தான். சிறிது நேரத்திலேயே அவர்கள் எஸ்டேட்டில் வேலை பார்க்கும் ரங்கன் டூவீலரில் சென்று கொண்டிருந்தான். இங்கிருந்தே குரல் கொடுத்தான்.

அவன் குரல் கேட்டு வண்டியை நிறுத்திவிட்டு, குரல் வந்த திசையை நோக்கிக் குனிந்து பார்த்தான். கூப் பிடுவது சின்ன முதலாளி என்றதும் சரிவில் இறங்கிச் சென்று ''என்னங்கையா'' என்றான்.

''ரங்கா எனக்கு கால் சுளுக்கிவிட்டது. அதனால் உன் வண்டியில் வைத்து என் வீட்டில் இறக்கிவிட்டுவிடு'' என்றான்.

''சரிங்கையா'' என்று நௌதினை அழைத்துக்கொண்டு மேலே மெல்ல ஏறி வந்து வண்டியில் வைத்து வீட்டில் கொண்டு விட்டு வந்தான்.

வெளியே உட்கார்ந்து கொண்டு ''அம்மா'' என்று கூப்பிட்டான்.

அவர் வந்து பார்த்துவிட்டுப் பதறி ''என்னடா இது கால் இப்படி வீங்கி இருக்குது கீழே விழுந்துட்டியா...?''



''ஆமாம்மா கால் ஸ்லிப்பாகி விட்டது. வெறும் சுளுக் குத்தான். அப்பாவைக் கூப்பிடும்மா. ஆஸ்பத்திரிக்குப் போகணும்.''

அவர் வந்து காரை எடுத்து மகனை கைத்தாங்கலாகக் கூட்டி வந்து காரில் உட்கார வைத்தார். வலியை உதட்டைக் கடித்துப் பொறுத்துக் கொண்டான். ''ரொம்ப வலிக்குதா நௌதின்.''

''ஆமாம் அப்பா. வலி தாங்க முடியவில்லை.''

எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்துவிட்டு ''எலும்பு லேசா விலகி இருக்குது. இங்கு ஒரு வாரம் தங்கணும்'' என் றார்.

டாக்டர் நௌதினோட பிரண்ட். ''ஏன்டா உனக்கு எத்தனை நாளா இப்படி ஒரு ஆசை. என்னை உன் ஆஸ்பத்திரியில் படுக்க வைக்க.''

''நாம் இரண்டு பேரும் மனம் விட்டுப் பேசி எத்தனை வருடம் ஆகிவிட்டது. ஒரு வாரம் இங்கு இரு. நானும் என் வேலையை முடித்துவிட்டுப் பேசிக் கொண்டு இருக்கலாம்.''

''ஆமாடா. நீ மட்டும் உன் வேலையைப் பார்த்து வசூல் பண்ணு. நான் உன்கிட்டே பணத்தையும் கொடுத்து விட்டு சும்மா படுத்திருக்கேன்.''

''எதுக்கு சும்மா படுத்திருக்கே. உன் மனைவியை யும் வரச் சொல்ல வேண்டியதுதானே'' என்று கண் ணடித்தான். ''அதான் உனக்கு தனி அறை கொடுத்திருக் கேன்.''

நௌதின் சிரித்துக் கொண்டான். ''அவள் சென்னையில் இருக்கா.''

நௌதினுக்குக் கட்டுப் போட்டு படுக்க வைத்தனர்.

செல்வராஜ் வினயாவுக்கு போன் பண்ணிச் சொன்னார். அவள் அங்கேயே அழுது உடனே கிளம்ப வேண்டும் என்று காரில் கிளம்பினாள். கூடவே அவள் அண்ணனும் அண்ணியும் வந்தனர்.

இரவு ஆகிவிட்டது. அதனால் காலையில் போகலாம் என்றனர். வினயா தவித்துப் போனாள். ''எப்படி விழுந்தார். எலும்பு முறிந்து விட்டதா'' என்று கேட்டாள்.

காலையில் எழுந்ததும் போகணும் என்று கிளம்பி விட்டாள். வேகமாகப் போனவள் நௌதின் காலில் கட்டுடன் இருப்பதைப் பார்த்துக் கதறி விட்டாள்.

நௌதின் அப்போதுதான் விழித்தான். இவள் அழுவதைப் பார்த்து, ''வினு.. என்ன இது. எனக்கு ஒன்றுமில்லை. அழாதே. இது ஆஸ்பத்திரி'' என்று சமாதானம் சொன்னான். அவள் அழுகையை நிறுத்தவேயில்லை. அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு அழுதாள்.

அவன் அவள் தலையைத் தடவி ''அழாதே வினு'' என்றான்.

அவள் அண்ணி, அண்ணன் அவனை விசாரித்தனர். ஒரு நர்ஸ் வந்து டாக்டர் வருகிறார் என்று சொல்லி விட்டுப் போனார்கள். வெளியே இருந்தனர். வினயா மட்டும் உள்ளே இருந்தாள்.



''ரொம்ப வலிக்குதாங்க'' என்றாள்.

''இல்லை வினு. லேசாகத்தான் வலிக்குது.''

டாக்டர் அப்பொழுது உள்ளே வந்தார். ''அடப்பாவி நேற்றெல்லாம் வலி தாங்க முடியவில்லை என்றாய். இப்போ உன் மனைவியைப் பார்த்ததும் வலி இல்லையென்கிறாய். இது உனக்கே நல்லாயிருக்கா...''

''டாக்டர் எலும்பு முறிந்து விட்டதா'' என்றாள்.

நௌதின் அவசரமாக ''வெறும் சுளுக்குத்தான் வினு. இரண்டு நாளில் சரியாகிவிடும்.''

''இங்கே நீ டாக்டரா... இல்லை நான் டாக்டரா... என்னைக் கேள்வி கேட்டா நீ பதில் சொல்றே. பேசாம என் வீட்டுக்கு வந்துவிடு நௌதின். என் மனைவி கேட்கும் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை.''

நௌதினும், வினயாவும் சிரித்தனர்.

''என்ன சிஸ்டர். ஆஸ்பத்திரியை ஒரே அமர்க்களம் பண்ணி விட்டீங்க. இப்படி அழுகுறீங்க. அவனுக்கு ஒன்றுமில்லை. நல்லா ரெஸ்ட் எடுத்துவிட்டு, இன்னும் ஒரு வாரம் இருந்துவிட்டு வரட்டும். நீங்க ஃப்ரீயாக இருங்க'' என்றான்.

அவன் சொன்னதைக் கவனிக்காமல் ''இன்னும் ஒரு வாரமா...? ஏன் டாக்டர் நாளைக்கே அனுப்பி விடுங்களேன்'' என்றாள்.

''நானாம்மா... மாட்டேன் என்கிறேன். அவன் நடக்க வேண்டும் அல்லவா. கால் இப்படி இருக்கும்போது நடக்கக்கூடாது. அதனால்தான்.''

டாக்டர் போனதும் ''நீ எப்படி வந்தே வினயா. உனக்கு யார் சொன்னது...?''

''ம்... பறந்து வந்தேன்...'' என்றாள் வெடுக்கென்று.

அவன் முகம் வாடவும், பின் மென்மையாக ''மாமா தான் சொன்னார். கேட்டதும் உடனே புறப்பட்டு வந் தோம்.''

''ஏன் வினயா...?''

''இதென்ன கேள்வி...?''

''நீ தானே என் மூஞ்சியிலேயே முழிக்காதீங்க'' என் றாய்.

''இப்ப எதுக்கு இந்தப் பேச்சு. அதைப் பிறகு பேச லாம்.''

''நீ இப்ப ஊருக்குப் போய்விடுவாயா...?''

''இல்லை. உங்களுக்குக் குணமாகும் வரை இங்கு இருப்பேன்.''

''அதுக்கப்புறம்...?''

''...............''

''நீ ஊருக்குப் போவதென்றால் இப்பவே போய் விடு வினயா. என்னைப் பார்த்துக் கொள்ள ஆள் இருக் குது.''



அவள் எதுவும் பேசாமல் எழுந்து வெளியே போனாள்.

வினயாவோட அண்ணனும், அண்ணியும் ''ஊருக்குப் போய்விட்டு வருகிறோம் என்று சொல்லிவிட்டுக் கிளம் பினர்.

வினயா நெளதினுக்கு டிபன் கொடுத்தாள். மாத் திரை எடுத்துக் கொடுத்துவிட்டுப் பக்கத்தில் அமர்ந் தாள்.

''நீ வீட்டுக்குப் போய்விட்டு சாயந்திரம் வா வினயா. நான் தூங்கினால் உனக்கு போர் அடிக்கும். தனியாக வேறு இருப்பாய்.''

''பரவாயில்லை தூங்குங்கள். நான் புக் படித்துக் கொண்டு இருக்கிறேன்'' அவள் கையை மென்மை யாகப் பற்றிக் கொண்டு தூங்கிப் போனான்.

மதிய சாப்பாடு டிரைவர் கொண்டு வந்தான்.

இரண்டு பேரும் சாப்பிட்டு விட்டுப் பேசிக் கொண் டிருந்தனர். வினயாவுக்குத் தூக்கம் வந்தது. ''எனக்குத் தூக்கம் வருதுங்க. நான் கீழே படுத்துக்கட்டுமா...?''

''இல்லை. இப்படிக் கட்டிலிலேயே படு'' என்று கொஞ்சம் தள்ளிப் படுத்தான். அவளும் படுத்து நன்றாக உறங்கிப் போனாள்.

மாலை டாக்டர் ரவுண்ட்ஸ் வந்தார். இருவரும் தூங்கிக் கொண்டு இருந்தனர். டாக்டர் போய்விட்டார். ஒரு வாரம் இப்படியே சென்றது. கட்டுப் பிரித்து வீட்டுக்கு வந்தனர். கால் சரியாகி விட்டது.

''நான் நாளைக்கு ஊருக்குக் கிளம்பலாம் என்று இருக்கேன்ப்பா'' என்றான்.

''இன்னும் ஒரு வாரம் இருந்து ரெஸ்ட் எடுக்கலாமே'' என்றார்.

''இல்லப்பா. ஆபீஸ் போகணும்.''

''சரி கிளம்புப்பா.''

இரவில் வினயாவிடம் ''நான் ஊருக்குப் போகிறேன். நீ வருகிறாயா...?'' என்றான்.

''சரி வருகிறேன்'' என்றாள்.

## 27

சென்னை சென்றதும் ''நீ உன் அண்ணன் வீட்டுக் குப் போறியா...?'' என்றான்.

''இல்லை. நான் அங்கு வருகிறேன்'' என்றாள் மெது வாக.

காரை வீட்டிற்கு விட்டான்.

இரவு வினயா குளித்துவிட்டுப் பால் எடுத்துக் கொண்டு அறைக்குப் போனாள்.

அவன் பால்கனியில் இருந்து தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.



இவள் கொலுசுச் சத்தம் கேட்கவும் திரும்பிப் பார்த் தான். வினயாவைப் பார்த்துவிட்டு உள்ளே வந்து கதவுக்கருகில் நின்று கொண்டு இரண்டு கைகளையும் விரித்தான். அவள் வந்து அவனிடம் அடைக்கலம் ஆனாள்.

அவளை இறுகத் தழுவிக் கொண்டான். அவள் நெற்றி, கண், உதடு, கழுத்து என்று முத்தம் கொடுத் தான். அவள் கிறங்கிப் போனாள்.

அவளை அப்படியே கூட்டி வந்து ''உனக்கு என் மீது உள்ள கோபம் போய்விட்டதா...?'' என்றான். பிறகு அவனே ''எப்படிப் போகும் நானே சொல்கிறேன்.

''அன்று வந்த பெண் ஒரு அனாதை ஆசிரமத்தில் இருந்து வந்தாள். நான் வருடா வருடம் டொனேசன் கொடுப்பேன். இந்த வருடம் இருந்த டென்சனில் நான் மறந்துவிட்டேன். ஆசிரமத் தலைவி எனக்கு போன் பண்ணினாங்க.

''நான் அங்கு வர முடியாது. யாரையாவது அனுப்பி வைங்க என்றேன்.

''சரி நான் இங்குள்ள ஒரு பெண்ணை அனுப்பி வைக்கிறேன் என்றார்.

''சரி அனுப்பி வைங்க என்று, அவள் வந்ததும் வீட்டிற்கு வந்து பணத்தை எடுத்துக் கொடுத்தேன். அதை வாங்கிக் கொண்டு வெளியில் வரும்போது தான் நீ பார்த்தது. இதுதான் நடந்தது.

"உன்னைக் காணவில்லை என்றதும் எப்படித் துடித்தேன் தெரியுமாடா...?" என்று உடல் நடுங்க இறுக அணைத்தான்.

"அன்று மட்டும் ஏன் என்னை அப்படி விரட்டு னீங்க...?"

ஒரு கணம் உடம்பு இறுகியது. மறு நிமிடமே "நான் உண்மையைச் சொல்கிறேன் வினு. அன்று உண்மை யிலேயே உன்னை நான் விரும்பவில்லை. என் பிரண்ட்ஸ் சொன்னதால்தான் அன்று அப்படி நடந்தது. நீ இத்தனை உண்மையா, அன்பா என்னை விரும்புகிறாய் என்று நினைக்கவில்லை.

"நான் பெண்களை மதிப்பதில்லை. அவர்கள் அன்பு பணத்துக்காகத்தான் என்று நினைத்தேன். நா...ன் பழ...கிய சில பெண்கள் அப்படித்தான். அதான் உன்னைப் புரிந்து கொள்ளாமல் அவர்களைப் போல உன்னையும் நினைத்து விட்டேன். சாரிடா கண்மணி."

"அந்த மாதிரி நினைத்த நீங்க, எதுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டீங்க...?"

"நீ போனதும் உன்னை மறந்து விட்டேன் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் என்னையறி யாமலேயே என் மனதில் இருந்திருக்காய் என்று எனக்குத் தெரியவில்லை. நம் வீட்டில் முதல் முதலா உன்னைப் பார்த்ததும் ஷாக்காக இருந்தது. மனதிலும் ஒரு சந் தோசம். காரணம் தெரியவில்லை.



"எனக்குப் பெண் பார்த்துவிட்டு வந்த மறுவாரம் அப்பா கேட்டார். நம் இரண்டு பேர் பற்றியும். நான் ஆடிப் போய் விட்டேன். நீ சொல்லியிருப்பாய் என்று நினைத்தேன். நீயும் சொல்லவில்லை.

"நீ ட்ரெயினில் மாத்திரையைப் போட்டுவிட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தார்களாமே. அன்று உன் கைப் பையில் என் போட்டோ இருந்ததாம். ஏதோ பிரச்சனை என்னால் தான் என்று நினைத்து உன்னை இங்கு கூட்டி வந்தார்களாம். நீ மாத்திரை சாப்பிட்டாய் என்றதுமே எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அப்பொழுதுதான் முடிவெடுத்தேன். உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்று."

"நீங்க அந்த போட்டோ..."

"நீ கல்யாணத்துக்கு மறுப்பாய் என்று எனக்குத் தெரியும். சும்மா உன்னை மிரட்டத்தான் அப்படிப் பண் ணினேன்."

"அப்புறம் ஏன் கல்யாணத்தன்று இரவு நீங்க வெளியே போய் படுத்தீங்க...?"

அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தான். "இந்தக் கேள் வியை நீ கேட்கலாமா...? நான் அப்படியே அங்கிருந் தாலும் உன் மனதார என் மனைவியா நீ நடந்திருப் பியா...? மனம் இல்லாத இடத்தில் ஏன் இருக்க வேண் டும்...?"

"இனிமேல் நீங்க இங்கே இருக்கலாம்" என்று படுக் கையைப் பார்த்தாள்.

''என் அன்பு தேவதையே. உன் அன்பை இத்தனை நாள் புரிந்து கொள்ளாததற்கு என்னை மன்னிப்பா யாடா...'' என்று முகத்தோடு முகம் வைத்து உரசினான். அது இருவருக்குமே அவஸ்தையைத் தர விளக்கை அணைத்தனர். அவளையும் கூடத்தான்.